20

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ

# ஆறுமுகநாவலர் சரித்திரம்

சிவகாசி அருணாசலக் கவிராயர்

பத்தியரூபமாக இயற்றியது




யாழ்ப்பாணம்
கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்

உ

நாயனுர் நாற்குரவர் நாவலர் தேன் ஞாலமுய்ய
மேயினு ரீசனருள் மேல்.

சி. வை. தா.

கௌரவ. செ. சுந்தரம்பிள்ளை
01.01.91

யா. கூ. த. நூ. ப. வி. கழகம் வெளியீடு. 20.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

யாழ்ப்பாணத்து நல்லூர்

# ஆறுமுகநாவலர் சரித்திரம்

சிவகாசி அருணாசலக் கவிராயர்

பத்தியரூபமாக இயற்றியது

வெளியீடு :

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1 (693), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பதிப்பு (கழகம்) : 1973
விலை ரூபா: 3-00

சர்வதேச புத்தக ஆண்டு

**International Book Year**

*J. C. T. B. P. S. S. Publication No. 20*

# ARUMUGA NAVALAR CHARITHIRAM

( Verse )

*by*

**Arunachala Kavirayar**

Published by

THE JAFFNA CO-OPERATIVE TAMIL BOOKS PUBLICATION AND SALES SOCIETY LTD.

(*Regd. No, J*/1538 *of* 10-11-67)

411/1 (693), K. K. S., ROAD, JAFFNA.

# பதிப்புரை

என்னைநன் றுகவிறைவன் படைத்தனன்
தன்னைநன் றுகத் தமிழ்செய்யு மாறே — திருமூலர்.

திருப்பெருந்திரு ஆறுமுகநாவலர் பெருமானின் இவ் வரலாற்றுச் செய்யுள் நூலை வெளியிடுவதற்கு எம் மனத்தில் உண்டான காரணங்கள் பலவாகும்.

நாவலர் பெருமான் தாம் பிறந்த நாடாகிய யாழ்ப் பாணத்திலே கிறித்த திருச்சபைகளின் பேராபத்திலிருந்து சைவத்தைக் காப்பாற்றப் பெரும்போர் தொடுத்தார்.

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே எமது தாய் நாடாகிய தெய்வத் தமிழ் நாட்டிலே சைவநீதியைக் காப் பாற்ற நம்மவரோடேயே மாறு கொண்டு பெரும் போர் நிகழ்த்தி வெற்றியுங் கண்டார்.

ஈழத்திலும் தாய் நாட்டிலும் சைவம் தழைக்கவும் தமிழ் வளரவும் நாவலர் பெருமான் செய்த பணிகள் எல்லாம் மிக உந்நதமானவை.

நாவலர் பெருமானின் பருவுடல் மறைந்த அண்மைக் காலத்திலேயே அவரது வரலாறு வசன நடையிலும், பின்பு செய்யுணடையிலும் வெளிவந்தது. காலப் போக்கில், அவர் வரலாற்றை ஆராயும் பல நூல்களும் வெளிவந்தன. எனினும் பெருமானின் பெருமைக்கும் அருமைக்கும் ஊறு செய்து அவர்தம் பணிகளை மறைக்கவும் மறுக்கவும் திரிக்கவும் சென்ற நாற்பது ஆண்டுகளிற் பலர் முயன்று வந்துள்ளனர்.

இம்முயற்சிகளுக்கு அத்திவாரமிட்டவர் 'மீனுட்சி சுந் தரம்பிள்ளை சரித்திர' ஆசிரியர்; முடிசூட்ட முயன்றவர் ''வள்ளலாரின் ஒருமைப்பாட்''டாசிரியர். 1968 ஆம் ஆண் டிற் சென்னையில் நடந்த அனைத்துலகுத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது நாவலர் பெருமானுக்குச் சிலை எடுக்கத் தவறியது இவற்றின் விளைவுகளில் ஒன்றாகும்.

நாவலர் பெருமானின் வரலாற்றைச் செம்மையாக ஈழ நாட்டவரும், சிறப்பாகத் தமிழ்த்தாய்த் திருநாட்டுச் சான்றோரும் அறியும் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

பெருமானின் வரலாற்றை மீனுட்சி சுந்தரம்பிள்ளை, இராமலிங்கபிள்ளை முதலியவர்களின் தொடர்புகளைப் பின்னணியாகக் கொண்டு ஆராய்கின்றன, எம் மதிப்பிற்குரிய பண்டிதமணியவர்களின் இரண்டாம் பதிப்பு, மூன்றும் பதிப்பு முன்னுரைகள். பண்டிதமணி அண்மையில் எழுதி வெளியிட்ட ''**நாவலர்**'' என்னும் நூல் இரண்டாம் பதிப்பு முன்னுரையின் விரிவாகும்; அது கனகரத்தின உபாத்தியாயரின் நாவலர்சரித்திரத்துக்கு முன்னுரையாய் அமைந்தது.

இவையெல்லாம் பண்டிதமணியவர்களின் நுண்மாண் நுழை புலத்தையும், காய்தல் உவத்தல் இன்றி நடுநின்று வரலாற்றை ஆய்ந்து உண்மையை நிலைநாட்டும் துணிவையும் கொண்டுள்ளன.

இப்பதிப்பிலே பண்டிதமணியவர்கள் பல திருத்தங்களைச் செய்துதவியுள்ளார்கள். செய்யுள்கள் சீர் பிரிக்கப்பட்டுள்ளன. இடையிடையே ஏற்ற தலைப்புக்களும் தரப்பட்டுள்ளன. இவற்றுல் வாசகர்கள் பெரும் பயனை எய்துவர்.

இங்ஙனம் இப்பதிப்புப் பல வழிகளிலும் சிறப்பெய்தி வெளிவரவுதவிய அன்னுருக்கு எங்ஙனம் நன்றி பாராட்டினும் அமையாது.

நாவலர் பெருமானுக்கு வழங்கும் அன்புக் காணிக்கைகளில் இவ்வெளியீட்டையும் ஒன்றுக வைத்து வணங்குகின்றேம்.

**யா. கூ. த. நா. ப. வி. கழகம்.**

*411/1 (693), காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*கார்த்திகை மகம்,*
*15-12-1973.*

# மூன்றும்பதிப்பு முகவுரை

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

எழுதியுதவியது

**விசேட பிரயாணம் :**

சிதம்பரத்திலே ஒரு சைவ வித்தியாசாலை தாபிக்கும் பொருட்டு, 1864 ஆம் ஆண்டில் ஆறுமுகநாவலர் இங்கே யிருந்து புறப்பட்டு, அங்கே ஆறு வருடத்துக்கு மேலே தங்கி 1870 ஆம் ஆண்டில் மீண்டு வந்த பிரயாண வைபவம், ஒரு திருவுலாப் பிரபந்தமாக வருணிக்கத்தக்கது.

**விசேட உபசாரங்கள் :**

1864 ஆம் ஆண்டு தையில் அர்த்தோதய புண்ணிய காலம் வந்தது. அதனாலே பிரயாணம் சேது ஸ்நானத்தில் தொடங்கியது. இதனை அறிந்த சேது சமஸ்தானாதிபதி பொன்னுச்சாமித்தேவர், நாவலர் அவர்களைத் தமது சமஸ்தானத்துக்கு இரந்து அழைத்து எந்த வித்துவானுக்கும் செய்தறியாத உபசாரங்கள் செய்து வழியனுப்பி வைத்தார்.

மதுரை திருவண்ணாமலை ஆதீனங்கள் பேருபசாரங்கள் செய்தன. திருவண்ணாமலை ஆதீனம் மிக்க வரிசைகளுடன் பல்லக்கிற் பட்டணப்பிரவேசமுஞ்செய்வித்தது. இது ஆதீன சம்பிரதாயத்துக்கு அப்பாற்பட்டது.

**விசேட சந்திப்பு :**

நாவலர் வருகையை அறிந்த திருவாவடுதுறையாதீனம், ஆதீன மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை ஓதுவார்களுடன் கும்பகோணத்துக்கு அனுப்பி, அங்கே எதிர்கொண்டு ஆதீனத்துக்கு அழைத்து வரச் செய்தது. *

தமிழ் வசனத் தந்தையும் சைவசமய சாதகருமான நாவலரை, அபர கம்பராய்க் கவிமழை பொழிகின்ற

*இப்புத்தகத்தில் 236, 237, 238 ஆம் செய்யுள் பார்க்க.

பிள்ளை எதிர் கொண்டது ஒரு முக்கிய சம்பவம். கும்பகோணத்தில், நாவலர்-பிள்ளை-சந்திப்புச் சரித்திர சிகரம்.

700 பக்கங் கொண்ட விரிந்த மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், நாவலர் பிள்ளை இருவரின் கும்பகோணச் சந்திப்பையோ வேறு சந்திப்பையோ விலகி, இருவரையுஞ் சந்திக்கச் செய்யாமல் நடப்பது விநோதமானது; மிக்க வருத்தந்தருவது.

அப்பர் சுவாமிகள் சம்பந்தப்பிள்ளை ஆகிய இருவர் சந்திப்பையும் விலகி ஒரு புராண சரித்திரம் நடக்குமாயின் அதனை என்ன என்பது!

* * * *

தோத்திரப் பாயிரம் :

மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் பிள்ளையின் தலைமாணுக்கரான தியாகராசச் செட்டியாரும் நாவலர்பாற் பெருமதிப்புடையர்கள். பொன்னுச்சாமித் தேவர் வேண்டுகோளின்படி, 1860இலும் 1861இலும் நாவலர் பதித்த திருக்கோவையார் உரை, திருக்குறள் உரை, தருக்கசங்கிரக உரை ஆகிய மூன்றுக்கும் சிறப்புப்பாயிரம் செய்ய வாய்த்ததைப் பிள்ளையும் செட்டியாரும் பெரும் பாக்கியமாகவே கொண்டவர்கள்.

அவர்கள் செய்த பாயிரத்தில் நாவலரைப்பற்றிய பகுதிகளைத் தோத்திரங்கள் என்றே சொல்ல வேண்டும்.

*'கற்றுணர் புலவருட் களிக்கும்*
*முற்றுணர் ஆறுமுக நாவலனே.'*

என்கின்றார் பிள்ளை.

*'என்னுளங் குடிகொண் டிருக்கும்*
*முன்னுசீ ராறு முகநாவலனே.'*

என்கின்றார் செட்டியார்.

பட்டம் பெற்ற காலங்கள்:

மீனாட்சிசுந்தரம்பிள்ளை நாவலருக்கு ஏழாண்டு மூத்தவர்; 1860 ஆம் ஆண்டுக்கு அண்மையிலேதான் திருவாவடுதுறை ஆதீனத்து மாகவித்துவான் ஆனவர். இளை

யவரான நாவலருக்கு 1849ஆம் ஆண்டில் திருவாவடு துறை ஆதீனம் பட்டம் வழங்கிப் பேருபசாரஞ் செய்தது. அப்பொழுது மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்றொருவரை ஆதீனம் அறியாது.

**இராமசாமிப் பிள்ளை:**

1860 ஆம் ஆண்டு தொடக்கம் ஆதீனத்தில் பிள்ளையிடம் படித்த மாணவர் மூவர். இம்மூவரும் நாவலர் 1864 இல் சிதம்பரத்தில் வித்தியாசாலை தாபித்தபின் நாவலருக்கு மாணவராய் விட்டார்கள். அவர்களில் ஒருவர் இராமசாமிப் பிள்ளை என்பவர். இவர் இராமநாதபுர சமஸ்தானத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றவர். 1864க்கு முன் இராமசாமிப்பிள்ளையை நாவலர் அறியார்.

**சந்திக்குமுன் சந்திக்கச் செய்தது:**

மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், 1860 இல் இராமசாமிப்பிள்ளையையும் நாவலரையும் சந்திக்க வைத்து, இராமநாதபுர சமஸ்தானத்தில் செல்வாக்கு மிக்க இராமசாமிப்பிள்ளையைப் பயன்படுத்தி, இராமசாமிப்பிள்ளையின் சூழ்ச்சியால் நாவலர் நல்ல சிறப்புப்பாயிரங்களைப் பெற்றுக்கொண்டார் என்கின்றது.

இராமசாமிப்பிள்ளையை 1860 இல் நாவலர் பயன்படுத்தினாரென்பது, பெற்றோரின் விவாக வைபவத்தைப் புத்திரன் நடத்தி வைத்தான் என்பது போன்றது.

**காலதாமதம் :**

மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களின் மறைவுகாலம் 1876ஆம் ஆண்டு. பிள்ளைக்கு எழுந்த சரித்திரம் சென்ற நூற்றாண்டு கழிந்து, இந்த நூற்றாண்டிலும் சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் மறைந்த 1922 ஆம் ஆண்டிலாதல் வெளிவரலாமென அதன் வருகை எதிர்பார்க்கப்பட்டது. 1934 ஆம் ஆண்டில்

சுவாமிநாத பண்டிதரும் மறைந்த பிறகுதான் பிள்ளையின் சரித்திரம் வெளிவந்தது. *

### நூலாசிரியர் தகைமை :

செய்யுள் வடிவான இந்த ஆறுமுகநாவலர் சரித்திரம் சிவகாசி அருணாசலக் கவிராயராற் பாடப்பட்டது; 1898 ல் வெளிவந்தது. கவிராயர் திருவாவடுதுறையாதீனத்தில் இரண்டாம் பட்டமாயிருந்த நமசிவாய தேசிகரின் மாணவர். தேசிகர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடம் ஆதீனத்தில் தொடக்ககாலத்திற் படித்த மூவருள் ஒருவர்; பின் நாவலரிடம் படித்தவர்.

### பதிப்பு நோக்கம் :

கவிராயர் பாடிய இச் சரித்திரம் 1882 இல் கனகரத்தினம் பிள்ளை என்பவர் எழுதி வெளியிட்ட ஆறுமுக நாவலர் சரித்திரத்தைப் பெரிதுந் தழுவியது. இதன் இரண்டாம் பதிப்பு 1934 இல் வெளிவந்தது. அப்பதிப்பின் நோக்கம் அவ்வாண்டில் வெளிவந்த மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரத்தின் போக்கை வெளிப்படுத்துவதேயாம்.

### ஒரு பாதி :

இத்துணையும் 1864 ஆம் ஆண்டில் நாவலர் நிகழ்த்திய பிரயாணத்தின் பூர்வகாண்டம்; பூர்வமேகம் எனினும் அமையும்.

### மற்றைப் பாதி :

பிரயாணத்தின் உத்தரகாண்டமான உத்தரமேகம் இராமலிங்கசுவாமிகளோடு சம்பந்தப்பட்டது. அது 'நாவலர்' என்ற புத்தகத்திற் காணத்தக்கது.

---

* *1934 ஆம் ஆண்டில் சுவாமிநாத பண்டிதர் மறைந்தாராக, அவர்பாற் பேரன்பினரான திருநெல்வேலிச் சிவன் கோயிலாதீனத்துப் பிரதம சிவாசாரியர் பிரமஸ்ரீ சி. சபாபதிக்குருக்கள் அவர்கள் வெளியிட்ட பன்னூற்றுக் கணக்கான அடிகளைக் கொண்ட நீண்டதோர கவற்பாவின் உயிர்ப்பொருள், 'இன்று சுவாமிநாத பண்டிதர் உயிரோடிருந்தால் மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரத்தில், சாமிநாதையர் செய்த பொய்யான கற்பனைகள் என்னபாடுபட்டிருக்கும்' என்பதேயாம்.*

உ

கணபதிதுணை.

# இரண்டாம் பதிப்பு முகவுரை.*

மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்கள் மகாவித்துவான் ம-ா-ா-ஸ்ரீ. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரமொன்று எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அது இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. முதற்பாகம் பிள்ளையவர்களை ஐயரவர்கள் அடைவதற்கு முன்னுள்ள சரித்திரம். இரண்டாம் பாகம் 1870-ம் † ஆண்டு (கிறிஸ்து ஸு) ஏப்ரில் மாசம் ஐயரவர்கள் பிள்ளையை யடைந்தபின் நிகழ்ந்த சரித்திரம். ஆயினும், இரண்டாம் பாகம் ஐயரவர்களுடைய சுயசரித்திரம் (autobiography) என்றே சொல்லலாம். ஐயரவர்கள் வேதாத்தியயனம் பழகிக்கொண்ட ஒரு சரித்திரம் தவிர தம்முடைய மற்றைச் சரித்திரம் முழுவதையும் இதிலெழுதியிருக்கிறார்கள். அதனால் இவ்விரண்டாம் பாகத்தை ஐயரவர்களின் சரித்திரம் என்றே சொல்லலாம்.

பிள்ளையவர்கள் தம்மை ஏற்றுக்கொண்டது — தமது இளமைக் கல்வி—தாம் பிள்ளையவர்களைக் கண்டது—பிள்ளையவர்கள் தம்மைப் பரீக்ஷித்தது — யாப்பிலக்கணத்தில் தம்மைப் பரீக்ஷித்தது — நல்ல தினத்தில் தாம் பாடங்கேட்க ஆரம்பித்தது — தமக்கிருந்த குறை — பிள்ளையவர்கள்பால் தாம் நேரே பாடங்கேட்டது — தம் பெயரைமாற்றியது —

---

* இம்முகவுரை நாவலர் அவர்களின் தமையனார் புதல்வர் ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் எழுதி உதவியது.

† பிள்ளையை ஐயரவர்கள் 1871 க்கு முன்னர் கண்டிலர். ஆயினும் தமது சந்திப்பை 1870 இல் நடந்ததென்றே முதற் பதிப்பில் வைத்துக் கொண்டார்கள். அதன் காரணத்தை இரண்டாம் பாகத்தில், 2 "நான் பாடங்கேட்கத் தொடங்கியது." என்ற தலையங்கத்தில் 'மறுநாட்காலை' என்று தொடங்கும் முதற்பந்தியில், பிள்ளை முன்னிலையில் நடந்தவைகள் என்று ஐயர் அவர்கள் கற்பனை செய்யும் அகாலப் புனைந்துரைகளிலிருந்து ஊகிக்க.

தம் இசைப் பயிற்சியை நிறுத்தியது — சுப்பிரமணிய தேசிகர் தம்மைப் பரீக்ஷித்தது — தேசிகர் தமக்குப் புஸ்தகங்கள் அளித்தது — தாம் திருநாகைக்காரோண புராணம் பாடங் கேட்டது — மாயூரப் புராணம் பாடங் கேட்டது—ஆறுமுகத் தாபிள்ளை தமது புஸ்தகத்தை ஒளித்துவைத்தது — தமக்கு நைடதம் அளித்தது — தாம் தம் சொந்த ஊர் போனது — திருவாவடுதுறையில் தாம் பிள்ளையவர்களைப் பார்த்தது — தாம் திரு அம்பர்ப்புராணம் பாடங்கேட்டது — தமக்குக் காலையாகாரம் பண்ணுவித்தது தாம் படித்த முறை — தாம் மல்லிகைமாலை பெற்றது — மகா வைத்தியநாதையர் பெருமையைத் தாம் அறிந்தது—தம்பால் பிள்ளையவர்களுக்கு உண்டான கோபம் — தம்மைத் திருவாவடுதுறைக்கு அனுப்பியது— அம்மை பூட்டினமையால் விடைபெற்றுத் தாம் ஊர் சென்றது — ஆறுமுகத்தாபிள்ளை தமது எழுத்தாணியை ஒளித்து வைத்தது — தமக்குப் பாலபோத இலக்கணம் வாங்கித் தந்தது—தமக்கு ஜ்வரநோய் கண்டது—தாம் ஊர் சென்றது — தாம் அம்பருக்குச் சென்று பிள்ளையவர்களைப் பார்த்தது — தாம் விடைபெற்றுக் காரையென்னுமூருக்குச் சென்றது—தாம் திருவாவடுதுறைக்கு வந்தது – சுப்பிரமணிய தேசிகர் தமக்குத் தீபாவலிக்கு வேட்டி எடுத்துக்கொடாதது— பிள்ளையவர்கள் தமக்கு வஸ்திரம் வாங்கி அளித்தது — சுப்பிரமணிய தேசிகர் தமக்கு ஆறுதல் கூறியது — முதலான விஷயங்களெல்லாம் மிக விரிவாக இந்த இரண்டாம் பாகத்தில் ஒன்றும் ஒழியாதும் ஒளியாதும் எழுதியிருக்கிறார்கள்.

முதற் பாகத்திலுள்ள கதைகளெல்லாம் கேள்வியேயாகும். கேள்வியானாலும் எழுதியிருக்கிற பக்குவம் கூட இருந்து சுருக்கமுறையில் (Short-hand) எடுத்தது போலவே இருக்கும். இவையெல்லாம் அநுவாதக்குறியிலடைபட்டிருக்கின்றன. முதற்பாகத்தில் [ கககக ககஙும் பக்கம் ] சிவதருமோத்தரம் வாங்கும் விஷயத்தில் சுந்தரம்பிள்ளை என்பவருக்கும் திரிசிரபுரத்திலிருந்த ஒரு குருக்களுக்கும் நடந்த சம்பாஷணை, [ககூகூ உ0உம் பக்கம்] அம்பலவாண தேசிகருக்கும் சுப்பிரமணிய தேசிகருக்கும் பிள்ளையவர்களைப் பற்றி நடந்த சம்பாஷணை [உசரு—உருசூம் பக்கம்] ரங்க

சாமிபிள்ளையைத் திருவாவடுதுறை மடத்திற்கு வரச் செய்தது, [உஅரு-உகூ0ம் பக்கம்] ஓர் ஏழை மனிதரின் உபசாரம் முதலானவைகளெல்லாம் இதற்குச் சான்ருகும். இக்கதைகளை யாரும் நம்பத்தக்கனவாக வர்ணிப்பதில் கம்பர்முதலிய எந்த வித்துவானும் ஐயரவர்களுக்குச் சமமாகார்கள்.

ஆனாலும், ஐயரவர்கள் I-ம் பாகம் முகவுரை xvi-ம் பக்கத்தில் சிலர் தமக்குப் பொய்யான சில சரித்திரங்களையுஞ் சொல்லித் தம்மை அணுப்பிவிட்டார்களென்றும் எழுதியிருக்கின்ருர்கள்.

இப்படி அணுப்புப்பட்ட கதைகளில், பரிமேலழகர் உரைக்கும், திருக்கோவைக்கும், தருக்கசங்கிரகத்துக்கும் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம் சிறப்புப்பாயிரம் வாங்கி நாவலர் அவர்களுக்கு இராமசாமிப்பிள்ளை கொடுக்கச்செய்த உபாயக் கதையும் ஒன்று போலும். நாவலர் அவர்கள் தாம் முன் அச்சிட்ட நன்னூல் விருத்தியுரை, சைவதூஷண பரிகாரம் முதலிய நூல்களுக்கும், பின் அச்சிட்ட இலக்கணக் கொத்து, பிரயோக விவேகம், பாரதம், கந்தபுராணம், சேனு வரையம் முதலியவற்றிற்கும் எவரிடமாவது சிறப்புப் பாயிரம் பெற விரும்பவில்லை. அங்ஙனமாகவும், ஐயரவர்கள் முதற் பாகம் உஉள ம் பக்கத்தில் ''ஆறுமுகநாவலர் நூற்பதிப்புக் களுக்குச் சிறப்புப்பாயிரமளித்தது'' என்ருெரு விஷயம் எழுதியிருக்கிருர்கள். அது இது:-

''மதுரை இராமசாமிப்பிள்ளை இவரிடத்திற் படிக்கு பொழுதே அடிக்கடி சிதம்பரஞ் சென்று ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைப் பார்த்துச் சம்பாஷணை செய்துவருவார். அதனுல் இராமசாமிப்பிள்ளைக்கும் நாவலருக்கும் நல்ல பழக்கம் உண்டாயிற்று. இராமசாமிப்பிள்ளை இராமநாதபுரத்தினர்; பொன்னுசாமி தேவருக்கு உசாத் துணைவராய் இருந்தவர். நாவலருடைய சிலபதிப்புக்களைக் கண்ட அவர், பொன்னுசாமி தேவருக்குப் பழைய தமிழ்நூல்களை வெளியிடும் விருப்பம் இருப்பதையும் நாவலர் தக்க பொருளுதவியில்லாமல் இருப்பதையும் அறிந்து தேவரிடம் சொல்லி நாவலரால் திருக்கோவையாருரை, திருக்குறட்பரிமேலழகருரை முதலியவற்

றைப் பதிப்பிக்கச் செய்யவேண்டுமென்றெண்ணினர். அவ்வாறே முயலுகையில், தம்மையும் பதிப்பிப்போரையும் புகழ்ந்துள்ள சிறப்புப்பாயிரங்களைப் பெற்ருல்தான், பாட்டுக்களிற் பிரியமுடைய தேவர் மகிழ்ந்து உதவிசெய்தலை மேற்கொள்வாரென்றறிந்தார்.

ஆதலின், சென்னையிலிருந்த வித்துவான்களிடமிருந்து சிறப்புப்பாயிரங்கள் வாங்கியனுப்பும்படி நாவலருக்கு எழுதினர். சென்னையிலிருந்தவர்களோடு அளவளாவி நாவலர் அக்காலத்துப் பழகவில்லை. அதனுல் அவர்களிடம் சிறப்புப் பாயிரம் பெறுதற்கு இயலவில்லை; "இங்கே உள்ள சபாபதி முதலியார் முதலியவர்கள்பால் எனக்கு நல்லபழக்கமில்லை ஆதலின், அங்கே திருவாவடுதுறையாதீன மகாவித்துவானுய் விளங்கும் திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம்பிள்ளை யவர்களிடமிருந்தும் அவர்களுடைய மாணுக்கர்களிடமிருந்தும் சிறப்புப் பாயிரங்கள் வாங்கி உதவி செய்யவேண்டும்," என்று அவர் இராமசாமிப்பிள்ளைக்கு எழுதினர். அதனுல், இராமசாமிப் பிள்ளை திருவாவடுதுறைக்கு வந்து இரண்டு தலைவர்களிடமும், "பொன்னுசாமிதேவர் உதவியால் நாவலரவர்கள் திருக்கோவையார், திருக்குறள் முதலியவற்றைப் பதிப்பிக்க எண்ணியிருக்கின்ருர்கள். அதற்குச் சிறப்புப் பாயிரங்கள் பிள்ளையவர்களைக்கொண்டும் அவர்களுடைய மாணுக்கர்களைக்கொண்டும் பெற நாவலரவர்கள் விரும்புகிருர்கள். பிரபு அவர்களும் அவற்றைக் கண்டால் திருப்தியுற்று உதவிசெய்வதற்கு முன் வருவார்கள்." என்று சொன்னதன்றிப் பிள்ளையவர்களிடத்தும் இதனைத் தெரிவித்தார். மடத்திற்குப் பொன்னுசாமி தேவர் வேண்டியவராகையினுல் தலைவர்கள் பிள்ளையவர்களை அவ்வாறே செய்யும்படி சொன்னுர்கள். இவரும் பாடிக் கொடுத்தார். இவர் கட்டளையின்படி தியாகராசசெட்டியார் முதலியவர்களும் சிறப்புப் பாயிரம் கொடுத்தார்கள். அவற்றைக்கண்ட பொன்னுசாமிதேவர் மிகவும் மகிழ்ந்ததன்றிப் பிள்ளையவர்களுடைய பாடலின் நயத்தில் ஈடுபட்டார்."

இது மெய்தானு— இராமசாமிப்பிள்ளையுடைய சூழ்ச்சியா — ஐயரவர்களுக்குச் சொன்னவர்களது அணுப்பு வார்த்தையா — என்பது ஆராயத்தக்கது. எல்லாமாயுமிருக்கலாம்.

இராமசாமிப்பிள்ளை, வன்றெண்டச் செட்டியார், நமசிவாயத் தம்பிரான் என்னும் மூவரும் பிள்ளையவர்களிடத்திற் படித்தது போலவே நாவலரவர்களிடத்தும் படித்தவர்கள்.

இராமசாமிப்பிள்ளை நாவலரவர்களிடத்தே மிக்க அன்புடையவர் அவர்களோடு கூட இருந்து காஞ்சிப் புராணம் பார்த்தவர். தாமெழுதிய கம்பரந்தாதியுரையை அவர்களைக்கொண்டு திருத்துவித்துக்கொண்டவர். அதுபற்றியே அப்புத்தகம் நாவலரவர்களுடைய விலைப் புத்தகங்களோடு சேர்த்து விற்கப்பட்டுவந்தது.

வன்றெண்டச்செட்டியார் சென்னபட்டணம் போயிருந்து சிலகாலம் நாவலரவர்களிடத்தே படித்தவர். அந்த ருசியில் பின் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருக்கும்போதும் வந்து பெரியபுராணம் முதலியவற்றிலுள்ள சந்தேகங்களை நிவிர்த்தி செய்து கொண்டு போனவர். அவர்களுக்குப் பின்னும் அந்த ருசியில் இரண்டாம் முறையும் யாழ்ப்பாணம் வந்து ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்களிடம் பல நூல்களிலும் தமக்கிருந்த ஐயங்களையும் அறியாமையையும் நீக்கிக் கொண்டவர். அப்போதெல்லாம் சில பாட்டுக்களுக்கு இந்தியாவிலுள்ள புலவர்கள் சொல்லிய அர்த்தங்களையெல்லாம் சொல்லிச் சொல்லி நகுவார். அவர் சாமிநாதையரவர்கள் சொல்லியதன்மை முழுதும் சரிவர அமைந்தவர்.

நமசிவாயத் தம்பிரான் சென்னபட்டணத்திற் போயிருந்து சிலகாலம் நாவலரவர்களிடத்துப் பாடங் கேட்டவரென்பது நமசிவாயத் தம்பிரான் காலத்தில் அச்சில் வெளிவந்த நாவலர் சரித்திரங்களால் விளங்கும்.

இது இராமசாமிப்பிள்ளை செய்த சூழ்ச்சியெனின், ஐயரவர்களே இராமசாமிப்பிள்ளை நாவலரவர்களோடு பழகியது

* இரத்தாக்ஷி (1864) வருஷத்தில் என்கிறார்கள். திருக்கோவையார் நாவலரவர்கள் அச்சிட்டது அதற்குமுன் ரௌத்திரி (1860) வருஷத்திலாம்; பரிமேலழகருரையும் தருக்கசங்கிரகமும் அச்சிட்டது துன்மதி (1861) வருஷத்திலாம். ஆதலால் அது பொருந்தாது. அன்றியும், இராமசாமிப்பிள்ளைக்கு இந்நூல்களை அச்சிடுவிக்க விருப்பமிருந்தால் தமது குருவாகிய மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைக்கொண்டே ஒருவருடைய சிறப்புப் பாயிரமுமின்றி அச்சிடுவிக்கலாம். ஆதலாலும் அது பொருந்தாது. இன்னும் "சென்னையிலிருந்தவர்களோடு அளவளாவி நாவலர் அக்காலத்திற் பழகவில்லை. அதனால் அவர்களிடம் சிறப்புப் பாயிரம் பெறுதற்கு இயலவில்லை," என்றும் "இங்கேயுள்ள சபாபதி முதலியார் முதலியவர்கள்பால் எனக்கு நல்லபழக்கமில்லை, ஆதலில், அங்கே திருவாவடுதுறையாதீன மகாவித்துவானாக விளங்கும் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடமிருந்தும் அவர்களுடைய மாணாக்கர்களிடமிருந்தும் சிறப்புப்பாயிரங்கள் வாங்கி உதவி செய்யவேண்டும்" † என்று நாவலரவர்கள் எழுதினார்களென்றும் ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்களே. நாவலர் அவர்களுக்கும் ‡ விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர் முதலானவர்களின் ஆசிரியராகிய இராமாநுச கவிராயரை அடக்கிய மகாலிங்கையருக்கும் முன்னே பழக்கமிருக்கிறதென்று ஐயரவர்களே எழுதியிருக்கிறார்கள். நாவலரவர்களுக்கும் வேதகிரி முதலியாருக்கும் சில வாதங்கள் உதயதாரகை என்னும் பத்திரிகை வாயி

---

* "மதுரை இராமசாமிப்பிள்ளை இவரிடத்திற் படிக்கும்பொழுதே அடிக்கடி சிதம்பரம் சென்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களைப் பார்த்துச் சம்பாஷணை செய்து வருவார்" (மீ. சு. சரித்திரம் 1-ம் பாகம் 227-ம் பக்கம்) நாவலர் அவர்கள் சிதம்பர சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தாபித்ததும், அங்கே வாசஞ் செய்யத் தொடங்கியதும் இரத்தாக்ஷி (1864) வருஷத்திலாகும்.

† ஐயர் அவர்களின் கற்பனைக் கடிதத்தை, ஸ்ரீமத் த. கை. அவர்கள் அனுப்பிவைக்கும்படி கேட்டெழுதிய பொழுது, அநுவாதக்குறியுள் அடைபட்டிருப்பவை கேள்வியாலறிந்தவையென்று மழுப்பிவிட்டார்கள் ஐயர் அவர்கள்.

‡ மீ. சு. சரித்திரம் 1-ம் பாகம் 62, 63-ம் பக்கம்.

லாக நடந்தது சென்னைப் புலவர்களுக்கெல்லாந் தெரியும். அன்றியும், நாவலரவர்கள் தாமே ரௌத்திரி வருஷத்திலே சென்னையிலிருக்கும்பொழுது தமையனுருக்கு எழுதிய கடிதமொன்றில் ''நான் இச் சென்னபட்டணம் என் சென்மபூமியிற் சிறந்ததென்று சொல்லும்வண்ணம் கிருபாசமுத்திரமாகிப் பன்றிக்குட்டிககும் முலையருத்தின சர்வசீவ தயாபரராகிய நடேசரது திருவருளினுலே, சற்றே சௌக்கியமாயிருக்கிறேன்'' என்று எழுதியிருக்கிருர்கள். ஆதலாலும் அது பொருந்தாது. ஐயரவர்களுடைய எழுத்தை வாசித்தவர்கள் இது இராமசாமிப்பிள்ளை பொன்னுசாமித் தேவரைப் புகழ்ந்து அவரிடம் பொருள் வாங்கவும், மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்களுக்கு வாங்கிக் கொடுக்கவும் செய்த சூழ்ச்சியென்றே எண்ணுவார்கள். ஆனல், அதுவும் உண்மையன்று; ஏனெனில், நாவலரவர்கள் இராமசாமிப்பிள்ளைக்கு எழுதியதென்று சொல்லிய கடிதபாகம் அநுவாதக்குறிக்குள் அடைக்கப்பட்டிருக்கிறபடியால் அது உண்மையாயிருக்கலாமென்று நம்பி, அக்கடிதத்தைப் பிரதிசெய்து அச்சிடமுயன்று அதைப் பிரதிசெய்துகொண்டு மீளத்தரலாமென்று ஐயரவர்களை † ஒருவர் கேட்டபொழுது ஐயரவர்கள் ''தாங்கள் குறிப்பிட்ட கடிதம் என்னிடமில்லை.........இம்மாதிரியே பலவிஷயங்கள் கேள்வியால் அறிந்தவைகளே. சரித்திரத்திற் கடிதங்களாக நான் குறிப்பிட்டிருப்பவை பெரும்பாலும் கடிதங்களின் கருத்துக்களேயன்றி, கடிதங்களின் பிரதிகளல்ல'' என்று எழுதியிருக்கிருர்கள். ஆதலினென்க.

இங்ஙனமாகவே, ஐயரவர்கள் அணுப்புப்பட்ட கதைகளுள் இச்சரித்திரமும் ஒன்ருக வைக்கற்பாற்று.

இன்னும் இப்படியே பிள்ளையவர்களுடைய சரித்திரத்திலும் சில அணுப்புப்பட்டு எழுதியவைகள் போலத் தோன்றுகின்றன. அவை: ஆசானுபாகு என்று தம்மாலே புகழப்பட்ட பிள்ளையவர்கள் யாரோ புண்ணியமென்று கருதி வாங்கிக் கொடுத்த கடுக்கனை முட்டுப்பாடு காரணமாக விற்றுக்கொ

† 'ஒருவர்' இம்முகவுரையை எழுதி உதவிய ஸ்ரீமத் த. கை. அவர்களேயாம்.

டுத்தார்கள் என்பதும், ஒருவராலும் மறுக்கப்படாமல் உள்ள படியே மகாவித்துவானயிருந்த பிள்ளையவர்கள் எந்த நூலை யாவது தாமாகப் படித்தறிந்தா ரென்றிராமல் எல்லா நூல் களையும் பலரிடத்தும் கேட்டார்களென்பதும் பிறவுமாம். பரம்பரையிற் கேட்பது நல்லதேயாயினும், பரம்பரையார் அல்லாதவரிடத்தும் கேட்டறிந்தாரென்பது நன்றன்று. சிறு மையாயினும் பெருமையாயினும் உள்ளதை உள்ளபடி சொல்வதே நீதி. இவைகள் அப்படிப் பட்டவைகளல்ல.

இனி ஐந்தாங்குரவரெனப்படும் ஆறுமுகநாவலர் அவர் களோவெனின், சாலிவாகன வருஷம் ௧௭௪௫க்குச் சமமாகிய சித்திரபானு வருஷம் மார்கழிமீ ௫ம் உ பிறந்தவர்கள். அவர் களுக்கு ஈசுவரன் கொடுத்தருளிய வாணாள் ௵ ௫௬ மீ ௧௧, நாள் ௧௬ இதிற்பாதிக் காலம் கல்வி கற்றல், கற்பித்தல், புத்தகங்களை அச்சிடுதல், இயற்றுதல்களிலும்; பாதிக்காலம் சைவசமயத்தை வளர்த்தலிலும் போக்கப்பட்டன. அவர்கள் விவாகஞ் செய்யவில்லை. பிள்ளைகளில்லை. வைப்பாட்டிகள் இல்லை. அதனல் தட்டார் வீடு, வைத்தியர் வீடுகளுக்குத் திரிவதாகிய வேலையுமில்லை. தாய், தகப்பன், சகோதரர் களுடைய வேலைபார்த்ததுமில்லை. வந்தகாரியம் வேறென்று யிருந்தமையால் இந்த வேலைகளைக் கடவுள் கொடுத்தருள வில்லை.

அவர்கள் தமது இருபத்துமூன்று வயசினுள்ளே தமிழி லுள்ள இலக்கண இலக்கியங்கள், சமயநூல்கள், பன்னிரு சைவத்திருமுறை, புராணங்கள், தலமான்மியங்கள், சம்ஸ்கிரு தத்திலுள்ள பல ஆகமங்கள், அரதத்தாசாரியர், அப்பயதீஷி தர், சிவாக்கிரயோகிகள், ஞானப்பிரகாசசுவாமிகள், அகோர சிவாசாரியர், சோமசம்பு சிவாசாரியர் முதலியோர் இயற்றிய நூல்கள், இங்கிலிசில் விவிலிய நூல் முதலிய பல நூல்கள் ஆகிய இவைகளையெல்லாம் கற்று முடித்துக்கொண்டார்கள். இவ்வளவு நூல்களையும் இந்த வயசினுள்ளே எப்படிக் கற்று முடித்தார்கள் என்பது ஒரு கேள்வி. அதற்கு விடை எமக் குத் தெரியாது. ஆனல், இவைகளையெல்லாம் கற்றுணர்ந்தவர் களென்பது அவர்கள் முதலிற் செய்த பிரசங்கங்களாலும்,

செய்த நூல்களாலும், அச்சிட்ட நூல்களாலும் விளங்கும். இது பின்னே காட்டப்படுகின்றது.

அவர்கள் பிரசங்கஞ் செய்ய ஆரம்பித்தது உரு (25)ம் வயசாகிய பிலவங்க ஸூ மார்கழி மாதம். முதலாம், இரண்டாம், நான்காம் பாலபாடங்கள் செய்தது உஅ (28)ம் வயசாகிய சாதாரண ஸூ. நன்னூல் விருத்தியுரை, கொலை மறுத்தல் முதலியன அச்சிட்டது, திருமுருகாற்றுப்படையுரை, திருச்செந்திநிரோட்டகயமகவந்தாதியுரை, சிவாலயதரிசனவிதியெழுதியது உகூம் வயசாகிய விரோதிகிருது ஸூ. பெரியபுராண வசனம், சூசனம் எழுதி அச்சிட்டது ௩0 (30)ம் வயசாகிய பரிதாபி ஸூ. சுப்பிரபோதம் முதலிய துண்டுப் புத்தகங்களெழுதி அச்சிட்டது ௩க (31)ம் வயசாகிய பிரமாதி ஸூ. சைவ தூஷண பரிகாரம் எழுதி அச்சிட்டது ௩உ (32)ம் வயசாகிய ஆனந்த ஸூ.

இங்ஙனமாக இளம்பருவத்திற்றானே இன்னும் பல நூல்கள் எழுதியும் அச்சிட்டும் வெளிப்படுத்திருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படுத்திய நூல்களில் ஓர் இலக்கணப்பிழையாவது ஒரு தருக்கப் பிழையாவது இல்லை. தகப்பனாராற் செய்யப்பட்டுக் குறையாயிருந்த நாடகமொன்றைத் தமது ஒன்பதாம் வயசிற் பாடி முடித்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரசங்கங்களிலே அவர்கள் கற்றனவாகக் காட்டப்பட்ட நூற்கருத்துக்களெல்லாம் வந்திருக்கின்றன.

நான்காம் பாலபாடத்தால் இறையனாரகப்பொருள், சிவதருமோத்தரம், திருக்குறட் பரிமேலழகருரை, இலக்கணக் கொத்து, திருமந்திரம், சேதுபுராணம், கந்தபுராணம், காஞ்சிப் புராணம், மனுஸ்மிருதி, நீதிசாரம், ஆசாரக்கோவை, திருக்கோவை, சோமவாரகற்பம், சங்கற்ப நிராகரணம், இறைவனூற்பயன், வருத்தமறவுய்யும் வழி முதலிய நூல்களையும்,

பெரியபுராண சூசனத்தால், சித்தாந்த சாத்திரம் பதினான்கு, பன்னிரு திருமுறை, ஞானப்பிரகாச தேசிகரின் பௌஷ்கரவிருத்தி, அப்பய்ய தீஷிதருடைய சிவதத்துவ விவேகம் முதலியன, அரதத்தாசாரியரின் சதுர்வேத தாற்

பரிய சங்கிரகம், சூதசங்கிதை, வாயுசங்கிதை, கூர்ம புராணம், இரகுவம்மிசம், சிவபுண்ணியத் தெளிவு, பிரமகீதை, காசிகண்டம், இரத்தினத்திரயம், சிவயோகசாரம், பிரமோத்தரகாண்டம், சித்தியாருக்குச் சிவாக்கிர யோகிகளுரை, காலோத்தரம் முதலிய நூல்களையும்,

பெரியபுராண வசனத்தால், சிவானந்தலகரி, சௌந்தரியலகரி, சிவபுசங்கம், சிவரகசியம், அகோரசிவாசாரிய பத்ததி வியாக்கியானம், ஞானப்பிரகாச தேசிகரியற்றிய சிவயோகசாரம், சிவயோகரத்தினம், சிலப்பதிகாரம், பதினோராந் திருமுறை, வாயு சங்கிதை, காளத்திப் புராணம், காந்தம், சித்தியார் முதலிய நூல்களையும்,

சிவாலய தரிசன விதியால் உருத்திராக்க விசிட்டம், அருணகிரிப் புராணம், கடம்பவன புராணம், வருத்தமறவுய்யும் வழி, உபதேச காண்டம், சிதம்பர புராணம், ஆசாரக் கோவை, பிரமோத்தரகாண்டம் முதலிய நூல்களையும்,

திருமுருகாற்றுப்படை யுரையால், தொல்காப்பியம், பத்துப் பாட்டு முதலிய நூல்களையும்,

சுப்பிரபோதத்தால் சைவாகமங்களின் சாரம், கந்தபுராணம் முதலியவைகளையும்,

சைவதூஷண பரிகாரத்தால், வேதாரணிய புராணம், சிவதருமோத்தரம், பராசரஸ்மிருதி, கூர்ம புராணம், சித்தாந்த சிகாமணி, வடமொழிச் சிவதத்துவ விவேகம், கபிலரகவல், பட்டணத்தார் பாடல் முதலிய நூல்களையும்,

தமது ௩௨ (32) வயசினுள்ளே கற்றுணர்ந்தவர்களென்பது தெரிகின்றது. இந்த நூல்களையெல்லாம் ஒருவரிடம் பாடங் கேளாமலே தாமாகப் படித்துணர்ந்தார்கள். தொல்காப்பியம், வீரசோழியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பஞ்ச காவியம் முதலிய பல நூல்களை அவ்வயசினுள்ளே, கற்றுணர்ந்தவர்களென்பது அவர்களச்சிட்ட நூல்களால் விளங்கும்.

புகைவண்டி, ஒழுங்கான தபாற்போக்கு, தந்திப்போக்கு இல்லாத அந்தக் காலத்திலே ஒருவர் தாம் அருமைப்படுத்தித்

தமது குடும்ப சம்பத்தாக ஏடுகளை வைத்திருக்குங் காலத்திலே ஒரு நூலைப் பெறுகிறதிலும், அதைப் பிரதி செய்வதிலும், அதை அச்சிடும்போது அதற்கு ஆதாரமாக வேறு பிரதிகள் சம்பாதிப்பதிலும், அதை மறுபடி ஒத்துப்பார்த்துக் காகிதத்தில் எழுதுவதிலும், அது அச்சில் வரும்போது பிழை பார்ப்பதிலும் அவர்கள் அச்சிட்ட நூல்கள் ஒவ்வொன்றற்கும் எவ்வளவு காலஞ்சென்றிருக்கும். சென்னையிலிருந்து அச்சிட்ட நூல்களைக் காகிதத்தில் எழுதுவதற்கே அங்கே கூலிக்கும் ஆள் கிடைக்கவில்லை.

இனி, சைவசமயம் குன்றுகின்றதே, தமிழ்க்கல்வி குன்றுகின்றதேயென்று மனக்கவலை கொண்டிருந்த காலம் எவ்வளவு! வித்தியாசாலைகள் தாபிக்கச் சென்ற காலம் எவ்வளவு! அவற்றின் வரலாறுகள் எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தச் சென்ற காலம் எவ்வளவு! பிள்ளைகளைப் படிப்பிக்கச் சென்ற காலம் எவ்வளவு! தேவார நிந்தைக்காக இராமலிங்கபிள்ளை விஷயத்திலும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விஷயத்திலும் செலவான காலம் எவ்வளவு!

நாவலரவர்களுக்கு நாவலர் என்னும் பட்டஞ் சூட்டினவர்களும், நாவலர் அவர்களுடைய வித்தியாசாலைக்கு நேரே எழுந்தருளினவர்களும், அங்கே பிள்ளைகளைப் பரீக்ஷிப்பித்து பரிசில் வழங்கியவர்களும், இலக்கணக் கொத்து முதலிய கடின கிரந்தங்களை நாவலர் அவர்களைக்கொண்டு பதிப்பித்தவர்களும், தங்கள் மடத்து நமசிவாயத் தம்பிரானைச் சென்னைக்கனுப்பி நாவலரவர்களிடம் சித்தாந்த பாடங் கேட்பித்தவர்களும், சென்னைக் காலேசு ஒன்றில் விசாகப் பெருமாளையர் அவர்களுக்கும் நாவலர் அவர்களுக்கும் "செல்லிடத்துக் காப்பான்" என்னுங் குறளைப்பற்றி நடந்த வாதங்களை அறிந்தவர்களும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களைக்கும்ப கோணம் அனுப்பி நாவலரவர்களை அழைத்துவரும்படி செய்தவர்களும், பிள்ளை அவர்களுக்குப்பின் தமது மடத்தில் ஆதீன வித்துவானாய் இருக்கத் தகுந்தவரென்று கண்டு வைந்திருந்த சபாபதி நாவலர் விஷயமாகத் தாம் செய்த குற்றத்துக்காக

ஒருவகையான *க்ஷமை நாவலரவர்களை வேண்டியவர்களும், ஒரு வியாசத்தை வைத்துக்கொண்டு ஆதீன சம்பிரதாயத்துக்கு மாறாக எழுந்து வந்து நாவலரவர்களுக்கு †மரியாதை

---

*மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்குப்பின் திருவாவடுதுறையாதீன மகா வித்துவானாயிருந்த சபாபதி நாவலரென வழங்கும் கோப்பாய் ஸ்ரீ சு. சபாபதிப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு முறை வந்திருந்தபோது தர்க்ககுடாரதாலுதாரி என்பவருக்கும் பிள்ளையவர்களுக்கும் இடையிலுண்டான ஒரு விரோதத்தால் தர்க்ககுடாரதாலுதாரி பத்திராத்திரப் பிரயோக ஏகவசனதீபிகை என்றொரு பத்திரிகை பிள்ளையவர்களுக்குமாறாக எழுதினார். அதிலே, திருவாவடுதுறைப் பண்டாரசந்நிதியையுஞ் சிறிது இழித்தெழுதியிருந்தார். பிள்ளை அதில் இரண்டு பிரதி மடத்துக்கனுப்பி, இது சமவாத சைவப்பிசாசாகிய ஞானப்பிரகாசருடைய மரபிற்பிறந்தவனும், நாவலருக்கு மருகன் முறையாயுள்ளவனும் அவருடைய வித்தியாசாலையிற் கற்பவனுமாகிய இன்னொருவனால் எழுதப்பட்டது என்றும் எழுதியிருந்தார். அதிலொரு பிரதியையும் பிள்ளை எழுதிய கடிதத்தையும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் யாழ்ப்பாணத்தில் அப்பொழுதிருந்த நாவலரவர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். தேசிகரவர்கள் அவற்றையனுப்புவதற்குமுன்னமே அப்பத்திரிகை வெளிப்பட்டதையறிந்த நாவலரவர்கள் உடனே தர்க்ககுடாரதாலுதாரியை யழைப்பித்துக் கண்டித்தும், தண்டித்தும், எஞ்சிய பத்திரிகைகளெல்லாவற்றையும் வாங்கிச் சுடுவித்தும்விட்டார்கள். அப்படியிருந்தும், "சமவாத சைவப் பிசாசாகிய ஞானப்பிரகாசர்" என்றதை இவனுமறியட்டுமென்றெண்ணித்தான் பிள்ளை எழுதிய கடிதத்தையும் தமக்கு அனுப்பியிருக்கிறார்களென்ற எண்ணம் நாவலரவர்களுக்கு உண்டாகி மிக்ககோபங்கொண்டு "பிசாசு யார்" என்று மிக நீண்ட கடிதம் ஒன்று எழுதியனுப்பினார்கள். அக்கடிதத்தின் சுருக்கமானசாரமே "நாவலர் பிரபந்தத்திரட்டு" என்னும் நூலிலுள்ள "அகோர சிவாசாரியபத்ததி தூஷண கண்டனம்", "சபாபதிக்குருக்கள் வினா" என்பவற்றிலிருப்பன. ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் உடனே ஒருவகையான க்ஷமைவேண்டி நாவலரவர்களுக்கு ஒருகடித மெழுதியிருந்தார்கள்.

† நாவலரவர்கள் ஒருமுறை திருவாவடுதுறை மடத்திற்றங்கியிருக்கும்போது தாம் அச்சிட எழுதிவைத்திருந்த சில நூல்களை ஒத்துப்பார்ப்பதற்காக அங்குள்ள நாலு ஏட்டுப் புத்தகங்கள் தமக்கு வேண்டுமென்று சந்நிதானத்திடம் கேட்டிருந்தார்கள். பின் அவர்கள் புறப்படும்போது சந்நிதானம் அப்புத்தகங்களை எடுப்பித்து நாவலரவர்கள் முன் வைப்பித்துவிட்டு அவற்றுளொன்றைத் தான் பின் எடுத்து வைத்துக்கொண்டது. நாவலரவர்கள் முறைப்படி நமஸ்காரஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு மற்ற மூன்று புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு

செய்தவர்களும், மீனுட்சிசுந்தரம்பிள்ளைக்கும் காட்டாத பாஷ்யம், சிற்றுரை, பொழிப்புரைகளை நாவலரவர்களுடைய சிந்தாந்த அறிவைக் கண்டு மகிழ்ந்து காட்டினவர்களும், மடங்களின் சீர்கேட்டைப்பற்றி நாவலரவர்கள் பாலபாடம் முதலியவற்றில் எழுதியவற்றைக் கண்டும், போசன காலம் முதலியவற்றில் அவர்களைப் புகழ்ந்தவர்களும், அவர்களிடத்து அச்சமும் அன்பும் மதிப்பும் ஆகிய மூன்றும் பூரணமாக உடையவர்களும், நாவலரவர்களுடன் செல்லுஞ் சதாசிவப் பிள்ளைக்கு விபூதி நெற்றியில் இட்டுவிடும்போது அது சிவம், இதுசத்தி, சத்தியின்றிச் சிவம் ஒன்றுஞ் செய்யமாட்டாது என்று புகழ்ந்தவர்களுமாகிய ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்களுக்கும், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களுக்கும் நாவலரவர்கள் ஒரு கடிதமெழுதினுல் இப்படி நூறு சிறப்புப்பாயிரங்கள் வாராவோ. ஒரு சிறப்புப்பாயிரம் பெற ஒரு மீனுட்சிசுந்தரம்பிள்ளை வேண்டுமாம். இதற்கு சிபாரிசு செய்ய ஒரு இராமசாமிப்பிள்ளையும் வேண்டுமாம்.

திருவாவடுதுறைமடத்துத் தலைவர்களுக்கும் நாவலர் அவர்களுக்கு முள்ளதொடர்பு இப்படியிருக்க, ஐயரவர்கள் ''மடத்திற்குப் பொன்னுசாமிதேவர் வேண்டியவராகையினுல் தலைவர்கள் பிள்ளையவர்களை அவ்வாறேசெய்யும்படி (நாவலர் அவர்களுக்குச் சிறப்புப்பாயிரம் கொடுக்கும்படி) சொன்ஞர்கள்'' என்று தம் மனம்போனவாறு எழுதியிருக்கிருர்கள். ஐயரவர்களுடைய எழுத்தின் உண்மையை அறிஞர்கள் ஆராய்ந்து சிந்திக்கக்கடவர்கள். இது நிற்க.

பத்தியரூபமாகிய இச்சரித்திரத்தை இயற்றியவர் ஸ்ரீமத் அருணுசலக் கவிராயரவர்கள். இவர் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுக்கும் நாவலரவர்களுக்கும் மாணுக்கரும, திருவாவடுதுறையாதீனத்தில் இரண்டாம் பட்டமாயிருந்த வரும், இந்நூல் அச்சிடுங்காலத்தில் உயிரோடிருந்தவருமாகிய

---

சிறிதுதூரம் போனபின் சந்நிதானம், ''இப்புத்தகத்தை விட்டுவிட்டீர்கள்'' என்று திருவாய்மலர்ந்துகொண்டு போய்க் கொடுத்தது. எவருக்கும் எழுந்து மரியாதைசெய்யும் வழக்கம் மடத்துச் சம்பிரதாயமல்லாமையால் இப்படியோருபாயஞ்செய்தது.

ஸ்ரீமத் நமசிவாயத்தம்பிரான் சுவாமிகளுக்கு மாணுக்கர். ஆகவே, ஆதீனத்துக்கும் நாவலரவர்களுக்கும் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்கும் இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளெல்லாம் தம்பிரான் சுவாமிகளுக்கும் நன்ருகத்தெரிந்தன என்பதும், அவற்றிற்கு மாறுபடாவகையாகவே கவிராயரவர்கள் பாடினுர்களென்பதும் தெரிகின்றன.

இந்தநூல் சிலகாலம் கிடையாமலிருந்தமையால், யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சிவாலயப் பிரதமாசாரியர் ஸ்ரீமத் சி. சபாபதிக் குருக்கள் அருமையாகப் பேணிவைத்திருந்த பிரதியைவாங்கி, நூலிலாவது முகப்பேட்டிலாவது ஒரு அக்ஷரமேனும் மாற்ருது அந்தப்படியே இந்நூலை அச்சிட்டேன்.

மட்டுவில்.
பவ ஆவணி மீ
1934

சி. க.

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ

# ஆறுமுகநாவலர் சரித்திரம்.

இஃது

சேற்றூர்ச் சமஸ்தான ஆசாரியரவர்கள்

ஸ்ரீமத் சிதம்பரதேசிகரவர்கள் கட்டளையிட்டருளியபடி

ஷை சமஸ்தான வித்துவான்

இராமசாமிக் கவிராயரவர்கள் குமாரரும்

திருவாவடுதுறை யாதீனத்துச் சின்னப்பப்பண்டாரச் சந்நிதியாகிய

ஸ்ரீலஸ்ரீ நமசிவாயதேசிக சுவாமிகள்

மாணுக்கரிலொருவருமாகிய

**சிவகாசி—அருணாசலக் கவிராயரால்**

இயற்றப்பட்டு,

திருநெல்வேலிச்சில்லா ம-௱-௱-ஸ்ரீ மகாவித்துவான்

**வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்**

பரிசோதனைக்குள்ளடங்கி,

ஷை சேற்றூர்ச் சமஸ்தானம் மானேஜரவர்கள்

ம-௱-௱-ஸ்ரீ, இராக்கப்ப பிள்ளையவர்கள்

பொருளுதவியால்,

சென்னை:

அல்பீனியன் அச்சுக்கூடத்தலைவர்

சா. யோ. சவுரியப்பா அவர்களால்

பதிப்பிக்கப்பட்டது.

1898.

(Registered Copy-right)

சிவமயம்

## விநாயகர் துதி

சீர்திகழுங் கலைமதிவே ணியன்றனெல்
லாம்வல்ல சித்த னென்னும்
பேர்திகழ மிடுகுறியாப் பெற்றனன்கா
ரணக்குறியாப் பெற்ற தன்றென்
றேர்திகழ மறிஞரெல்லாங் காணவவன்
பூவிரத மிவரச் செய்த
கூர்திகழ மொருகோட்டுக் குஞ்சரத்தி
னடிமுடிமேற் கொண்டு வாழ்வாம்.

## முருகக்கடவுள் வணக்கம்.

வகையுறுமா மலைமலையாய்ப் பகைபெருக்க
மிகவருந்து வதுகண் டோர்மாப்
பகையுமிலை யிந்திரனுக் கெனவசுரர்
குலமறுத்துப் பதியும் வாழ்வு
மிகையுமுத வியதற்கோர் கைம்மாறு
வவன்றவத்தான் மேனட் பெற்ற
தகையுறுபூங் கொடியையமணஞ் செய்தவேற்
குமரனிரு சரணங் காப்பாம்.

## குருவணக்கம்.

### கலித்துறை.

அம்பல வாண யனமெனு மாத ரவாமலியும்
அம்பல வாணவ முற்றேனை யாட்கொண் டருள்புரியும்
அம்பல வாணர் பரவுந் துறைசை யமரருட்சீர்
அம்பல வாண குருபரன் செம்பொற் பதாம்புயமே.

## வித்தியாகுரு வணக்கம்.

### வேறு.

சத்தசத் துணரா விந்தச் சழக்கனைத் தன்பா லாக்கி
யித்தரை தனிற்போ தித்தா னெவனவ னெல்லாம் வல்ல
சித்தனென் றிடவெற் குண்மை தெருட்டுசீர் திகழ்கோ
முத்தனுநமசிவா யமூர்த்திதாண் முடியுள் வைப்பாம்[முத்தி

# இந்நூல் வரலாறு

நிலவுலகி லொருமதிய நிலவியதென் றேநிகழ்த்தப்
பலகலையு நிரம்பியாழ்ப் பாணமெனும் பாற்கடலி
லிலகியெழீஇ நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினுங்
குலவுதமை யேகுறிக்கக் கொண்டபெருங் குலப்புகழார். (1)

தண்ணியசீர் தருசைவந் தழைத்தோங்கித் தலையெடுப்ப
வெண்ணியதற் கேற்றநூ லெனைத்தும்வெளி யேற்றியெங்
புண்ணியமே யெதிர்வந்தாற் போலவந்து போதிக்கு [கள்
நண்ணியமெய் யாறுமுக நாவலவர் நற்சரிதம். (2)

வசனநடை யிற்சிறிதும் வழுவாது வரைந்தறிவா
*லுசனன்பொன் னிரவிமுத லோரனைய வுயர்கவிக
ணிசம்மிகும்யாழ்ப் பாணத்தி னின்றனுப்ப நேர்ந்தெவரும்
விசனமற வாங்கியிது மெய்யென்ன மிகவியந்தார். (3)

அன்னவருட் பாண்டிநாட் டமர்சேறை யம்பதிக்கு
மன்னவன்சுந் தரதாச மகராச போசவள்ள
லென்னரிய தந்தையிடத் தின்றமிழ்தே ரிறைவனிவன்
றன்னரசு தழையவரு டருங்குருவா மொருதக்கோர். (4)

கருணையோ ருருவாகிக் கண்ணோட்டங் கட்கணியாம்
பொருளெனக்கொண் டாகமநூற் பொருளெலாம் போத
தெருள்புனித சீலசைவ சிதம்பரதே சிகரென்பா [வுளந்
திருமையுநற் பயனுதவு மிவ்வசன மென்றருளி. (5)

எத்தனையோ வுயர்கவிஞ ரிருக்கவுங்கற் றிலாவெனைத்தம்
பத்தரொடு சேர்க்கவுளம் பதித்தோநீ பாடுவா
யுத்தமமாஞ் செய்யுணடை யொழுங்காக வெனவொரு
சித்தரையி லருளினு ரிதைமறுப்பா ரெவரம்மா. [வாக் (6)

அத்தகுவாக் கேதுணையா வடியனேன் சிற்றறிவிற்
கொத்தபடி பாடலுற்றே னுளங்கொள்க வுயரறிஞர்
சுத்தமிகு பொருட்சுவையுஞ் சொற்சுவையுஞ் சோர்வுறி
சித்தமிசை நிலைபெறற்குச் செய்யுணடை சிறந்த [னுஞ்
தென்றே. (7)

---

* உசனன் — சுக்கிராசாரியன்

# இந்நூலச்சியற்றுதல் வரலாறு

தேடிவைத்த புதையலென வாறுமுக நாவலன்சீர் தெரிந்து நம்மாற், பாடிவைத்த செய்யுணூல் கண்டெ டுத்துப் படித்தோர்பற் பலருஞ் சென்னி, சூடிவைத்த மகுடமெனக் கொளலாகும் பொருளிதெனச் சொல்லிப் பன்னுட், கூடிவைத்த பேரன்பா லாயிரம்புத் தகமாக்கிக் கொடுத்தான் மன்னே. (1)

செயற்கரிய செய்வர்பெரி யோரென்ன வள்ளுவர்முன் செப்பற் கேற்ப, வுயற்கரிய வுறுதிபெற விவ்வுதவி செய் தவன்யா ருணர்த்தா யென்றூற், கயற்கரிய கண்ணியர சொடுமுடியுஞ் செங்கோலுங் கைக்கொண் டந்நாண், மயற்கரிய மால்பிரமன் காணரியா னரசுசெய்த வழுதி நாட்டில். (2)

ஓங்குபுகழ் வளரும்வெங் கடேசுரெட்ட ணிளைசைநக ருய்ர்வே ளாளர், பாங்குபெறு குலத்துதித்தோன் சைவ நெறி வழாதுபத்தி பழுக்குஞ் சீலந், தாங்குமதி யூகிதமி ழுணருமென்போல் வார்க்கெலாந் தருவே வான்விட், டீங்குமனு வுருவெடுத்துக் கொடைதரவந் தாற்போலு மென்னும் வள்ளல். (3)

வேற்றூருந் தம்மூராய் விடவனந்தங் கலைதேர்பா வேந்தர் மல்குஞ், சேற்றூரு மெழுமலையு மானேச ரதி காரஞ் செலுத்துந் தென்றற், காற்றூரு மதனிகரும் பேரெழிலா னொருநால்வர் கட்கு முன்ன, மாற்றூரு மமர்ந்தபிரான் கழலேத்தும் பெருஞ்செல்வ மமையப் பெற்றோன். (4)

இந்தவிரு நகர்க்குமொரு பேரரசாஞ்
சுந்தரதா சேந்த லென்பான்
சொந்தமிகும் பிரதிநிதி யாகியிந்நா
ளரசுபுரி துரையென் றோத
வந்தவனும் பேரைநகர் நாகயசா
மிக்கோமான் மனத்து ளன்பு
தந்தமதி மந்திரியாய் விளங்குமிராக்
கப்பனெனுந் தமிழ்வல் லோனே. (5)

## சாற்றுக்கவி.

திருநெல்வேலி ஸ்ரீ அனவரததானநாதர்வாயில்
மகாவித்துவான்
**ம-ா-ா-ஸ்ரீ நெல்லையப்பன் கவிராஜரவர்களியற்றியது.**

செந்தமிழின் வரம்புணருந் தென்பாண்டி
வளநாட்டிற் சேற்றூ ருக்கு
வந்தமுக மெனுமுகவூ ரிராமசா
மிக்கவிப்பா வல்லோ னன்பிற்
றந்தமகார் மூவருக்குண் முதல்வனுய்ப்
பலகலையுந் தவமே மேலோங்கப்
பந்தமகற் றிடுதுறைசைப் பதிநமசி
வாயகுரு பரன்பாற் கற்று. (1)

சிவகாசி வாசியாய்ப் பதிற்றுப்பத்
தந்தாதி திரிபந் தாதி
யுவமான மில்லாத புராணமுடன்
மாலையதற் குனுற்றி மேலாந்
தவமாகுந் திருப்பரங்குன் றத்துறையு
முருகர்பிள்ளைத் தமிழும் பாடிப்
பவமான தறத்திருச்செங் கோட்டந்தா
தியும்பாடிப் பரவச் செய்தோன் (2)

ஆயதமிழ்த் திறமைமிக வருமருணு
சலக்கவிவே ளகில மெல்லாந்
தூயநய கவிப்புலவர் தமைநிறுக்குந்
துலையென்னத் தோன்று நின்ற
ஞாயமிகு யாழ்ப்பாண நல்லூர்வா
ழாறுமுக நாவ லன்சீர்
பாயசரித் திரஞ்சொற்று னவன்புகழ்போ
லிவன்புகழும் பரவற் பாற்றே. (3)

உ

சிவமயம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீ ல ஸ்ரீ

# ஆறுமுகநாவலர் சரித்திரம்.

## நூல்.

### சரித்திர நாயகர் துதி.

கங்கைசேர் முடியிறைவன் றிருவருளே
  பொருளென்னக் கலைக ளாலோர்ந்
தங்கைசே ராமலக மெனத்தெளிந்தன்
  பொருவடிவ மாகி யென்று
நங்கைசே ராசையொழி நைட்டிகமா
  ராறுமுக நாவ லார்பூ
மங்கைசேர் நல்லூரி லவதரித்த
  தாதியசீர் வழுத்தல் செய்வாம். (1)

### யாழ்ப்பாணத்து நல்லூர்.

இலங்கு மீழம்பொன் னெனும்பரி யாயத்தா லின்பந்
துலங்கு பூந்திரு மடந்தையாழ்ப் பாணம்பஃ றுதியு
மலங்கு மன்னவட் குயர்வலக் கண்ணதன் மணியா
நலங்கு லாவிய பேரொளி விளங்கிய நல்லூர். (2)

கலைநி ரம்பலாற் காசினி தனக்குயர் வான
நிலைய டைந்திடு தெளிவினுற் றண்ணிய நீரா
னுலைவில் வெண்மதி யொத்ததா யினுநல்லூர்க் கோடி
யலைவி லாமையு முண்மறு விலாமையு மதிகம். (3)

பாடு பல்கலைச் சங்கமு மேயுமின் பவள
மூடு லாய்த்தழை யுந்திருப் பெறுங்கன முற்று
நீடு மின்பயன் படுநில மடுக்குமிந் நீரா
ணுடு பாற்கடல் போன்றதியாழ்ப் பாணத்து நல்லூர். (4)

மாறு தீரிறை மாசிலை யாவுற வளையு
மேறு பல்லுயிர்க் காசையே மிகவிளைத் தெழுநல்
லாறு காட்டுநா வலரையுந் தாங்குமிவ் வழகா
ஞறு பூம்புகழ் மேருவே யென்னலா நல்லூர். (5)

புகழ்வ லாரியங் கூர்தரு கனந்தெரி புலவர்
நிகழ்தல் கற்பகத் தையலர் நிறைதனன் னேய
மிகழ்வி லெவ்வகைப் போகமும் விளைதலா மியல்பா
லகழ்சு லாவுநல் லூரொரு பொன்னுல காமால். (6)

தேரு மின்படை சத்தியங் கைவசஞ் செயலா
லாரு மிச்சிகா வளமுற வேறலா லந்தங்
கூரு நல்லிரு மாதரை மருவுசீர் கொளலா
ஞரு லாங்கும ரனையுமே நிகர்ப்பது நல்லூர். (7)

குலவு சங்கமங் கைப்பற்றஞ் சக்கரங் கொள்வார்
நிலவு மேன்மையால் வைகுந்த நிகர்க்கினு நீதி
பலவு லாவுநல் லூரினிற் படியளப் பார்க
ளலகி லாரங்க ணொருவனே யவனுமா லானேன். (8)

மயர்வி லாமலெந் நன்மையு மலிதலால் வல்லோ
ருயர்வி னேங்குமிந் நகரநல் லூரென வுரைக்கும்
பெயரி னுண்மையே மான்மிய முழுவதும் பேசு
மயர்வு சான்றநா மினைத்தெனப் பாடுவ ததிகம். (9)

### பாண்டிமழவர் குடி

ஆயவிந் நகரில் வாழ்வா ரகிலம்யா வையுங்கைம் மாறு
பாயமுங் கரு தா தென்றும் பாதுகாத் திடுங்கார் காத்த
தூயவே ளாள ரன்னர் தொல்குலம் விளங்கத் தோன்றும்
வாயமை சீர்சால் பாண்டிமழவர்தங் குடியே மல்கும். (10)

### ஞானப்பிரகாசர் மரபு

மல்குமக் குடிமுன் செய்த மாதவத் தாலே யன்பு
பில்குமெய்ப் பொருள்சேர் ஞானப் பிரகாச ரெனும்பேர்
பெற்றுத்
தொல்குலக் கொழுந்து போலத் தோன்றினு ரொருவர்
யார்க்கு
நல்குமிப் பெரியர் தஞ்சீர் நவின்றிட வல்லர் நாமோ. (11)

ஆயினு மாசை யாற்சற் றறைகுவ மறத்தா றன்றிப்
பாயிரும் பறங்கிக் காரர் பற்றியாழ்ப் பாணம் வாழ்நாண்
மாயிருங் குடிகா ளெங்கோ மானுண வழங்கல் வேண்டு
நீயிரும் பசுவொவ் வொன்று நேர்மென நிருமித் தாரால்.

என்செய்வோ மென்செய் வோமென்
றிரங்கியக் குடிக ளெல்லா
முன்செய்தீ வினையென் றெண்ணி
முறைமுறை கொடுபோய் முன்றந்
தின்செய லொன்றுந் தேரா
திருக்குநா ளிவர்நா ளெய்தப்
புன்செய லீது நாமும்
புரிவது தகாது போலும். (13)

என்றுநைந் துருகி யாவொன் றிந்நகர்க் கிறையா மீனன்
கொன்றுசாப் பிடும்பொ ருட்டுக் கொடுக்கினும் பாவங்கூடு
மின்றுநா மொருவர் காணுதிவண்விட் டேகுதலே நன்றென்
றன்றுதா மிரவி லேகி யருட்சிதம் பரம டைந்தார். (14)

அத்தலத் துள்ள தீர்த்த மாடிநீர் மிளக ருந்திப்
பத்தாரம் விரதம் பூண்டு பாசித்து நாற்பத் தைந்து
வைத்தநா ளம்மை கோயின் மருங்கிருந் தருள்கை வாங்கி
யுத்தர தேயந் தன்னு ளுயர்கௌ டத்தை யுற்ருர். (15)

மறைமுனி யொருவ ராங்கு மகார்க்குமீ மாஞ்சை தர்க்க
முறைவியா கரண மாதி யோதுவித் திடல்கண் டுள்ள
நிறைதர வவற்றைத் தூர நின்றுநித் தியமுங் கேட்பர்
குறையறு மிவரை நெஞ்சுட் குறித்தொன்று மவருங் கூருர். (16)

அந்நிலை நிகழு நாளி லனையவா சிரியர் கற்பார்
தந்நிலை சோதிக் குங்காற் றகும்விடை தராது நின்ரு
ரிந்நிலை யுணர்ந்து தூரத் தெய்திநின் றிடுமிம் மேலோ
ரெந்நிலை மையுந்தேர்ந் துள்ளா ரென்றழைத் தியம்ப
[லுற்ருர். (17)

இங்குநீ வந்த நாடொட் டெம்மிடங் கேட்ட வெல்லாந்
தங்குமா றியம்பு கென்னத் தாந்தெரிந் தவைகண் முற்று
மங்குமா ணுக்க ருள்ள மதிசயித் திடச்சொற் ருர்தேர்ந்
தெங்குநுண் ணறிவின் மேலோ ரேயுயர்ந் தனரென்
[றெண்ணி (18)

போதகர் நீயே மேலாம் பூசுர னெனப் புகழ்ந்து
பேதமி லாமன் ஞானப் பிரகாசர் தமக்குப் பின்ன
ரோதலா முறைகற் பித்தா ருயரறி வுறுமா ணுக்க
ராதல்கண் டனரேற் கற்பி யாதெவ ரிருப்ப ரம்மா. (19)

வேதமீ மாஞ்சை தர்க்கம் வியாகர ணங்க ளாதி
யாதர வாகக் கற்ருர தற்பினு சிரிய ரையா
நீதமிழ் நாடு சேர்வாய் நிறைபய னங்கு நின்ருேர்
மேதக வெய்த வென்ன விடைகொடு மீண்டு சேர்ந்தார்.

சேர்ந்தபின் புயர்வொப் பில்லாத் திருவண்ணு மலையா
சாந்தருண் மயமா ஞானு சாரியன் றன்பாற் காவி [தீனஞ்
யார்ந்ததூ சேற்றுச் சந்நி மாசமுற் றருட்சித் தாந்தங்
கூர்ந்தநூல் பலதெ ளிந்து கொண்டனர் குறையொன்
[றில்லார். (21)

பின்னருஞ் சிதம்ப ரம்போய்ப் பிரிவிலா துறைந்தி யாரு
முன்னரும் வடநூ றன்னி லுளபவுட் கரமுன் னூலக
ளின்னரும் வியாக்கி யான மெழுதியு மதிற்சின் னூல்க
ளென்னரும் வியக்கச் செய்து மிருந்தன ரிம்மட் டேயோ.

சீர்க்குமே லான வின்பந் திகழ்சிவ ஞான சித்தி
யார்க்குமோ ருரைசெய் தப்பா லவையெலாந் தமதா
[தீனத்
தோர்க்குமே தகவுண் டாக வொப்பித்தா ரங்க ணோர்ந்து
பார்க்குநீர் மையரெல் லீரும் பார்மின்கற் பனையீ தன்றே.

தெரிதரு மினைய நூலா சிரியர்பின் சிதம்ப ரத்தி
லுரியதம் பெயரா லோங்கு மொருதிருக் குளமுள் ளன்பா
லரிமுத லோருந் தீர்த்த மாடுவா னமைத்தா ரென்றும்
பெரியதா மதுவே ஞானப் பிரகாச மெனப்பி றங்கும். (24

## பெற்றூர்.

இவர்சிதம் பரந டேச ரிருஞ்சர ணிடைப்பு குங்காற்
கவர்தரு வரத்தி னூலோ கருதுதம் மரபிற் கற்ற
தவர்பலர் முன்செய் மெய்ம்மா தவத்தினே தமக்குப் பின்
ரவர்பல ருளுஞ்சி றந்தோ ராயவர் கந்த ரென்பார். [சா

அனையரில் லறத்திற் கேற்கு மருட்சிவ காமி யாரா
மனைவியர் தமைம ணந்து மனையறம் பூண்டு வாழ்நாட்
டனைநிகர் சைவ மோங்கத் தமிழ்தலை யெடுப்பத் தாமே
புனையும்வே தாகமங்கள் பொற்பொடும் பொலிய மன்னே.

அருட்படு சைவ மன்றி யகன்புறச் சமய மாங்கா
ரிருட்படு குழியில் வீழ்ந்தா ரினிவிழ நினைவா ரியாருந்
தெருட்படும் வகையீ டேறச் சிவமய மெங்குந் தேங்க
மருட்படு சமய வாதம் வலியழிந் தோட மன்னே. (27)

புவிபுகழ் சிவபு ராண போதநூற் பொருடெ ரிந்து
குவிமனங் குதுக லிப்பக் கொளுங்கழ கங்கு லாவச்
செவியினுற் பெயருங் கேளாத் திறன்மறைந் திருந்த சீர்சால்
கவிஞர்நூ லுரைய னைத்துங் கற்றிலார் தாமுங் காண. (28)

கற்றலுங் கற்றற் கேற்பக் கருதுநாற் பயன்கைக் கொள்ள
நிற்றலு மிவைபி றர்க்கு நினைவினி னீங்கா வண்ணஞ்
சொற்றலு மிவையே கற்ற தூயவர்க் கழகா மென்ன
முற்றலு மெம்பேரல் வாரு முன்கண்டிம் முறையி னிற்ப.

சைவமே நிறுத்துஞ் சைவா சாரியர் நால்வ ரோடுங்
கைவரு மெந்த நூலுங் கண்டுரை கற்றோர்க் கின்பஞ்
செய்வகை யெழுத வல்லா சிரியர்க ளுல்வ ரோடு
மைவரா மென்ன யார்க்கு மதிசய மதிக மாக. (30)

இன்னமு மின்ன வின்ன வென்றிடப் படாத நன்மை
யென்னவு நாளு நாளு மெழீஇத்தலை யெடுப்ப யாமேற்
சொன்னவோர் கந்த ரென்னுந் தூயருந் துணையா நிற்கு
மன்னமன் னவராங் கற்பி னருட்சிவ காமி யாரும். (31)

நாவலருதயம் (18-12-1822)

திருவமர் காத லான்முன் செய்தவப் பயன்றி ரண்டு
கருவமர் தரலு முள்ளங் கசிந்துநெக் குருகிக் காணும்
பருவமா றிரண்டுந் தாங்கிப் பாரெலாம் பரவும் பால
ரொருவரைப் பெற்றார் யாண்டு முயர்தவம் போலொன்
[றுண்டோ. (32)

பிறந்தவப் பொழுதே மைந்தர்ப் பெற்றவர் முன்னம் பெட்
[பாற்
சிறந்தமா தவமென் செய்தார் தெரிந்தவர் செப்பு வீரென்
றுறந்தவன் பெழீஇக் குழீஇயவொவ்வொரு வருமே தம்மை
மறந்தனர் களிப்பின் மூழ்கி வலப்புயந் துடிக்க மன்னோ. (33)

ஜாதகம்

மைந்தர்தோன் றியநாள் சாலி வாகன சகாத்த மென்னு
நந்தமா யிரத்தேழ் நூற்று நாற்பத்தைந் தெண்ணி னுடி
வந்தசித் திரபா னுற்ற மார்கழி மதியைந் தேதி
சிந்தலில் புதனி ராவிற் சிங்கலக் கினஞ் சிறக்க. (34)

உதையலக் கின்த்திற் கைந்தி லுதயன்சேய் புந்தி சுங்கன்
றதையுறு மிராகோ ராறிற் சந்திர னேழிற் சார்மன்
பதைபுகழ் சனியொன் பானிற் பத்திற்பொன்பன் [னிரண்டிற்
சிதைவுறு கேது கூடித் திகழ்ந்தனர் சிறந்து தோன்ற. 35

பூருவ பக்கத் தைந்து பொருந்திய திதிய விட்டம்
பாருறு கரணந் தன்னிற் பாலவ கரணம் பார்க்கி
லோருவ மையுமில் வச்ர யோகமு மொன்று கூடிச்
சீருறு சுபநா ளென்று தெரிந்தனர் தெளிந்த மேலோர். 36

அன்னப்பிராசனம் முதலியன

இவையெலாஞ் சாத கன்ம மெழுதுவோ ரெழுதச் செய்து
சுவையுண வூட்ட லாதி சொற்றிடுங் கருமம் யாவை
யவைமுழு துரிய காலத் தளவிலாச் சிறப்பி னுன்றோர்
சவைபுகழ் தரவி யற்றல் சாற்றலாந் தகைமைத் தன்றே.

மைந்தரைக் கண்டார் கேட்டார் மகிழ்ச்சிபன் மடங்கு [பொங்கிச்
சிந்தனைக் கெட்டா தென்றுற் செய்தவப் பயனு வீன்ற
தந்தைதாய் மகிழ்வெற் றுமோ தனையரைப் பயந்தார் தம்மு
ளிந்தநல் லிருவர் போன்மற் றெவர்பெற்று றியாண்டு மின்றே. (38)

உலகினிற் பெறும வற்று ளுயரறி வுறும கார்போ
னலமுறு பேறின் றென்று நாயனுர் நவின்ற திந்தப்
பலமுறு பாலர் போலும் பாலரை யென்று பார்மேற்
சிலரன்றிப் பலருங் காணத் திகழ்ந்தனர் சிறப்பி னன்றே.

அகலிட மெங்குஞ் சைவ மாக்குசம் பந்த னுரைப்
புகலியிற் பெற்று றிந்தப் புதல்வரைப் பெற்றார் போல்வ
ரிகலிலாக் கல்வி கேள்வி யிருஞ்சிவ பத்தி யாதி
மிகலினு லெங்குஞ் சைவ விளக்கஞ்செய் விதத்தான் மன்னே. (40)

முருகவேள் கொண்ட வாறு முகமென மொழிபேர் தாங்கற்
கருகராம் பால ரென்றே யறிஞரிட் டழைத்துள் ளன்பு
பெருகமா மகிழ்ச்சி கூர்ந்தார் பிதாவினும் பிறைபோ னுளு
மொருகவ லேனு மின்றி யோங்குபு வளர்த லுற்றூர். (41)

**வித்தியாரம்பம் — சுப்பிரமணிய உபாத்தியாயர்.**

முத்தி யாரம் பராபரன் மொய்கழற்
பத்தி யாரம் பலபுனை யாதம
னத்*தி யாரம் பனுடவி னன்மைந்தர்
வித்தி யாரம்ப மேவல் விளம்புவாம். (42)

ஓங்கு மைந்து பிராயம்வந் துற்றிடத்
தாங்கு மைந்து தருங்கலை தந்தையார்
தோங்கு மைந்துறத் தோன்றுநல் லோரையி
லாங்கு மைந்த ருணர வமைத்தனர். (43)

உன்னு மைந்தர்க் குணர்த்திட வல்லனும்
பின்னு சீர்ச்சுப் பிரமணி யன்பெய
ரென்னு மாசிரி யன்னிடத் தின்புடன்
மன்னு பல்கலை கற்பார் வழுவற. (44)

கற்குங் காலத்தி லேதமிழ்க் கல்வியுண்
ணிற்கு மாறு நிரம்பக்கற் பேனென்னுஞ்
சொற்குன் றுதநல் வாஞ்சையுட் சோர்விலா
மற்குன் றுமென வோங்கி வளரவே. (45)

வாக்குண் டாமுத னீதிவ ரம்பினை
யாக்கு நூல்களு மாயுங் கணிதமு
நோக்கு மெய்ப்பொருட் கும்பேர் நுவன்றிடு
தேக்கு சீர்நிகண் டுந்தெளிந் தார்செல்வர். (46)

---

* தியார் குறுக்கல்விகாரம்.

தெரியு மின்னவை கற்றுத் தெளிந்தபின்
பரிவு மேவிய நைடதம் பாரத
மரிய காந்த மறைசையந் தாதியா
முரிய நன்னூ லுரைகேட்க லுற்றனர். (47)

கேட்ட செய்யுட் பொருளைக் கிளர்நெஞ்சுள்
ளேட்ட கத்தி னெழுதுவ ரீதன்றி
வாட்ட மேவி மறந்து மயங்கியு
மீட்ட றிந்திலர் யாரையும் வேண்டியே. (48)

கூடக் கற்குஞ் சிறுர்க்குந்தங் கோட்பொரு
ணீடக் கற்பிப்பர் நேர்விளங் காமந்த
மூடப் பிள்ளை கட்குப்பன் முறைபின்னு
நாடப் போதிப்பர் சோர்வின்றி நாடொறும். (49)

தம்மைப் போற்பிறர் தம்மனந் தன்னையுஞ்
செம்மைத் தாக்குஞ் செயலின ராய்க்கல்வி
யிம்மைக் கும்பய னென்று மறுமைக்கு
மெய்ம்மைத் தாம்பய னென்றும் விளக்குவார். (50)

ஓதி லாரொரு நாளு முளத்திறும்
பூதி யன்ற புகழ்பொருள் பூசைமுன்
ஞதி யாமிவை யொன்று மடைந்திலார்
நீதி யரமென் றவர்க்குநி கழ்த்துவார். (51)

புத்தி நாடொறும் யார்க்கும் பொருந்தப்போ
தித்தி டும்மிவர் செய்கைகண் டோரெலா
மித்தி றத்தநன் மைந்தரை யீன்றிடு
மெய்த்தி ருக்குல மேவிளங் கும்மென்பார். (52)

### விசேட தமிழ்க் கல்வி — வேலாயுத முதலியார்.

அமைதரு கல்வி கேள்வி யான்றதன் றம்பி யார்தங்
கமையறி வடக்கம் வாய்மை கண்டுளங் களித்து மூத்த
தமையனுந் தியாக ராச சற்குண சாலி யன்பு
சிமையமா மலைபோ லோங்கச் செலுத்தின னினைய
[செய்தான். (53)

விளையுமின் பயிரை நாளு மெய்தெரி வார்மேற் ரேன்று
முளையிலே தெரியு மென்னு முதிர்பழ மொழியுள் ளோர்ந்
ளளையுமன் பமையு நல்வே லாயுத னெனும்பே ரண்ண [துள்
லுளையுயர் கல்வி தேறற் கொப்பித்தா னிளையார் தம்மை.

அன்னவன் றனது மைந்த னுனசம் பந்த னேடு
மின்னமைந் தரையும் வைத்தே யிலக்கண விலக்கி யங்க
ளென்னரும் வியக்கு மாறங் கெளிதினிற் கற்பித்திட்டான்
பன்னரும் வயசப் போது பன்னிரண் டாயிற் றன்றே. (55)

### பன்னிரண்டு வயசில் ஆங்கிலக் கல்வி
### பீற்றர் பார்சிவல் பாதிரியார்.

ஈதுதேர் முன்னேன் றம்பி யிளையவ னெனினும் மூத்தோ
னேதுநூற் கல்வி யாலென் ௱ெப்புயர் விவனுக் கிங்கே
யேதுநா னிராச பாஷை யென்னுமிங் கிலிசு மேயிப்
போதுகற் பிப்பே னென்று பொருவிலா மகிழ்ச்சி பூத்து.

ஆற்றரு மன்பா லந்நா ளாங்கில வித்யா சாலைப்
பீற்றர்பார் சிவலெ னும்பேர் பெற்றபா திரிபாற் பேணு
மேற்றமா ரிவரை யுய்த்தங் கெளிதினிற் கற்பித் திட்டான்
சாற்றரு மதுநி ரம்பத் தாங்கற்குந் தனேயர் தாமும்.

### மேலும் விசேட தமிழ்க் கல்வி
### சரவணமுத்துப் புலவர் சேனுதிராய முதலியார்.

இன்னுஞ்செந் தமிழே நாளு மேற்றமாக் கற்க வேண்டு
மென்னும்பே ராசை யாலே யியன்றசே னுதி ராயன்
மன்னுஞ்சீர்க் கல்வி கேள்வி மலிசர வணமுத் தென்னத்
துன்னும்பே ரவனும் பாடஞ் சொல்லுமா சிரியராக. (58)

கற்றனர் தெளிவா நன்னூற் காண்டிகை விருத்தி யோடு
மற்றிர குவமிசஞ்சீ வகசிந்தா மணிமு ன்னுத
லுற்றவைங் காப்பி யங்க ளுயர்திரு க்கோவை யார்சீர்
பெற்றவள் ளுவரே யாதிப் பெரியநூல் பலவும் பின்னும்.

இவ்விரு கலைக டம்மி லிவர்க்கிணை யில்லை யென்னச்
செவ்விதி னுணர்ந்து பின்னர்ச் சிவபுரா ணங்க ளெல்லா
மௌவிய மில்லா மேலோ ராலயந் தனில ருத்த
மெவ்விதஞ் சொல்கின் ருர்கேட் டிடுவமென்
றெண்ணிச் செல்வார். (60)

சென்றுகே ட்டிடுமப் போதாட் சேபத்துக் கிடமா யுள்ள
தொன்றையும் விடாம லெண்ணி யுயர்பிர சங்கி யாரை
நன்றுறு முடிவிற் கேட்பர் நன்கவர் நவின்ருற் கொள்வ
ரின்றெனிற் றக்க வாறங் கின்பொருள் விளக்கி யீவர். (61)

## தமிழாங்கில ஆசிரியப் பதவி.

தேர்சிறு பருவத் தேயித் திறம்பிறர் தெரியா ரென்று
பார்சிவ லறிந்தி ரண்டும் படிப்பிக்கும் படியே வேண்டக்
கூர்சில காலம் வேண்டு கோளுக்காக் கூலி கொள்ளா
*தேர்சிருர் பலர்க்குங் கற்பித் திட்டன ரிணையி லாமல். (62)

## பத்தொன்பதாம் வயசிற் பிரசித்தி

ஆயநாள் பத்தொ டொன்ப தாண்டவர் வயசி
யாழ்ப்பாணம்
பாயவைப் பெங்கு மெல்லாம் படித்தன ரிவர்க்கொப் பாக
வேயசீ ரறிவின் மேலோ ரிலையெனும் பெயரே யாக
மேயபார் சிவலுந் தேர்பு வியந்துவிம் மிதமேற்
கொண்டான். (63)

## பண்டிதருத்தியோகமும் பைபிள் திருத்தமும்

கொண்டிவர் தம்மாற் பைபில் குணப்படத் தமிழி னேங்கு
பண்டித ராக வைத்துப் பைபிலைப் பலவு மோர்ந்தே
யெண்டிசை புகழு மாறங் கியலினிற் றிருத்து மென்ருன்
றெண்டிரை யுலகோர் மெச்சத் திருத்தினர் திருத்துங்
காலை. (64)

---

* ஏர்சிருர்-எதுகைநோக்கி யியல்பாயிற்று.

### சித்தாந்த நூற் பயிற்சி.

வைவக லாக்கி றித்து மதமெங்கும் பரவ வாய்மைச்
சைவமா மதஞ்சு ருங்கத் தாங்கண்டு தரியா ராகி
யைவரை யடக்குஞ் சீர்ச்சித் தாந்தநூ லனைத்துங் கற்று
மெய்வரு முளந்தெ ளிந்தார் மிகவுமுன் னையின்மே லாக.

### வடமொழிப் பயிற்சியும் திருமுறைப் பயிற்சியும்

உவமையில் கருணை யாலே யுயிர்கட்குப் பொதுச்சி றப்பாச்
சிவபிரா னருள்செய் வேத சிவாகமந் தெளிய வேண்டி
யவசியம் வடநூ லெல்லை யறிந்தவை யுணர்ந்த வற்றின்
றிவள்பொரு ளெனத்தே வார திருவா சகமுந் தெளிந்தார்

### கற்பவை கற்று ஊருணியாயினர்.

ஆயவிக் கலைகண் மூன்று மறிந்துயர்ந் தனர தன்றி
யேயசாத் திரங்கட் கெல்லா மிறையவ ரிவரே யென்னத்
தூயபேர் பரவ யாருந் தோத்திரஞ் சொலித்து தித்துப்
பாயநல் விடயம் யாவும் படித்திடத் தலைப்பட் டார்கள்

அண்டுவார் தங்கட் கெல்லா மரனுயி ரறம்வி டாமன்
மண்டுபா வஞ்சு வர்க்க நரகொடு மறுபி றப்பு
முண்டுநீர் காண்மி னென்னு வுணர்த்தினு ருணர்ந்தோ ரீது
பண்டுநாங் கண்டுங் கேட்டும் படித்திலோ மெனப்ப
யின்றூர். (68)

இன்னநூன் முழுது மெங்கே யெவரிடத் தென்று கற்று
ரென்னவாச் சரிய மெய்தி யிவரிடத் தன்பெல் லாரு
முன்னம்வைத் ததற்கு மேல்வைத் தொழுகுதன் முறை
யென் றோர்ந்தா
ருன்னரு மறிஞர் பாலன் புறுவறி வுள்ளோர் யாரே. (69)

### இலவசப் படிப்பித்தல்.

இப்படி நிகழுங் காலத் திருபதோ டிரண்டு சேர்ந்த
வொப்பறு பிராய மெய்தி யுயர்பய னுலக மெய்தத்
தப்பறு கருவி நூல்கள் சமயநூ லோடு தாமே
செப்பமார் சிறூர்சில் லோரைச் சேர்த்துப தேசித் திட்டார்

### பைபிளரங்கேற்று வைபவம்.

வேதனம் பெருதிவ் வாறு மேம்படக் கற்பிப் பாராம்
போதகர் தமைச்சென்னைக்குப் போய்வர வழைத்துப்
போனுன்.
பாதக மிலாம லச்சிற் பைபிலைப் பதிக்க வேண்டி
மாதமிழ் விரும்பும் பார்சி வற்பெயர் வாய்ந்தோன்
மாதோ. (71)

### வேறு.

சென்னைநகர் சென்றவுட னங்குள்ளா ரிவர்வரவு தெரிந்து கொண்டு, முன்னையாழ்ப் பாணத்திற் றமிழறிஞு ரரியரெந்த முறையாற் பைபி, றன்னையிவர் திருத்திஞு ரிங்குளபண் டிதர்சமுகந் தனில்வா சிக்கிற், பின்னையிது பிழையிலையென் ருெப்பேறி லச்சியற்றப் பெறுமே யென் ருர். (72)

இவையெலாங் கேட்டபார் சிவலுள்ளந் தளர்ந்துதன தியல்வல் லாரை, யவையிலரங் கேற்றுங்கா னன்குமதித் துச்சரியென் பாரோ வன்றி, நவையென்பா ரோவென்ன நாந்திருத்து மிதிலேது நவின்ரு ராயிற், சுவையுறுசெந் தமிழ்மேற்கோள் காட்டியொப்பேற் றுதுமென்னத் துணி ந்து சொன்ஞர். (73)

அப்போது சிறந்தவித் துவான்மகா லிங்கைய ரவரை யன்ஞே, ரிப்போது நீவிரிவர் திருத்தியபை பிலைச்சரி பார்த் தியம்பு கென்ன, வொப்போதும் படிமுழுதும் பார்த்துமிக வசனநடை யுயர்ச்சி யுற்ற, தெப்போது மிது போலத் திருத்தமுரு திவ்வாறச் சிடுகவென்று. (74)

தெள்ளுதமிழ் யாழ்ப்பாணத் தினிற்சிறந்ததினியிவ ராற் சிறப்பு மேன்மே, லுள்ளுறவோங் கிடுமென்ன வோ தினர்யா வருமொப்ப லுற்ற தோர்ந்து, நள்ளுறுபா திரியாரும் பண்டிதரு மச்சியற்றி நகர நீங்கி, யள்ளுறுகா தலின்விரைவின் யாழ்ப்பாணம் வந்தினிதங் கமர்ந்தா ரப்பால். (75)

## மதமாற்றத் தடை.

தம்முடன்கற் ருரிருவர் சின்னப்பா தில்லைநா தப்பேர் பூண்டோர், மம்மர்மதி யாற்கிறித்து மதப்பிரவேசஞ்செய்ய மதித்த தோர்ந்தங், கம்மவது பொய்ம்மதமாஞ் சைவமே மெய்ம்மதமென் றனந்த மாகத், தம்மதியாற் றிட்டாந்த முடன்காட்டித் தடுத்தனரத் தடுத்த செய்தி. (76)

## பார்சிவல் போக்கு

தம்மைப்பண் டிதராகப் பெற்றபார் சிவலறிந்து தகுதியாநீர், செம்மைப்பண் பினரிருவர் தமைத்தடுத்த லெனவிஞய்ச் சினவும் போதி, லிம்மைக்கும் பயன்மறு மைக்கும்பய ஞஞ்சைவத்தி னியல்பு காட்ட, லெம்மைக்குங் கடமைநமக் கினிநும்பாற் பண்டிதரா யிரேனென் றிட்டார். (77)

பாதிரியங் கிவர்வைராக் கியமுணர்ந்து தனது மதம் பரம்பச் செய்தற், கேதிரிவர் வாயடக்கும் பகையெனினுந் தமிழ்போதித் திடுதற் கிந்த, மாதிரியோர் பண்டிதரைப் பெறலரிதா தலின்மிகச்ச மாதானஞ்செய், தாதிரி லோகமும்புக ழுநீர்பொறுத்திங் கிருக்கவெனவன்பின் வேண்ட. (78)

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

பின்னுமதற் குடன்பட்டுப் பரசமய விருளகற்றும் பெருஞ்செஞ் சோதி, யென்னுமவர் தங்கடமை நடாத்திவந் தார்நடத்தி வருமிதன் மேனல்லூர், மன்னுகந்த சாமியா லயத்திலொரு மகோற்சவத்தில் வந்தக் கோயி, றுன்னுசிவா கமவிரோ தப்படச்செய் திருப்பதனைச் சூழ்ந்தா ராய்ந்து. (79)

மூலமூர்த் திகளாதி வேற்படையா யிருப்பதுநன் முறையன் றென்னச், சாலவுணர்ந் தம்மட்டோ சிவ

தீக்கை யிலாராரா தனைசெய் தற்குப், பாலரல ரென்ப துந்தேர்ந் தக்கோயி லதிகாரி பாற்போ தித்தார், சீல மிலா வவனுமதற் குடன்பட்டா னலனினியென் செய்வ தந்தோ. (80)

**வண்ணைச் சிவன் கோயிலில் சைவப்பிரசங்கம் (வயசு 25)**

என்றங் ககன்றுசைவத் துண்மையொன்று மறியாம லெண்ணி லார்கள், சென்றந்தக் கிறித்துமதப் படுகுழியி னுள்வீழுஞ் செய்தி கண்டு, நன்றன்றே யினிநமது சிவசமயத் துண்மையெலா நம்ம னோர்க்கோர், மன்றந்த முறுமிடத்திற் ருபித்துப் புகல்வமென மனத்தி னேர்ந்து. (81)

வண்ணார்பண் ணையிலிருக்கும் வைத்தியநா தன்கோயில் வந்துட் சென்று, கண்ணுரத் தரிசித்து வசந்தமண்டபத்திலங்கட் கண்டோரெல்லா, மெண்ணலே மதிப்பரிய சபையொன்று கூட்டியபின் பியங்குஞ் சைவத், துண்ணுடு பொருளுமத னுண்மையும்போ தித்தனர்யா ருவவா தாரே. (82)

இந்தவித மொவ்வொருசுக் கிரவாரத் திரவினிலு மினிமை யான, செந்தமிழின் பிரசங்கந் தாஞ்செயல்போற் பிறர்தமையுஞ் செய்யச் செய்தார், கந்தசுவாமியினல்லூ ராலயத்தின் குற்றமங்குக் காட்டி னராங், கெந்தவித முந்தெரிந்தோர் சரியென்றார் சிலமூட ரிகழ்ந் தா ரன்றே. (83)

வயசிருபத் தைந்தாமப் போதிந்தப் பிரசங்கம் வந்து கேட்டோ, ரயலிருந்து கேள்வியுற்றோ ரநேகருக்குப் பயன் பட்ட தந்தோ விந்தச், செயலினர்முன் னிருந்தனரேற் பொய்ம்மதமித் தேயத்திற் சிறிதா னுலு, முயலடையா தென்செயலா முயிர்கள்செயுங் கன்மத்துக் குலகின் மீதே. (84)

### பாதிரிகள் கலக்கமும் முறையீடும்

எண்டிக்குஞ் சுவமதமே பரம்புதற்கும் பரமதத்தி லெலாம்பொ யென்று, கண்டிக்கு மதற்கும்வேண்டு வன பிர சங்கஞ்செய் காலந் தன்னில், *விண்டிக்கும் புகழ் பெருகு மாறுமுக நாவலரை வியந்தா ரேனு, முண்டிக் குப் போதனைசெய் பாதிரிமார் பார்சிவல்பா லோடிச் சென்று. (85)

நாங்களிங்கு வரும்போது மதற்குமுன்னு மில்லாத நடக்கை யெல்லாந், தாங்களபி மானம்வைத் தபண்டி தர்போ தித்தானஞ் சமயந் தான்மே, லோங்கவெவ்வா றினியிவரைப் பண்டிதரா நீர்வைத்த லுதவா தென்ன, வாங்கவனும் பண்டிதரை வரவழைத்து வினவுவா னறி யான் போல. (86)

சிவன்கோயி றனில்வெள்ளிக் கிழமைசைவப் பிரசங் கஞ் செய்கின் றீரா, மெவன்கூறு மெனவுமது கடமைக ளிற் குறைவிதென லெதுவென் றின்னே, ரவன்கேட்க வுரைத்திடலும் பேசாமென் மௌனமா யமர்ந்து சென்றே, துவன்போம் பாதிரியீர்நீ ரிவர்போற் பண் டிதர்கிடை யா துலகி லென்றான். (87)

### சைவப் பிரசங்கமும் பயனும்

பின்னுமிவர் வழக்கம்போற் பிரசங்கங் கேட்பார்க் குப் பெரிது ஞானம், பன்னுவதாப் பலநூலின் சாரமா மறுமையிம்மைப் பயன்களெல்லா, மன்னுவதாச் செய்வது கேட் டுயர்ந்தவித்து வான்கண்மறை வல்ல மேலோ, ரென்னுமனந் தம்பேரு மதிசயித்தார் பிரசங்க மேதேதென் னில். (88)

நித்தியமாஞ் சைவசம யமுமந்தச் சமயிகளந் நிலையி னின்று, பத்திசெயுங் கடவுளுமப் பத்திசெய்வார்க் கங்க

---

* விண்டிக்கும் - ஆகாயமாகிய திசையும்.

மொடு பயனு மிட்ட, சித்திதரு சிவாலயசே வையும்வேதா
கமவியல்புஞ் சிவபி ரானைப், புத்தியினின் மறவாத
தொண்டரியல் பாதியபுண் ணியமும் போலும். (89)

இவ்வளவு முக்கியமாம் விடயமெலா நியாயமொடு
மெடுத்துக் காட்டு, மவ்வளவு கேட்டவர்க்குண் மாமிச
போ சனஞ்செய்தோ ரதனைவிட்டா, ரெவ்வளனு மழிக்கு
மது பானஞ்செய் தோரதனை யிகந்தார் தீக்கை, செவ்
வனுற்று மறந்தவர்மீட் டும்பெற்றுச் சந்திமுறைசெய்ய
லானார். (90)

உருத்திராக் கம்புனையா திருந்தவரெல் லாம்புனைந்தா
ருருத்தி ரன்பாற், கருத்திராப் பதகரெலாஞ் சிவால
யஞ்சென் றெதிர்வணங்கிக் கமலத் தாளுள், ளிருத்தினார்
தோத்திரஞ்செய் யாரதுசெய் தார்பிறரை யீர்த்திம்
மார்க்கந், திருத்தினார் பூதியணி யாரணிந்தார் விரத
தவஞ் செய்யார் செய்தார். (91)

சைவமத நூலெல்லாம் பொய்யென்னும் பாதிரிமார்
தம்மைப் பல்கால், வைவரதன் பின்வேத சிவாகமங்கள்
சிவனாரான் மாக்கட் காகச், செய்வாரா னாரென்று
தெளிந்துகொண்டார் சித்தாந்தந் திகழ்பன் னூலு, மெய்
வரவோர்ந் தவரடியார் செய்ததென வாசித்தார் விசு
வா சித்தார். (92)

மறையெனும்வே தாகமநூற் றெளிவெனத்தே வார
திரு வாசகங்கண், முறையறியா ரஃதறிந்து நெட்டு
ருச்செய் தோதலுற்றார் மும்மூர்த் திக்கு, மிறைவராஞ்
சிவபெருமா னொருவரே யவர்வழிபாடி யற்று வோரே,
கறையினெறிச் சித்தாந்த சைவரெனக் கணித்ததுவே
காத லித்தார். (93)

சிவாலயவந் தனைமுறைமை தெரியாமற் செய்தகுற்
றஞ் சேரா தாக, வவாமிகவே தெரிந்துசெய்தார் பெத்த
நிலை தனினம்மு ளறியா வண்ணந், தவாதிருந்து முத்தி

நிலை தனிற்றம்மு ணமையடக்குந் தம்பி ரான்பா, லுவா மலியன் பாற்றுவதே தகுதியெனச் செய்தனந்த ரொழுகி ளுரே. (94)

ஒழுக்கமறி யாரெலா மஃ தறிந் தார்நங் கடவுளுற் சவங்கொண், டழுக்ககல வெழுந்தருள்வ தான்மாக்கட் காகவென வாய்ந்தக் கால, முழுக்கமனம் புறம்போகா தெதிர்கண்டு பணிந்துநனி முதிருமன்பு, பழுக்கவருட் சீபாதந் தாங்கினர் பற்பலர்யாம் பகரற் பாற்றே. (95)

ஆக்கஙயன் பில்லாம லடித்தவர்தா மவைசிவலோ கத்தினி ன்றிம், மாக்களுல கினில்வந்த வென்றுமவை யவயவத்தின் மல்குந் தேவ, ரூக்கமிகு முனிவர்வசிக் கின் றதுவுஞ் சிவபெருமா னுவப்பி னுடைத், தேக்கநனி கவ்வி யமைந் துதவுவன வாமென்றுந் தெளிந்து கொண்டு. (96)

பூசையன் பினூற்புரிந்து புன்முதலி யனவுதவிப் போற் றி வந்தார், காசைவீண் செலவாகக் கவறுசது ரங்கத்திற் கைவிட் டோர்கண், மாசைவிளை விக்குமிவை யென விக ந்து சற்சனர் சன் மார்க்கந் தன்னி, லாசையுட னடந்த வர்சொன் னல்வழியிற் செலவுசெய்தே யானந் தித்தார்.

## யாழ் சைவப்பிரகாச வித்தியாசாலை

இவ்வாறு சனங்களெல்லாந் திருத்தமுறு வதுகண்டங் கியனு வல்லா, ரெவ்வாறும் பரமதத்திற் புகாவண்ணஞ் சமயநூ லெல்லாங் கற்கு, மவ்வாறு தகுந்தகல்விச் சாலை யொன்று தாபிப்ப தமையு மென்று., செவ்வாறு பயில் வண்ணுர் பண்ணையிலங் கனஞ்செய்தார் சிறப்புற் றேங்க. (98)

## உத்தியோக பரித்தியாகம்

இவ்விதநஞ் சைவசமயி கட்கெலாம் போதனைசெய் திடவுஞ் சைவச், செவ்வியசீர்ப் பிரசங்கஞ் செய்திடவும் வாணுளைச் செலுத்து வோமென், றெவ்வியலுந் தேரு

மிவர் பார்சிவற்குத் தமிழ்போதித் திடல்கை விட்டார், திவ்வியதஞ் சோதரர்க டடைசெயவு மதனையொரு சிறி துங் கொள்ளார். (99)

### கற்பித்தல், நூலியற்றல், நூற்பரிசோதனம்

பெருந்தொகையாம் வேதனமு மதியாமற் பாதிரி பாற் பெயரும் போதி, லிருந்தவய சிருபத்தா றுமதன் மேற் றம்மொடுகற் றிட்டுத் தம்மாற், றிருந்தமுனங் கிறித்துமதப் படுகுழியில் வீழாத தில்லை நாதற், கருந் தமிழ்நூ லிலக்கணமு மிலக்கியமுங் கற்பித்தா ரளவி லாமல். (100)

எவருதவி யேனுமின்றி யித்தொடக்கந் தொடங்குமிவ ரெவரா ஞலுஞ், சிவபெருமான் விதித்தவிதி தனக்குமா றுநடந்தாற் சினமேற் கொண்டங், கவரவரைக் கண்டிப் பா ராதலினுற் பொருமைசின மதிகப் பட்டுத், தவறுறு பற் பலவிடையூ றிவர்க்கியற்றி ஞரந்தோ தயையி லாரே. (101)

எவ்விடையூறு றெவர் செயினுஞ் சிவசமயம் வளர் விக்கு மின்னோர் தம்பால், வெவ்விடையூ ரரன் கருணை பதிதலால் விரோதமொன்று மேவ வில்லை, யவ்விடையவ் விரோதஞ் செய்தவரெலாம் பின்னர் நட்புற் றடுத்துச் சூழ்ந்தாரிவ்விடைய நிறைவேற்றச் சிலசிலபுத்த கங்களிலா திருத்தல் கண்டார். (102)

### அச்சுக்கூடம் வாங்கச் சென்னைக்குச் செல்லல்.

தேடிவர வழைத்தனந்தஞ் செந்தமிழேட் டுப்பிரதிச் செய்யு ளெல்லா, நாடியவை களில்வழுக்க னில்லனவாச் சோதித்து நவமா கத்தாங், கூடியவா றேசிலநூல் களைச் செய்து மவைபதிக்குங் குறிப்பினுலே. நீடியவச் சியந்திர மொன் றவசியம்வேண் டுவதெனவுண் ணினைந்தாரன்றே.

### வேறு.

இனைய போதகா சிரியர்மா ணுக்கரு ளெவர்க்கு
முனைவ ஞஞ்சதா சிவப்பெயர் கொண்டமூ தறிஞன்
றனையுங் கூட்டுபு சென்னைமா நகர்தனைச் சாரு
நினைவி னுற்பய ணம்புறப் பட்டனர் நேர்ந்து. (104)

வேதம் பூசித்துப் பூட்டிய கதவினை விமலன்
பாதம் போற்றியே யப்பர்தாந் திறந்திடப் பாடும்
போதஞ் சேர்தலம் புக்கனர் வணங்கினர் போனுர்
நாதன் றேவிமா மயிலுருக் கொண்டநன் னகரில். (105)

### செல்லும் வழியில் திருவாவடுதுறைப் பிரவேசம்.

அங்கு நின்றும்போ யெங்குல குருவர சாட்சி
தங்கு சீர்த்திரு வாவடு துறையினைச் சார்ந்து
பொங்கு மாமறைப் பூசுரற் காயிரம் பொன்முன்
னெங்கு நல்லிசை பெறத்தரு மிறையைவந் தித்து. (106)

திரும டத்தைவந் தடைந்துபின் ஞானதே சிகர்கண்
மரும லர்ப்பதம் வணங்கின ரிவர்வரு வதன்முன்
பெருமை யுற்றுயர் கல்வியாற் கேள்வியாற் பெரிது
மருமை பெற்றிடும் வல்லரென் றங்குளா ரறிந்தார். (107)

### ஆட்சேப சமாதானம்.

ஓங்கு பற்பல விலக்கண விலக்கியத் துள்ளுந்
தேங்கு சைவசித் தாந்தசாத் திரத்தினுஞ் சில்லோர்
பாங்கு பெற்றவாட் சேபங்கள் பண்ணினர் பலவா
ருங்கு சொற்றனர் விடைகளோவ் வொன்றுக்கு மமைய.
(108)

### ஆதீனத்திற் சைவப் பிரசங்கம்.

சுருதி யாதிமூன் றினுக்குமொத் திருந்தமை துணிந்தங்
கொருதி னஞ்சைவப் பிரசங்கங் கேட்கிட வுள்ளங்
கருதி நங்குரு தேசிக ரருள்செயக் கல்வி
தருதி யாகரு மங்ஙனஞ் செய்தனர் தகவே. (109)

### பிரசங்க விசேடம்.

தாமி தற்கெனத் துணிந்தவர் மறுப்பரோ தகுதி
யாமி லக்கணம் பதிபசு பாசங்கட் கமைந்த
தேமி குத்திடப் பிரசங்கஞ் செய்தன ரெவரு
நாமி தற்குமுன் கண்டுகேட் டிலமென நவின்றார். (110)

பத்தி யில்லவர் தமக்குமெய்ப் பத்தியைப் பயிற்று
மித்தி றத்தநற் பிரசங்கம் பத்தழ கெய்தி
யுத்தி முப்பதிற் றிரண்டொடு மதங்களு மோரேழ்
வைத்தி ருப்பதெந் நன்மையு முளதென மதித்து. (111)

### நாவலர்ப் பட்டம்

உபய சந்நிதா னமுந்திரு வுளத்துளே யுவந்தச்
சபையு ளோர்க்குமுன் பிரசங்கஞ் செயுமிவர் தமக்குச்
சுபமி குந்தநா வலரெனும் பெயர்சொலத் தகுமென்
றபய நல்லருள் காட்டின ரிதுபெற லரிதே. (112)

### சென்னையிற் சில புத்தகப் பதிப்பு

ஆரு மப்பெய ராலழைத் திட்டன ரதன்பின்
போரு நாவலர் சென்னைமா நகர்தனை யுற்று
நேரு றுஞ்சௌந் தரியல கரியொடு நிகண்டு
கூரு நல்லுரை யச்சினிற் பதிப்பித்துக் கொண்டு. (113)

### அச்சியந்திரம் வாங்கி மீளுதல்

சிலதி னம்பின்னு மங்கிருந் தச்சியந் திரமொன்
றலகி லாவலி யுடையதா மிகுவிலை யளித்திவ்
வுலகின் மேம்பட வாங்கியெக் கலையினு முயர்ந்த
வலமை மேவிய நாவல ரதைவிட்டு வருங்கால். (114)

### வரும் வழியில் திருவண்ணாமலை யாதீனத்தில் தரியாமை

அலைகொள் வாரிதி சூழ்புவி புகழ்திரு வண்ணா
மலையென் றோதுமா தீனத்தி லருளொரு வடிவாய்
நிலைபெ றுஞ்சின்னப் பட்டமா யிருந்தசந் நிதானத்
திலைய மின்றியே காணநே ரிட்டதங் கிதன்மேல். (115)

திருந்து கல்வியின் றிறமையுஞ் சமயத்தின் றெளிவும்
பொருந்து மாறுகண் டுவந்துதம் மடத்தினிற் புகுந்தங்
கிருந்து சில்பகல் கழிந்தபின் போமென விசைப்ப
வருந்து தித்தமிழ் நாவல ரதற்கிசை யாரால். (116)

எந்த வேது விஞலெனிற் ருமெடுத் திட்ட
வந்த நன்முயற் சிகளும்யாழ்ப் பாணத்தி லனேகர்
முந்தவேபர மதத்தினிற் புகாமையு முடிய
விந்த வெண்ணம்யார்க் கேனுமிங் கெய்துமோ விந்நாள்.

இன்னம் பின்வரு வேனெனத் தேசிகர்க் கிசைய
முன்னஞ் சொல்லியங் ககன்றுநா வலரெனு முதிஞர்
பின்னஞ் சார்தரா யந்திரந் தனைக்கொண்டு பெரிது
மன்னஞ் சார்வயல் சூழும்யாழ்ப் பாணம்வந் தடைந்தார்.
(118)

## வித்தியாநுபாலன யந்திரசாலைத் தாபனம்

மனக்கு மாமகிழ் வெய்திடக் கொடுவந்த கருவி
தனக்கு வித்தியா நுபாலன யந்திர சாலை
யெனக்கு றித்தொரு பெயரிட்டுத் தாபித்தங் கியல்விற்
பனக்கு ழாம்புகழ் தருசில புத்தகம் பதிப்பார். (119)

## வாழ்வாங்கு வாழவைக்கும் நூல்கள்
### வயசு 30

அவசி யஞ்சைவ சமயிகட் காவன வனைத்து
நவம தாகவும் புராதன முள்ளவு நல்லோ
ருவமை யில்பிர யோசன முள்ளவென் ருேதக்
கவன மோடுதாம் பதித்தெங்கும் பரப்பினுர் காண, (120)

இன்ன நூல்களாற் சுவமதந் தலையெடுத் திடல்கண்
டுன்ன ருங்கொலை மறுத்தனன் னூலுரையு டனே
யென்ன பற்பல நூல்களுந் திருத்தியச் சிட்டா
ரன்ன போதவர்க் காயுளு முப்பதா னதுவால். (121)

## கிறித்துமத கண்டனங்கள். I. ஞானக் கும்மி ௸

கிறித்து மார்க்கத்திற் பற்பல வழுக்களாங் கேடு
குறித்துக் கண்டித்து யந்திரந் தனிலொரு கும்மி
பொறித்து விட்டன ரம்மதத் தவரது பொருமன்
முறித்து விட்டிடத் தொடங்கினர் பலவித முயற்சி. (122)

அயர்ச்சி யின்றியிவ் வியந்திர நிலைபெறற் கான
முயற்சி யெம்பிரான் கருணையால் வளர்வதான் முறிக்குஞ்
செயற்சிஃ றீயவர் நினைவொன்றும் பலித்திடாத்திறத்தான்
மயற்சி யெய்துபு தாங்களுங் கடிதங்கள் வரைந்து. (123)

### II. வச்சிர தண்டம்

நீதிச் சைவதூ டணங்களே யெங்கெங்கு நெருங்கிப்
போதித் தாரது நாவலர் தாங்கணடு பொருமல்
வாதித் தோட்டிட வச்சிர தண்டப்பேர் வரைந்தோ
ராதிப் புத்தகம் விடுத்தன ரடங்கின ரவரும். (124)

### III. சுப்பிரபோதம்

அந்த மட்டினில் லாதுவேற் படையம ரங்கைக்
கந்தர் தாமொரு கடவுள ரல்லர்நேர் கருதி
லெந்த மொப்பவ ரிருமனை யுடையவ ரென்றுந்
தந்தம் வாயினில் வந்தன சாற்றிவந் தனரால். (125)

ஈத றிந்தநா வலரிவ ரடங்கவு மிவர்துர்ப்
போத னைக்குளே மயங்கிய சிலர்க்குள புந்தி
நோத கையநீங் கிடவுநன் னியாயங்க ளுவல
வாத ரந்தரு புத்தக மெழுதியொன் றமைப்பார். (126)

அறுமு கப்பிரான் சத்ததா துக்களா லமைந்திங்
கிறுமு டற்சுமை யெடுத்தவ ரலர்தம தியற்கை
யுறும ருட்டிருமேனிகொண் டுற்றன ருவந்து
பெறுமு றைக்கியை மனைவிய ரிருவரும் பேசில். (127)

---

௸ முத்துக்குமாரகவிராயரியற்றியது.

கிரியை யிச்சையாஞ் சத்திகள் கரங்களிற் கிளரு
முரிய வாயுதம் பதினொன்றும் பத்தினோ டொன்றும்
பெரிய ருத்திரர் சூருரங் கிழித்தவேல் பிறங்கு
மரிய ஞானமாஞ் சத்தியே யாவரு மறிமின். (128)

என்றொர் புத்தகஞ் சுப்பிர போதமா மெனப்பே
ரொன்ற வைத்தெங்கும் விடுப்பவு மொளித்தன ரன்னோ
ரன்று மற்றவ ரனைவருந் தெளிந்திவை யறியோ
மென்று மிப்பொழு தறிந்தன மெனவியந் தேற்றார். (129)

ஏற்றுச் சிற்சிலர் விசேடநா ளினுஞ்சில ரென்று
நீற்றுத் தேசொளி மேனிய ராய்ச்சென்று நின்று
போற்றிக் கந்தவேள் பூசைசெய் தனரது போழ்திற்
றேற்றுப் போயின பாதிரி மார்பலர் துவன்றி. (130)

## IV. சைவதூஷண பரிகாரம்

வெட்ட வெட்டமேற் றழைத்திடு மரமென மேலும்
பட்ட ணத்துளே தூடணஞ் செயத்தலைப் பட்டார்
கட்ட மேயனு பவிப்பவர் தாஞ்சுகங் கருது
மிட்ட மேதவர்க் கிதுதொழி லானதா லென்றும். (131)

கண்டு நாவலர் சைவதூ டணபரி கார
மண்டு மன்பினு லெழுதுபு விடுத்தனர் மகிழ்ச்சி
கொண்டு கல்வியே குறைவிலாச் செல்வமாக் குறித்துத்
தொண்டு செய்துவாழ் நாளினிற் சிலர்வந்து சொல்வார்.

### நைட்டிகப் பிரம சரியமும் சிவபூசையும் (வயசு 32)

தாங்க ளில்லறம் புகுவது வேண்டுமத் தன்மை
நாங்கள் சொல்வதே திருக்கின்ற தெனப்பல நவிலத்
தீங்கண் மன்மதன் விகாரமுற் றவரிடஞ் செலுத்தும்
பூங்க ளம்புகா விதமறுத் தார்பல புகன்று. (133)

சற்று மில்லறம் புகுதற்குச் சம்மதந் தரேமப்
பற்று விட்டதாற் சிவார்ச்சனை யன்பொடு பண்ண
லுற்றுங் காலங்கள் கழித்திடு வோமென வுயர்வு
பெற்று வைகுந்தம் முடன்சதா சிவப்பெயர்ப்
பெரியோன். (134)

தனையுங் கூட்டிக்கொண் டகன்குரு நாட்டினைச் சார்ந்து
நினைவெ லாந்தமா சாரியரிடத் தினினி கழ்த்தி
மனையில் வைகினர் மற்றைநாட் காலையில் வந்தா
ரனையர் தூரதே சத்தவ ரவர்வர வுரைப்பாம். (135)

படிக லிங்கங்க ளிரண்டுவிற் பதற்கது பரமர்க்
கடிய ராகிய நாவல ரறிந்தவை களையாய்ந்
தொடிவி லாவருட் குருமுனஞ் சோதித்தொவ் வொன்று
முடிய வோர்ந்தனர் பஞ்சசூத்திரவிதி முறையால். (136)

ஒன்று மாத்திரங் குற்றமில் லாததா யுயரு
நன்று பெற்றிடு மிலக்கண முள்ளதாய் நான்கா
மென்று சொல்வரு ணத்தவர் பூசிக்கு மியல்பு
துன்று மேன்மையுற் றிருந்ததி யாதினுந் தூய்து. (137)

சோதிப் பார்திறங் கண்டவா சாரியர் சுருங்கப்
போதிப் பாருயர் நாவலீ ருடையவர் பூசை
நீதிப் பார்புகழ் நீர்செயீ ரெனிலன் புநிகழ
வேதிப் பார்தனி லுடையவர் பூசைசெய் திடுவோர். (138)

என்ன நைட்டிகப் பிரமசா ரியவொழுக் கினிலே
மன்ன லாயின ராதலா லதற்குச்சம் மதித்தா
ரன்ன பூசையு மவர்தமா ணுக்கரா யடுத்தார்
பின்ன மில்கணி கலிங்கபூ சையுஞ்செயப் பெற்றார். (139)

பெற்றங் கேசில நாளிருந் திருவரும் பேணிப்
பற்றங் கேள்வியாற் பூசையி லேமிகப் பழகி
யற்றங் கேடடை யாமல்யாழ்ப் பாணம்வந் தடைந்தார்
மற்றங் கேவருங் காலெண்ணன் கவரது வயசே. (140)

## வித்தியாசாலைக் கட்டடநிதி நன்னித்தம்பி முதலியார் முதலியோர்

இப்படி நிகழுநா ளிவரிலே கற்றோ
ரெப்படி யும்புக ழில்ல றத்தினின்
மெய்ப்படி யேபிர வேசித் தார்சிலர்
செப்படி யாரொ டியாத் திரைசென் றூர்சிலர். (141)

தந்தமிழ் வித்தியா சாலை யோங்கியே
யெந்தநா ளுந்நிலை யெய்த லாம்படி
முந்தவே நிருபங்கண் முடித்து விட்டன
ரந்தநன் னிருபமேற் றவர நேகருள். (142)

இலங்கையின் றலைநக ரெனுங்கொ ழும்பினி
லிலங்கைய மரும்பிர பெவர்க்கு மீந்திடு
நலங்கையா ரியற்பெயர் நன்னித் தம்பியா
நலங்கையா ரனுப்பினர் நாற்சதச் செம்பொன். (143)

அத்தொகை யேமுத லாகவைத் துத்தம்
வித்தியா சாலையின் மிக்க போதனை
யுய்த்தனர் வந்துகேட் டோரெ லாநிதி
தத்தமக் கியன்றது தந்து சென்றனர். (144)

திரவிய மிங்ஙனஞ் சேரச் செய்தநற்
பிரபுவால் வேதனம் பெற்றுப் பிள்ளைகட்
குரமிகு மறிஞரா முபாத்தி யாயருட்
கரவிலா தன்புடன் கற்பித்தா ரரோ. (145)

தருமமாம் வித்தியா சாலை யின்பொருட்
டொருபெரு வர்த்தக சாலை யுத்தம
விருநிதி யீந்துகொண் டிரண்டு சாலையும்
பெருமையே மல்கு *தம் பெயரைப் பெற்றவர். (146)

---

* தம்பெயர் பெற்றவர்—ஆறுமுகச்செட்டியார்.

## சென்னைப் பிரயாணத்தில் தலதரிசனம், ஆதீன உபசாரம்

திருந்துமா ஞக்கராஞ் செட்டி யாரிடத்
திருந்திட வொப்புவித் தெழுந்து சென்னைபோய்
வருந்திற மெண்ணுபு மறைகள் வந்தனை
பொருந்துமா ரணியத்துட் போற்றிப் புக்கனர். 147

இத்தல மாதியாந் தலங்க ளேத்திச்சென்
றுத்தமச் சிறப்புப்பே றொன்று தாம்பெற
வைத்தசந் நிதானங்கள் வாழ்வு மல்கிடுஞ்
சுத்தமா மாவடு துறைய டைந்தனர். 148

பொங்குமன் பெழவெழப் போற்றிப் பூசைசெய்
தங்குநற் சந்நிதி யாக்கி னைப்படி
தங்குசை வப்பிர சங்கந் தாந்திசை
யெங்குமே பரவச்செய் திருந்திட் டார்சினுள். 149

பிரசங்கங் கேட்டதம் பிரான்க ளோதுவார்
வரசங்கஞ் சாத்திரி மார்பிர புக்கண்
முரசங்கள் போலவே முழக்கு செந்தமி
ழரசங்க நாவலர்க் கருமை செய்தனர். 150

பின்னரவ் விடம்விட்டுப் பெயர்ந்து பேர்பெறு
மன்னவர் பணிதரு மபுரம் வந்தன
ரன்னவா தீனபண் டாரச் சந்நிதி
தன்னமர் பூங்கழற் சரணம் போற்றியே. 151

ஆயசந் நிதானநல் லருள்பெற் றெங்கணுந்
தூயநற் பிரசங்கந் துதிக்கச் செய்தன
ரேயநாள் சிலகழிந் திட்ட பின்னெழீஇ
நாயனுர் சம்பந்தர் நகர நண்ணினுர். 152

பேணியப் பரைச்சமண் பிரித்துக் கூட்டிய
தோணியப் பரையிருஞ் சுவைகொள் பாற்குநேர்
காணியப் பரையரைக் கனக மாமய
வேணியப் பரையருள் வேண்டிப் போயினர். 153

பதஞ்சலி வியாக்கிர பாதர்க் காகவே
நிதஞ்சலி யாநட நித்தர் செய்தல
மதஞ்சலி செய்வமென் றணைந்து போற்றிமே
லெதஞ்சலி யாதுமின் றெனவி ருந்தனர். 154

### சென்னையில் புத்தக பரிசோதனம்

நேசமா ரத்தல நின்று நீங்கியெத்
தேசமும் புகழ்சென்னை சேர்ந்து மாணிக்க
வாசக ரருடிரு வாசகத் தொடு
தூசகல் கோவையார் சோதித் தாரப்பால் 155

சிலசில புத்தகந் தினமுஞ் சோதித்து
வலமிகு சதாசிவ வள்ளல் பேரினுற்
பலமுற வச்சினிற் பதித்தி யாவரு
மிலதெனு விதம்வெளி யேற்றி னுரன்றே. 156

### பொன்னுச்சாமித் தேவரின் ஔதாரியம் வள்ளுவர் கோவையார் தருக்கசங்கிரகம் உரைப்பதிப்புகள்.

### வேறு

அந்நாளிற் கல்விசெல்வ மளவிலா தொருங்கமைந்தோ
னெந்நாளுங் கவிவாண ரியற்றிறமைக் கேற்றபடி
பொன்னுலு மணியாலும் போதமகிழ் புரிந்திடுவோன்
றன்னும மெவ்வுலகுந் தான்பரவ வவதரித்தோன். 157

ஏதமிலா வள்ளலெனு மீகைபயின் றிடும்ராம
நாதபுரந் தனிலரசு நடாத்துதுரை ராசனுக்குப்
போதனைசெய் மந்திரியாம் பொன்னுச்சா மிப்பெயரோ
னீதலுறு மிவர்திறமை யிவர்செய்நூ லினிற்கண்டான். 158

கண்டுநா வலரோடுங் கலந்துகருத் தாநந்தங்
கொண்டுதிரு வள்ளுவர்நற் கோவையா ருரையுமறி
வண்டுதர்க்க சங்கிரக மன்னம் பட்டியமுமவை
பண்டுளதோ மறப்பார்த்துப் பதிப்பிக்கும் படியாக 159

மிக்கதிர வியங்கடரு வேனென்று வேண்டுதலு
மக்கணமே யதற்கிசைவுற் றவைகளைப்பார்த் தச்சிட்டுத்
தக்கவர்க டஞ்சமுகந் தமக்குத்தா மேவிடுத்தா
ரெக்கலையு முணர்ந்தார்க்கிங் கிதுவியப்போ வியம்புங்கால். 160

**வித்துவான் மீ. சு. பிள்ளையும் மாணவருஞ் செய்த பாயிரங்கள்**

அதன்சிறப்பெல் லாந்திருவா வடுதுறையில ருளுருவாய்
மதன்றிறத்தே காநம சிவாயமூர்த் திகண்மடத்தி
லெதன்சிறப்புந் தெரிந்துணரு மினியவித் துவானென்னுஞ்
சுதன்சிறப்பார் மீனாட்சி சுந்தரநா வலன்சொல்லும். 161

ஆன்றபா யிரத்துள்ளு மவர்மாணக் கரிற்புத்தி
மான்றமிழ்நூ லினிலெனநா வலர்பலரு மதித்துவக்குந்
தேன்றதும்பு மாலையணி தியாகரா சச்செட்டி
தான்றனிசொல் பாயிரத்துந் தமிழ்விரகர் தாமுணர்வார். 162

**சிதம்பரத்தில் வித்தியாசாலை தாபிக்கும் ஆசை**

இதுநிற்க நடராச ரெழுந்தருளுஞ் சிதம்பரத்தின்
முதுசைவப் பிரகாச முந்துவித்தியா சாலை
யதுவைக்கு மாசைமிக வதன்பயனு மதற்குதவி
கதுவிச்செய் வார்பயனுங் கண்டுநா வலர்கையால் 163

**திருவண்ணாமலையாதீனப் பேருபசாரம்**

மிகவரைந்து பத்திரிகை வெளியிட்டார் மேன்மையெலாம்
புகலரிய திருமயிலைப் புரிதனிலே போதமிகத்
திகழ்திருவண் ணாமலையா தீனத்தின் றிலகமென
வகலாம லிருந்தருளு மாறுமுக தேசிகரால் 164

அறிந்துசில வோதுவா ராலழைத்தங் கவர்வாயிற்
பிறிந்தறியா தமர்சைவப் பிரசங்கம் பிறர்பொய்ம்மத
முறிந்திடக்கேட் டிவரறிவின் முதிஞரென மொழிந்தவர்க்குச்
செறிந்ததம துருத்திரசஞ்சி யமெடுத்துத் திருக்கரத்தால் 165

## திருவாவடுதுறையில் சித்தாந்த ஆராய்ச்சி

சாத்திநா வலரையுப சரித்தனுப்பத் தாமவரை
யேத்தியுயர் பலதலமு மிறைஞ்சுபுநல் லெழிற்றில்லை
தோத்திரஞ் செய்தருணடஞ்செய் சுவாமியையுங்
[கைதொழுதுள்
ளாத்திரமோ டேதுறைசை யடைந்துகுரு வடிபணிந்தார். 166

சற்குருவம் பலவாண சாமியா லச்சாமி
பிற்குருசுப் பிரமணிய பெம்மானுற் பெரிதுந்தந்
நற்குணநற் செய்கைகளை நன்குமகிழ் நலம்பெற்றார்
கற்குமவ ரேபெரியர் காசினியிற் கனம்பெறற்கே. 167

தமைவியந்து கனஞ்செய்யுஞ் சற்குருதேசிகர் தம்மோ
டிமையளவும் பிரியாம லிலக்கணநூ லிலக்கியநூ
லமைசைவ சித்தாந்த வாகமநூ லத்தனையுங்
கமையறிவா லாராய்ந்து காலங்கள் சிலகழித்தார். 168

தேசாரு மிவர்கல்வித் திறத்தாற்றே சிகர்மடத்தி
லேசார்வ காலமுநீ ரிருந்திங்கு சைவவித்தி
யாசாலை தாபிக்க வமையுமெனவதற் கொன்றும்
பேசாரெங் குஞ்சைவப் பிரகாசம் பெறும்பொருட்டே. 169

அதைமறுத்துச் சின்னாட்சென் றங்ககன்றம் மார்க்கத்திற்
றதையுமருட் சிவபிரான் றலங்கள்பல சார்ந்துசிவ
கதைபயிலுந் திருநாகைக் காரோணங் கைதொழுது
சிதைவிலவ்வூ ரார்வேண்டத் திகழ்பிரசங் கஞ்செய்தார். 170

## யாழ்ப்பாணம் மீண்டது. (வயசு 39)

மலிதமிழின் பிரசங்க மழைகண்ட மாந்தரெலாஞ்
சலியாமலி னிச்சைவந் தலையெடுக்கு மெனவிதந்தார்
நலியாவந் நகரகன்று நாவலரு நாம்புகழு
மொலிகடல்சூழ் யாழ்ப்பாண முற்றாரவ் வூர்மகிழ. 171

### சிதம்பரவித்தியாசாலை தாபிக்க நிதி

உற்றநாள் வயசுமுப்பத் தொன்பதா கியதுயர்வு
பெற்றசிதம் பரங்கல்விப் பெருஞ்சாலை பெறும்பொருட்டுக்
கற்றவராற் பெருந்தனஞ்சே கரஞ்செய்ய வுளங்கருதி
மற்றவர்தா முன்னமே வண்ணார்பண் ணையில்வைத்த 172

தமதுவித்தி யாசாலை தன்னிலொரு சபைகூட்டி
யமர்தரு கல்விச்சாலை யாற்றலா லாயபயன்
சமனிலையிற் பிரசங்கத் தாலெடுத்துச் சாற்றுதலு
மெமர்புகழ விருநிதிய மீந்தனர்கேட் டோரெல்லாம். 173

### வைதிகரெதிர்ப்பும் சிவதீக்கை மகிமையும்

சுகமேமல் கியபருத்தித் துறைவளருஞ் சித்திவிநா
யகர்கோயி லினிதுபோ லங்கொருநாட் பிரசங்க
மிகவேசெய் தார்கேட்டோர் மிக்கநிதி வியந்தளித்தார்
மகமையொன்று மேற்படுத்தி வழுவாது கொடுத்துவந்தார். 174

உயர்சமய தீக்கையுமில் லோரைக்கண் டஃதுற்றோர்
மயர்வகலும் வண்பூதி வாங்குதலும் வணங்குதலு
மயர்வில்சிராத் தங்களினி லழைப்பதுஞ்சி வார்ச்சனைகள்
செயநியமிப் பதுமந்தோ சிவாகமவி ரோதமென்று 175

ஒவ்வொர்பி ரசங்கத்து முறுதியுடன் போதிக்க
வெவ்வெவரு மதுசெய்யா திருந்தனர்வை திகராய
வவ்வெவரும் பிராமணர்நா மாமென்றுள் ளதங்கரித்துத்
தெவ்வெறிவேல் போலிவரைச் சினங்கொண்டு நிந்தித்தார். 176

அந்தமட்டோ சிவாகமநிந் தையுஞ்செய்தா ரந்தோநித்
தந்தமைநிந் தித்தாலுந் தாம்பொறுப்பர் தம்பெருமா
னந்தமுறு மடியவரை யாகமத்தை யிகழ்ந்தனரே
லெந்தவித மும்பொறு ரென்செய்தாரி வரென்னில் 177

மறையெலாம் பொதுவாக மங்களெலாஞ் சிறப்பாக
விறைவகுத்தான் வைதிகர்தா மெய்துவர்புண் ணியலோக
மறைசைவ மார்க்கத்தோ ரடைவர்முத்தி யிரண்டையுமென்
றுறைபிரமா ணங்காட்டி யொருபிரசங் கஞ்செய்தார். 178

வந்திதுகேட் டிடுமந்த வைதிகப்பி ராமணர்கள்
சிந்திதம ஞேரதசித்தி யும்விளேக்குஞ் சிவாகமத்தோர்
தந்திருத்தாள் வணங்கிடவுந் தாம்பரார்த் தம்பூசை
புந்தியுறச் செயவும்விதி போதவுண்டா மெனப்புகன்று. 179

பற்பலகாற் சபைகூட்டிப் பயில்வீண்வாய்ப் பறையறைந்தார்
சொற்ப்டி காட்டாமையினுற் றுன்றியபல் சனத்தொகுதி
யற்புதநா வலர்சொல்லு மதுவேநூற் சம்மதமாங்
கற்பனேயன் றெனத்தெளிந்து கைக்கொண்டார் கண்டவரே. 180

சிலசிலவை திகமறையோர் சிவதீக்கை செயப்பெற்ருர்
சிலசிலவை திகமறையோர் சிவபூசை செயப்பெற்ருர்
சிலசிலவை திகமறையோர் சிவாகமத்தேர்ச் சியையடைந்
தார்
சிலசிலவை திகமறையோர் திருமுறையெல் லாந்தெளிந்
தார். 181

வைதிகமார்க் கத்தினிலெண் மடங்குசைவ மார்க்கமே
யுய்திபெறத் தழைத்தெங்கு மோங்கியதா லுறுமிதற்கென்
றெய்தியநா வலர்சீர்த்தி யென்னென்பே மெம்பிரான்
செய்திருநல் லருள்போலுஞ் செப்பலாந் தகைத்தன்றே. 182

### வேறு

### வயசு 40. சேதுஸ்நானம்

ஆன்ற நாவலர்க் காயுளு நாற்பஃ தானபின்
சான்ற வித்தியா சாலேயும் வர்த்தக சாலேயு
மேன்ற தம்மிடங் கற்றமா ணுக்க னெனச்சொ லுந்
தோன்ற லாந்தில்லே நாதனேப் பார்க்கச் சொலிவிட்டு 183

சென்ன பட்டணஞ் சென்று திரும்பநற் சிந்தைசெய்
தென்ன மேன்மையு மெய்து திருவிரா மேச்சுர
முன்னஞ் சென்று வணங்குபு சேதுவின் மூழ்கிப்பின்
மன்னர் போற்று மதுரை வணங்க மதித்தனர். 184

இராம நாத புரத்துக்குப் போயங் கிருக்கின்ற
தராத லம்புக ழுந்துறை சைமடந் தன்னில்வாழ்
பராய சீர்கொள் விசுவ லிங்கப்பெயர்ப் பண்ணவன்
விராவு மன்பினில் வேண்ட விருந்தனர் மேவியே. 185

## இராமநாதபுர சமஸ்தானப் பணியும் பேருபசாரமும்

அந்த கர்க்கிறை யாகியிந் நாளர சாட்சிசெய்
மன்னர் கோமகன் சீர்த்தியை யார்சொல வல்லவர்
பன்ன ருங்கலை பற்பல வாய்ந்தப் படிநிற்கும்
நன்னர் வாய்மை யிரக்கங் கொடைநன் னடையுளான். 186

நீறு கண்டிகை யேபொரு ளென்றுநி னைந்தணிந்
தூறு மன்பினி லோசைபெ றவைந்து முச்சரித்
தேறு சீர்ச்சிவ பூசைபு ரியுமி யல்பினுற்
கூறு முத்தி யடைய வவாவிய கொள்கையான். 187

சேது நானஞ்செய் தோர்தனை வந்துதெரி சித்தா
லோது பேறுண் டெனுமொரு வார்த்தை யுலகெலாம்
போது மாறு புகழை யடைந்த புரவல
னேது புண்ணியஞ் செய்தன னேவிதற் கெண்ணியே. 188

பொங்கு சைவ மதமு மஃது பொலிவுறத்
தங்கு சைவசித் தாந்தமுஞ் சங்கத் தமிழுமே
யெங்கு மாக மனித வடிவ மெடுத்துல
குங்கு வாழ்பல் லுயிர்க்குமோர் தாயென வுற்றுளான். 189

மார வேளு மருண்டு மடந்தைய ராகியே
யார மார வணியும் புயாசலத் தன்புடன்
சேர வெண்ணும் பெருவனப் பெய்துஞ் சிறப்பிற்பூ
பார மெண்கிரி யெண்கரி நீங்கப் பரித்துளான். 190

அளந்து கல்வி யளவு பொருண்மரி யாதையோ
டுளங்க ளிக்க நம்போ லியர்க் கீயு முதுகண்டோ
ரிளம்பி ராயத்தி லேகற் றிலஞ்செய்வ தென்னென்றுட்
டளர்ந்து சோர்தர வென்றுமிச் செய்கை தவறுரான். 191

கற்ற மேலோர் கழகம் பலந கரங்களி
னற்ற மிழ்விளங் கும்படி வைக்கு நலந்தர
லுற்ற பாற்கர சேதுப தியெனு மொண்பெயர்
பெற்ற வன்றிசை காணுஞ்செங் கோல்கொண்ட பெற்றி
யான். 192

பெருக்குஞ் சீரிவ் விறைக்குப் பெரியபி தாவெனுந்
தருக்கு நேர்பொன் னுச்சாமி நரேந்திரன் றன்னைக்கண்
டுருக்கு மன்பில ராயினர் முன்சென்னை யுற்றிரு
வருக்கு மெய்து மொருமனத் தாப மதித்தரோ. 193

அந்த ராதிப னுவலர் வந்த தறிந்தன
னென்ன ராயினு நஞ்சமத் தானத்தி லெய்தினம்
முன்னர் வந்தில ராயின ரில்லை முதினுரா
மின்னர் வந்தில ரென்வியப் பென்றுளத் தெண்ணியே 194

வெருவு மாறிற னதிடத் துள்ளநல் வித்துவா
னொருவன் பாலி துணர்த்தலும் போயறிந் துங்குநான்
வருகி றேனென் றவன்சொலி நாவலர் வைகிடத்
தருகில் வந்திருந் தன்பு செலுத்தி யளவளாய் 195

இன்னு மிந்நகர் மன்னனைக் கண்டிட வில்லையோ
வென்னும் போதி லதற்கிட்ட மில்லை யெமக்கென்றார்
பின்னு மிந்நகர் வந்திருக் கின்றவோர் பெற்றியான்
மின்னு நீர்கண்டு போதன் முறையென்று மீண்டனன். 196

அரசன் பாற்சென் றவையனைத் துஞ்சொல்லி னுனவன்
பரசு நாவல ரிங்கெய்தி நம்மையும் பார்த்திடா
துரமொ டேகி னமக்கவ மான முறுமொரு
தரமி னஞ்சென் றவர்வரச் செய்விர் தமிழ்வலீர். 197

என்ற னுப்பலு மேகிப்பிர சங்கத் தின்னருட்
குன்ற மொப்பவர் தம்மைக் கலந்துபின் கூறுவா
னென்ற யாரிங் குறினு மெவர்க்கு முதவுமெம்
மன்ற னைக்கண்டு போதலெந் நாளும் வழக்கமே. 198

ஆன தாலவற் காண நுமக்கன் படாமலே
போன தற்புத மாமஃ தன்றிப் பொருவிலா
ஞான நாவல ராகு முமக்கு நலமன்றே
தான றிந்தது சாற்றினா னென்றலுந் தாஞ்சொல்வர். 199

ஒருவர்க் காண விருப்பமி லார்தமை யுற்றுநீர்
மருவிக் காணும் படிசொல் வதுநன் மதியுமன்
றருமைத் தாமன் பிலாதவொன் றைச்செய்வ துமெமக்
கிருமைக் கும்பய னென்றுமின் றென்னலு மேகினான். 200

ஏகி வேந்தனைக் கண்டிந் நிழ்ந்தவெ லாஞ்சொனான்
யூகி யாகிய நாவலர் பாலின்னு மோர்தரம்
போகிப் பார்த்திங்கு வம்மெனக் கூறினன் புந்திமே
லாகி யோர்தமைக் காண வெவர்க்கன் படாததே. 201

வேந்த னாணை மறுப்பதற் கஞ்சியிவ் வித்துவான்
போந்த னன்மறு நாளினி னாவலர் போந்தவற்
காந்தன் மையொன் றுங்கூறில ரஃதறிந் தப்புறஞ்
சாந்த மன்னன் வலிமையு மேன்மையுஞ் சாற்றினான். 202

அவை யனைத்தையுங் கேட்டரு ணாவல ராகியோ
ரிவைகட் கஞ்சி வரவிசை யேனென் றிறைவன் செய்
நவை யனைத்தையுஞ் சொல்லிக்கண் டித்தனர் நாவல
ரெவைசொ னாலும் வராரென வேந்தற் கிவன் சொல்வான். 203

இத்த கைத்திற மிங்கெய்தி யாரு மிசைத்திலர்
சித்த மார்தரு நின்னதி காரஞ் செலுத்தென்று
னுத்த மத்திற மன்றது செய்வ துயர்ச்சியே
யெத்த கைத்திறத் தும்பெற்ற வரவர்க் கின்னினி. 204

பகையெ தேனுஞ்செய் தானமக் கேசம்ப வித்திடுந்
தொகையில் கேடிங்ங னெய்தும்பி றவித்து வான்கணோர்
தகையி னாவலர் நாமே வலிந்து தழுவியெவ்
வகையி லாவ தழைப்பது வேநன் மதியென்று. 205

ஒரு பாயங் கருதி வயிணவ மோதுபு
தேருஞ் சாத்திரி மார்களைக் கொண்டு தெளிவினிற்
சாருஞ் சைவ சமயப்பி ரசங்கஞ் சாற்றினு
லாருங் காண வதனை மறுப்பம தன்றியும். 206

தறையில் வைணவ மார்க்கமு யர்வென்று தாபிப்போ
மிறைய வைக்களத் தென்ருேர் கடித மெழுதுவித்
துறையு நாவல ருக்கனுப் பித்தன னுற்றதன்
முறை யுணர்ந்து மிகப்பரி காச மொழிந்தரோ. 207

அக்கரப் பிழை யின்றி யெழுதவு மாய்ந்திலா
மக்க ளோநஞ் சமயத்தை வாதஞ்செய் வாரென்று
மிக்க வாசகம் பேசித் திருப்பி விடுத்தனர்
தக்க வாறு செயநினைந் தான்பொன்னுச் சாமிவேள். 208

கன்று தாயைப் பிரியினுந் தாய்ப்பசுக் கன்றினைத்
துன்று மன்பொடு பாலுவந் தூட்டுஞ் சுரந்துநா
மொன்று குற்ற மறியா தியற்றி யுளதெனி
லின்று தாமும் பொறுத்திங் கெழுவ தியற்கையே. 209

என்னு மிப்பொருள் கொண்டக வியொன் றியற்றுபு
பின்னுந் தம்வித்து வானிட மீந்தனுப்பித் தனன்
மன்னு நாவலர் வாங்கியப் பாடலை வாசித்தே
யின்னு மன்பி னொருவர் வலிந்தழைத் திட்டுநாம் 210

போக லாமை சிறப்பன் றெனவெண்ணிப் போவதற்
காக வேயோ ரமைதி செய்தாரத ரண்மனைக்
கேக லாமவர் செய்கட்டுப் பாடொன்று மின்றென
யோக நாவல ரிட்டப் படியங்க ணுற்றனர். 211

ஆய போதி லருந்தமிழ் நாவல ரையெதிர்
போய ழைத்துப் புரவல னுட்கொடு போந்தபின்
னேய வோரா சனத்தி லிருத்தி யியல்பல
மேய கல்விப் பிரசங்கஞ் செய்திட வேண்டினன். 212

ஆயு நாவல ரன்னவன் வேண்டுதற் காகநற்
றுயு மானவர் சொல்லிய சைவ சமயமே
யேயு மெய்ச்சம யம்மெனும் பாட லெடுத்திசைத்
தோயு மாறில் பிறப்பிறப் பில்கட வுள்சிவன். 213

ஒருவ ரேயவர் தம்மை வழிபடு வோரெலா
மருவு சைவ சமயமே மெய்ச்சம யமென்று
கருகும் விண்டு மதத்தை நியாயம்பல் காட்டுபு
பெருகு சாத்திரி கண்முனங் கண்டித்துப் பேசினுர். 214

ஒது மப்பிர சங்க மகிழ்ந்தங் குயரிரு
சாது ராவை யழைத்துத் தமிழ்ப்பிர சாரகீ
ரேது மன்பிற் கொடுப்பது கொள்வ தியல்பெனும்
போது மன்னவ னன்பின் முதிர்ச்சிபு றங்கண்டு. 215

### வேறு

ஆக வென்றன ராதலா லவன்ற
னருங்கொடைக் கையினு லெடுத்த வர்தம்
வாக ணிந்தன ருகியேட் டினிலே வரையும்
வல்லநூல் பலபல வாய்ந்த
நேக மாம்பய னுலகினுக் கெய்த
நீவி ரச்சிட வேண்டுமிந் நியதிக்
கோகை யானிதி யுதவுவ லென்று
னேமென் றேற்றுத்தம் முறையுளுற் றனரால். 216

### வயசு 41. திருவுத்தரகோச மங்கையில் தரிசனம்

மற்ற நாட்டிரு வுத்தர கோசமங் கையுற்று
மாமங கேசனை வணங்கி
நற்ற வம்பயின் முனிவரன் மடத்தை
நாடிப் பின்னரு நணியதை விட்டுப்
பெற்ற மூர்பவ ரறுபத்து நான்கு
பிறங்கு மாடல்கள் செயப்பெறும் பதியை
யுற்ற மர்ந்தன ராயுளு நாற்பத்
தொன்று சென்றதா லுயருநா வலர்க்கு. 217

## மதுரை மடாலயத்தில் விசேட மரியாதை

சங்க வாணர்வா ழத்தலத் தரசன்
றனக்கு வெப்பநோய் தவிர்த்தருள் புரியுந்
துங்க மாமறை யோர்மடந் தன்னிற்
றுலங்கு தேசிக சுவாமிக ளோடு
மங்கண் வாழ்சைவப் பிரபுக்கள் வேண்டு
மதற்கி சைந்துசின் ஞளினி தமர்ந்து
தங்க ணுயகர் கோயிற்கு நிதம்போய்த்
தரிச னஞ்செய்து தாம்வர லானுர். 218

அரசு செய்தரு ளங்கயற் கண்ணி
யம்மை சந்நிதா னத்திலத் தலத்தின்
பெருமை யிந்திர னரும்பழி யகற்றும்
பிஞ்ஞு கன்றிரு வருட்பெரும் பெருமை
பரவு சைவசித் தாந்தத்தின் பெருமை
பலவு மோர்தினம் பயில்பிர சங்க
முறைசெய் தாரிவை கண்டுகேட் டறியா
துள்ள வென்றியா ருங்களிப் புறவே. 219

கோயி லர்ச்சக ரம்மைக்குச் சாத்திக்
கொண்டு வந்தபூ தியைக்கையிற் கொடுத்து
வாயின் வல்லநா வலவர்தந் தலையின்
மன்னு சீர்ப்பரி வட்டமுஞ் சூட்டித்
தாயின் மிக்கபே ரன்பிஞன் மாலே
தரிக்கப் பெற்றுமே தகுசிறப் புடனே
யாயி லின்னதென் றளப்பிலாப் பெருமை
யமைம டாலய மதனில்வந் தமர்ந்தார். 220

மீட்டு மங்கொரு நாட்பிர சங்க
மிகச்செய் தாரது விரும்புபற் பலருங்
கேட்டுச் சைவச மயமுமச் சமயங்
கெழீஇய தம்பிரான் முனுங்கே டின்றி
நாட்டு மேன்மையுற் றவையென வுணர்ந்தார்
ஞான தேசிக ராயரு ணல்கு
மீட்டு பல்புகழ் மகாசந்நி தான
மியங்கு தஞ்செவி யிட்டவே டத்தை. 221

திருக்க ரங்களா லெடுத்திவர் செவியிற்
சேர்த்தல் கண்டசின் னச்சந் நிதான
முருக்க மோடுதம் மாறுகட் டிகளை
யுடனெ டுத்தணிந் துவகையுட் கொண்டு
தருக்க ஞாயமா ரிலக்கணக் கொத்திற்
றங்கு மையங்க டவிர்ந்தனர் கேட்டங்
கிருக்கு நாளினிற் பூவணம் போய்வந்
தேட கமுதலி யதல மெய்தி 222

வணங்கி வந்தபின் றெய்வயா னையைமுன்
மணஞ்செ யெம்பிரான் வாழுமா மலைசென்
றிணங்கி யன்புடன் றொழுதுசின் னாளங்
கிருந்து பின்னரு மதுரையி லேகி
யுணங்கி வந்தவர்க் கருள்செயுங் குருவா
முபய சந்நிதி யுத்தர வுயர்நற்
குணங்கி ளர்தர வளர்க்கு நாவலர்
கைக் கொடுதிருப் புத்தூர் சென்றுகை குவித்து. 223

**திருவண்ணாமலையாதினத்திற் சிவிகையில் வரிசைகளோடு பவனி**

**வேறு**

தெண்டிரை யுலகம் போற்றுந் திருவண்ணா மலையா தீனங்
கொண்டிருந் திடுநற் குன்றக் குடியினைக் குறித்து வந்தங்
கண்டிய மடால யத்தி லருட்குரு வடியைச் சார்ந்து
தொண்டியல் புற்றூர் சின்னாட் டுயதேசிகர் சொற் கோளால். 224

தங்கு நாளருட் பண்டாரச் சந்நிதி தாஞ்சித் தாந்தத்
தெங்குமாட் சேபஞ் செய்ய விவருங்கேட் டவைகட் கெல்லா
மங்கு நற்சமா தானஞ் சொற்றநேக நாளகற்றி யோர்நாட்
பொங்கு சாத்திரி கண்மிக்க புராணிகர் முதலோர் முன்னம் 225

தடையறு சைவ சித்தாந் தத்துயர் வையுஞ்சார்ந் தோர்க
ளடையுறு பயனை யுந்தம் மாலளந் தறிந்த மட்டுங்
கடன்மடை திறந்த தென்னக் கண்டவர் வியக்கு மாறங்
கடைவொடு பிரசங் கித்தா ரவரையொப் பாவ ருண்டோ 226

தமைநிகர் பிறவா தீனந் தங்குதே சிகர்தா மேனு
மமைதரு பல்லக் கேறி யந்நெறி யணுக வொட்டா
வுமையொரு பாக நீத்திங் குற்றசந் நிதான மோங்குங்
கமைபெறு மிவர்தேர்மிக்க கல்விவன் மையினைக் கண்டு 227

திருமலி சிவிகை யேற்றிச் சிறந்தசாத் திரிக ளாதி
மருவுதம் பிரான்க ளோது வார்கள்பற் பலவ யங்கும்
விருதுகண் முன்பு செல்லவியனகர் வலஞ்செய் வித்தார்
பொருவில்பன் ஞளிருந்தப் புறம் விடைபெற்றுப் போனர் 228

**திருப்பெருந்துறையில் இராமசாமிப்பிள்ளையும் வன்றெண்டன் செட்டியாரும் சந்தித்துச் சந்தேகந் தெளிந்தது**

சிறந்தமண் கூடை யீசன் றிருமுடி யேறச் செய்தார்
பிறந்தமா நகருட் போயெம் பிரான் கழல்பெரிதுந் தாழ்ந்தங்
கறந்தவா துறைகோ முத்தி யாதீன மடத்திலன்பின்
றிறந்த வருது சின்ளுள் செலவிருந் தனரிச் செய்தி 229

தமிழ்மறை யெனுந்தே வாரந் தனைப்பல தரஞ்சோ தித்துள்
ளமிழ்தென யாருங் கொள்ள வச்சடித் துதவுமன்ப
னிமிழ்திரை யுலகெ லாந்தே ரிராமசா மிப்பே ரேந்தல்
சிமிழ்முலை மடவா ராசை சிறிதுந்தே ரான்றெ ரிந்து 230

சென்றுநா வலர்பாற் கேட்டுத் திருவிளை யாட றன்னிற்
றுன்றுசந் தேகந் தீர்த்தான் றுகளில்வன் றெண்டச் செட்டி
யொன்றுநன் னூல்வி ருத்தி யுரையிற்சந் தேக மொன்று
மென்றுமின் றென்னக் கேட்டா னிதற்பினிந் நகர்விட் டேகி 231

**விசேட தலதரிசனம்; பிரசங்கம்**

தொண்டைமான் புதுக்கோட் டைக்குத் துதியுடன் சூழ வந்தா
ரண்டையி னுட்டுக் கோட்டை யரியவர்த் தகர னந்தர்
பண்டைநூல் வல்லார் வந்த பான்மைபற் பலகாற் கேட்டுக்
கொண்டக மகிழ்ந்து வந்து குழீஇநெடுங் குடியிற் செய்யும் 232

புரிசெய்கும் பாபி டேகப் பொருட்டமைந் திட லும் போவா
*ரரிமள வாலயத்தி லங்குளார் யாரும் வேண்டத்
திரிபுராந் தகர்தஞ் சீருஞ் சிவனடி யார்தஞ் சீரும்
பெரியதோர் சிவசின் னத்தின் பெருமையு மெடுத்துப்
பேசி 233

அச்சிவ சின்னந் தாங்கு மவர்கண்மா மிசம ருந்த
லிச்சியா திருக்க வேண்டு மெனப்பிர சங்கித் திட்டார்
மெச்சியங் கிதுகேட் டோர்மா மிசமுணல் வெறுத்து விட்டா
ருச்சிமேற் கொளுமின் னேரு முயர்நெடுங் குடியூ ருற்று 234

சிவபிரான் சேவை யோடு சிவப்பிர சங்க முஞ்செய்
தெவரும்வந் துபச ரிக்க வேற்றந்த நகர்விட் டேகி
யுவமையில் லாவா னைக்கா வுயர்சிராப் பள்ளி யோடு
தவமலி தஞ்சை யாதி தலங்களைச் சார்ந்து போற்றி 235

**துறைசையாதீன மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் ஓதுவார்களும் கும்பகோணத்தில் நாவலரை எதிர் கொண்டு ஆதீனத்துக்கழைத்துச் சென்றது.**

மாமக விசேடங் கொண்டு வைகிய தலத்தில் வந்து
தாமக லாதி ருந்தார் தஞ்செய்தி தனைக்கோ முத்திக்
கோமக ராச யோகங் கொண்டசற் குருவென் றேத
லாமகா சந்நி தான மறிந்துதம் மடால யத்தில் 236

வித்துவா னுயி ருந்து விரும்புதே வார மேய
வுத்தம விவிசேட முற்ற வுயர்பல தலங்கட் கோங்கும்
புத்தமு தனைய பாடற் புராணஞ்செய் போத மாருஞ்
சுத்தநற் குணமீ னுட்சி சுந்தரத் தோன்ற லோடு 237

ஓதுவார் சிலரை யுஞ்சேர்த் தொருங்குடன் சென்று நீரிப்
போதுநா வலரை நம்பாற் புகுவியும் போமென் றேதச்
சாதுவா மவருஞ் சென்று சைவபோ தகரைக் கூட்டித்
தீதுதீர் மடத்தில் வந்தார் தேசிகர் தமைச்சே வித்து 238

*அரிமளம் - ஓர் தலம்

போத கரிருக்கு நாளிற் புறமதப் புரட்டுப் போக
வேதவா கமசித் தாந்த விரோதமில் விதம தாக
வேய்தமிழ்ப் பிரசங் கத்தா லிலக்கண விலக்கி யத்தின்
வாதஞ்செய் வார்கட் கைய மறுத்தலான் மகிழ்த லானுர்
239

### சிதம்பர தரிசனமும் வித்தியாசாலைத் தாபனமும்

இத்தல மகன்று பின்ன ரியங்குபுள் ளிருக்கு வேளூ
ரத்தரை வணங்கி யென்பா லரிவைசெய் தவர் பிறந்த
சித்திசேர்தலம்வ ணங்கிச் சிதம்பரஞ் சென்று போற்றி
நித்தநன் னடனஞ் செய்வார் நிறைபெருங் கருணை நீரால்.
240

வித்தி யாசாலை யொன்று மேலைவீ தியினிற் கட்டி
வைத்துநன் முகூர்த்தந் தன்னில் வந்தமா ணுக்க ரெல்லாஞ்
சித்திபெற் றிடக்கற் பிக்கச் செய்தனர் சிறுர்க ளெல்லாம்
புத்தியான் முன்னஞ் செய்த புண்ணியம் போலு மன்றே. 241

### சிதம்பர வித்தியாசாலை விசேடம்

கருவிநூல் பலவற் ருேடு கண்டவர் களிக்கு மாறு
பொருவிலாச் சமய நூலும் போதிக்கும் பொற் பினுலே
மருவிய கல்விச் சாலை வைத்தவர் தமைம தித்தே
யிருமையும் பெறலா மிங்கே யியல்கற் ருரென விதந்தார்.
242

எங்குல குருவா தீன மென்னுங்கோ முத்தி யாதி
தங்குபற் பலவா தீன சந்நிதா னங்கள் சைவம்
பொங்குநல் லொழுக்க மிக்க புகழ்ப்பிர புக்கண் மற்ருே
ரிங்குநன் னடேசர் பாத மிறைஞ்சிட வரும்போ தெல்லாம்.
243

அன்புடன் கல்விச் சாலை யடைந்துபிள் ளைகளை யங்கே
முன்புற நிறுத்தித் தக்க முறைமுறை பரிசோ தித்துப்
பின்புநா வலர்தாம் பெற்ற பேறேபே றென்று பேசி
யின்புறு புத்தகங் களியல் பரி செனவே யீவார். 244

## தலதரிசனமும் நாட்டுக் கோட்டையார் நன்கொடையும்

நாவலர் தரிச னத்தா னுகைக்கா ரோண நாடிப்
போவது புரிந்தா ரங்கே போந்தமை தெரிந்து பூவரம்
மாவதி நாட்டுக் கோட்டை வர்த்தகர் சிலர்கள் வந்து
மேவரப் பேசித் தில்லை வித்தியா சாலைமேன் மேல். 245

நடைபெற வேண்டு மென்று நன்னிதி நல்க வாங்கிக்
கொடையுளங் கொடிருவேட்டக் குடியுற்றுக் கும்பிட்டேத்தி
யடைதிருக் கடவூ ரேகி யங்கண ரருள்பெற் றன்பே
யிடையறுத் தில்லை மூதூ ரெய்தின ரிருந்தா ரிந்நாள்.246

## சிதம்பராலயபூசை சிவாகமவிரோதம்

தில்லைவாழ் கோயிற் பூசை செய்குநர் சிலர்தி ரண்டங்
கெல்லையில் சிவாக மங்க ளியம்புதீக் கையினு லேது
மில்லைமெய்ப் பயனீ தாலே யிதுபெரு திருக்கின் றேமென்
றெல்லைநிந் தித்தா ரொன்று முணர்திலார்க் குணர்
வுண் டாமோ. 247

இன்னுமவ் வால யத்தி லியற்றுறுங் கிரியை யெல்லாந்
துன்னும்வை திகமா மென்றே சொற்றன ரச்சொற்
கேட்டோ
ரென்னுநன் மதிசற் றேனுமிலர் சிலர் மெய்யே யென்றார்
மன்னுசை வப்ப யிர்க்கோர் மழையென வருநா வல்லார்.248

தாமவை முழுதுங் கேட்டுத் தரித்தில ராகிச் சைவ
மாமலர் மலருஞ் சாலை வைப்பினின் மதிவல் லோர்முன்
னேமமார் விதிவி லக்கினி யல்பெலா மெடுத்துக் காட்டிப்
பாமரர் வாய டங்கும் படிபிர சங்கஞ் செய்வார். 249

வைதிகக் கிரியை சொல்லு மறைபொது வான நூலா
முய்திற முத்தி யின்ப முதவுறுது யருந் தீக்கைச்
செய்தியுந் திரிப தார்த்தச் செயலுஞ்சொல் சிவாக மங்கள்
மெய்திகழ் பரார்த்த பூசை விதியுஞ்சொல் சிறப்பு நூலாம்.
250

ஆனதா லவைகள் சொல் லுமருட்சிவ தீக்கை யர்வு
மேனைய தீக்கைக் கெல்லா மேற்றமா மிதுவல் லாம
லூனமாம் பாச மூன்று மோட்டுமிவ் வுயர்ச்சி யோர்ந்து
தேனலர் கமல வாவித் தில்லைச்சிற் றம்ப லத்துள். 251

அருட்சி வசத்தி காணு மந்நட மன்பிற் கண்ட
திருப்பதஞ் சலியா ரிந்தச் சிவாலய கிரியை யெய்தற்
கொருப்படுஞ் சிவாக மத்தா லோங்குபத் ததியொன் றுள்ள
விருப்புடன் செய்தா ரிந்த விளைவு முன் மிகவு ணர்ந்து.252

ஆதியிற் றில்லை வாழந் தணரெலா மன்பு மேற்கொண்
டோதுநற் சிவதீக் கைக ளுற்றுறைந் தனர்க ளாமிப்
போதுவாழ் வோர தின்றிப் பூசித்தல் பொருவி லாவிம்
மீது யரிரண் டுநூற்கும் விரோதமா மென விளம்பி. 253

## சென்னை வாசம்

அதிபிர பலஞா யத்தா லவர்களைக் கண்டித் தந்தப்
பதிசில நாளிருந்தப் பாற்சென்ன பட்டணஞ்சென்
றெதிருமன் பரைநேசித்தங் சிருந்தன ரீது நிற்க
கதிர்புகா வளஞ்சூழ் சோலைக் கருங்குழி நகரில் வைகும் 254

## இராமலிங்கபிள்ளையின் விபரீதப் போக்கு

பேர்பெறு மிராம லிங்க பிள்ளையென் பவர்தாம் பேணுஞ்
சீர்பெறு சிவாநு பூதிச் செல்வரென் றுரைத்துஞ் சித்தத்
தேர்பெற வோதா தாய்ந்தோ ரென்றுமெங் கெங்கு முள்ள
வூர்பெரு மயக்க மெய்த வுணர்த்தினு ரிஃதொன்
றேதான். 255

ஞானசம் பந்த மூர்த்தி நாயனு ராதி நல்லோ
ரானசி வாநு பூதி யடைந்தவ ரருளிச் செய்யத்
தானமை யருட்பா வெல்லாந் தவிர்த்துத்தம் பாக்க டம்மை
யீனமில் விழாக்கா லத்து மிருவகைப் பூசை யில்லும் 256

சந்தியா காலத் துஞ்சில் சனங்களை யோதச் சாற்றி
வந்திட லானுர ப்பால்வாதவூ ரடிகள் வாயா
லுந்திய வாச கத்தோ டுயர்திருக் கோவை யாரை
யந்தினஞ் சபாந டேச ரன்றெழு தியதைப் போல 257

இயம்புதங் கவிக ளெல்லா மெழுதுவ ரெழுதற் கேற்ற
நயம்படு கருவி யேடுநாஞ்செயும் ரசவா தத்தில்
வியன்பெறு பொன்னுற் செய்ய வேண்டும்பின் மிஞ்சுமந்தச்
செயந்தரு பொன்னுற் பார்ப தீபுர மெனப்பேர் செப்பும் 258

ஆலய மொன்று முள்ளே யவையொன்றுங் கட்டி யங்கே
சீலமார் சிதம்ப ரத்திற் றிருநடஞ் செய்வார் தம்மைச்
சாலவந் துயர்நி ருத்தஞ் சகலருந் தரிசித் தேத்த
வேலவே செயச்செய் வேமென் றியம்பின ரிம்மட் டேயோ 259

இற்றனர் யாரு மான்மா வெய்தவு மினிய மைந்தர்
பெற்றிலார் பெறவு மங்கம் பின்னமுற் ருேரப் பின்ன
முற்றில ராக வுஞ்செய் வோந் தண்ணீ ரூற்றித்தீபம்
பற்றி நின்றெரியு மாறு பண்ணின மெனவும் பார்மேல் 260

அரிபிர மாமுன் னுனே ரறிவருந் தம்பி ரானுர்
பரிவொடு நடந்து சென்ன பட்டணத் தெருவிற்பாதி
யிரவினிற் றம்மில் வாயிலினைத்திறப் பித்து மைந்தா
தரமுடன் வாங்கு கென்னத் தமக்கொன்று தந்தா ரென்றும்.
261

தடநிறை வளஞ்சூழ் தில்லைத் தலத்தில்வாழ் சபாநடேச
ருடனிரண் டறக்க லந்த வுயர்வாத வூரர் போலத்
திடமுடன் ருமு மங்ஙன் சேருவ மென்றும் பின்னும்
படர்செய்பல் பயனில் சொல்வாய்ப் பறை பலவடிப்பா ராகி
262

ஊளறு மிந்திர சாலஞ்செய் வோரிவர் தமக்கொப் பாரே
தளர்விறந் திரத்தான் மிக்க சமர்த்தர்தா மென்றுந் தம்மை
வளர்திரு வருட்பிர காச வள்ளலா ரென்றும் வாய்வீண்
குளறியல்பேச லுற்ருர் குறித்திலர் மேற்கோ ளொன்றும் 263

திரமுறு கல்விச் செல்வஞ் சிறுர்க்கரு டியாக ராசப்
பிரபுவாஞ் சிவப்பே றன்பிற் பெற்றநா வலரிப் பெற்றி
புரமெலாம் பரவல் கண்டும் பொறுப்பரோ புலமை மிக்கார்
வரவெதி ரவையி னின்று மதுரவா சகஞ்சொல் வாரால். 264

மறையினு முயர் தேவார மலிதிரு வாசகங்க
ணிறைசிவ கரணம் பெற்று நிகழ்பசு கரண நீங்கு
முறைதெரி நாயன் மாரான் மொழிதரு முதன்மை யாலே
யிறைபயில் கோயி லாதி யெங்குமோ திடற்கா மென்றும். 265

அந்திமா மதியும் பாம்பு மணிமுடிச் சடையெம் மண்ண
றந்திரு வாக்காற் சொல்வே தத்தினுந் தமக்கு நாளு
முந்திய பிரிய மேன்மே லுளவிவை யென்று மைக்கு
முந்திய ரகசி யத்தின் மொழிந்தது முதலாஞ் சான்று. 266

பிறவுமங் கெடுத்துக் காட்டிப் பிள்ளைபாப் பெரிய ரோதாத்
திறமுறச் செய்தா ரிந்தச் செய்தியா வுந்தெ ரிந்தங்
குறவுறு பிள்ளை பாற்கற் றோர்சில ருறுவ தோரா
ரறமுறு மிவரை நிந்தித் தாரவர் பவமெற் றுமோ. 267

**வயது 42**

அந்தநிந் தனையொன் றேனு மருட்சிவ னடிய ராஞர்
தந்தமான் மியத்தோ டேவே தாகம வியல்புஞ் சாற்றி
வந்தன ராத லாஞ வலர்தமை வருத்த வில்லை
யிந்தநா ளாயு ளாறே ழெய்திய திவருக் கிப்பால். 268

**மூன்றும் புத்தகமென்னும் நான்காம் பாலபாடம்**

மேலதாஞ் சைவ மோங்கும் வித்தியா சாலை மேய
பாலர்கள்படிக்க மூன்றும் பாடம்வேண்டுதலாற்பற்பல்
சீலமார் சிவாக மங்கள் செழுமறை சிவ புராண
நூலமைநீதி யெல்லா நுட்பமோர்ந் தொருங்கு நோக்கி. 269

வாக்கிய ரூப மாக வரைந்ததன் முடிவி லெளவை
வாக்கியல் வாக்குண் டாநல் வழியுஞ்சீர் வல்ல கல்வி
தேக்கிய சிவப்ர காசர் செய்தநன் னெறியுஞ் செம்மை
தேக்கிய வுரைக ளோடுந் திகழ்தரச் சேர்த்தச் சிட்டார். 270

**திருவிளையாடற் புராணம், கந்த புராணம் வசன ஆரம்பம்**
**பெரியபுராணம் அச்சிட்டது**

சீர்பெறு வசன மாகத் திருவிளை யாடல் காந்தம்
பேர்பெறு நாயன் மார்கள் பெரியபு ராணம் பின்னு
மேர்பெறச் செய்தங் கச்சி லிட்டுவந் தனரி டுங்காற்
கூர்பெறு கவனஞ் சென்ற கொள்கையால் வருத்தங் கொண்
(டார். 271

**சுகவீனம்**

உடன்மெலி வூண்வெ றுப்போ டுறக்கமின் மையுமுண் டாகக்
கடமை கண்முற்று ருத கருத்தின ராய்ச்சில் காலம்
படர்முழு தகல்வான் சும்மா பயின்றுபின் பழஞ்சி நேகத்
திடமிகு பொன்னுச் சாமித் தேவமன் வேண்டல் செய்ய. 272

**சேதுபுராணம், இலக்கண விளக்கச் சூறுவளி, இலக்கணக் கொத்து, சூத்திர விருத்தி பாயிர விருத்தி, கந்தபுராணம் அச்சிட்டது**

சேதுபு ராணம்பார்த் தச்சியற்றி ஞரதன் மேற்றேர்வா
ரோதுஞா னக்கோ முத்தி யுயர்குரு வாயன் புற்றோர்
பேதுறு வண்ணஞ் செய்சுப் பிரமணியப் பேர்வள்ள
லேதுகட் டளையிட் டாலு மெவர்மறுத் திடுவ ரம்மா. 273

அளியினு லருளிச் செய்ய வறிந் தநாவலரு மங்ங
னெளிது வெனவி ளம்பா விலக்கண விளக்கச் சூறு
வளியிலக் கணக்கொத் தெல்லாம் வல்லவர் மகிழ மேலாச்
தெளியதொல் காப்பி யச்சூத் திரவிருத் தியுஞ்சோ தித்து 274

அச்சினி லிட்டுக் காந்த மதனெடும் வேற நேக
மெச்சிய னூல்க ளெல்லாம் வெவ்வேறு மிகப்ப திப்பித்
திச்சியா நின்றோர்க் கெல்லா மெங்கெங்கும் வெளியேற்பின் றிப்
புச்சிமேல றிஞர் கொள்ளு முயர்சிதம் பரம் வந்துற்றார். 275

**சிதம்பரத்தில் மாரிநோய்ப் பரிகரிப்பு. வயது 44**

ஆயநா ளந்நா டெங்கு மளப்பிலா மாரி பெய்ய
வேயவொவ் வொரு தினத்து மிறந்தன ரெண்ணி லாதார்
பாயவிக் கொடுமை கண்டோர் பயப்படா வண்ணம் பல்கான்
மாயனுல றியா நம்மான் மகிமையை யெடுத்து வாழ்த்தி. 276

பொற்புறப் பிரசங் கித்துப் பொழுது போக்குவரப் போது
நற்புகழ்ப் பிராயந்தானு நாற்பத்து நான்காநம்போ
லற்புறப் படிப்பார் தம்மை யடைந்திடி லரிய கல்வி
வற்புறுத் திப்போ திப்பார் மகிழ்சென்னை வந்தா ரப்பால் 277

### சென்னையிற் சுக்கிரவாரப் பிரசங்கம்

அத்திரு நகரி லுள்ள வருட்சிவ பத்தி மான்கள்
பித்திரித் திடுநற் சைவப் பிரசங்கம் பெரிதுஞ் செய்யு
மித்திறம் பிரார்த்தித்தார்க ளிவருமங் ஙனஞ் செய் திட்டார்
சுத்தியா வருமங் கெய்தச் சுக்கிர வாரந் தோறும். 278

### திருத்தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையில் முதற் பிரசங்கம்

இச்சிவ பத்தி மான்க ளிற்சிலர் திரண்டெ ழுந்து
மெச்சியற் றொண்டை நாட்டில் விளங்குதே வாரம் பெற்ற
நற்சிவ தலங்கள் சேர்சீ ரணந்தவிர் தரநன் ஞளிற்
பொற்சிறு காசு சேர்க்கும் பொருட்டொரு சவை புதுக்கி. 279

பிறந்திறந் துழலுஞ் செய்கை பெருச்சிவ பிரானைப் பாடன்
மறந்திடா நால்வரோ டிவரு மொருவ ராகு மென்னுந்
திறந்திகழ் தருசித் தாந்தந் தெளிந்தநா வலரை வேண்டி
யறந்திறம் பாச்ச பைக்கங் கதிபதி யாக்கிக் கொண்டு. 280

சிவபுண்ணி யத்தின் சீலந் தெளிவுறச் செப்பு கென்ன
விவர்கடாம் வேண்டிக் கொள்ள விதற்கென்ன தடை யொன்றில்லை
வரவ ரெளிதிற்றுமே யறியுமா றனை வருக்கு
முவமையில் பிரசங் கஞ்செய் திடலுற்று ரொப்பிலாதார். 281

### வேறு

தங்கடங்கள் சமயமுமச் சமயத்தின்
றலைவனுமத் தலைவன் றன்னை
யிங்கமரான் மாக்கள்வழி படு
முறையு மிதையந்த விறைவ னேற்றுத்
துங்கமிகு கருணை செயு முறைமையு
மோர்ந் தோர்ந்தபடி சுத்தரானோர்
பங்கமிலா தநுட்டிக்கும் பான்மையுநங்
கடனுகும் பாரின் மீதே. 282

சைவரெனுஞ் சொற்கருத்துச்
சிவனைவழி படுவரென்ற றகுமச் சைவ
ரைவரா மந்தியசை வருங்கூட்டி
யறுவரென லாம வர்க்குண்
மெய்வளரு மாதிசை வரநாதிசைவ ராய்
விளங்கும் விமல மூர்த்தி
தெய்வமுகமைந்தில்வரு முனிவர்
கோத்திரச்சிவ வேதியரா மன்னே. 283

மகாசைவர் வைதிகப்பி ராமணருட்
சிவதீக்கைவாய்ந் தோராவர்,
சகாயமிகு மநுசைவர் மன்னர்
வணிகருளதனைச் சார்ந் தோராவர்
சுகாதாரமுறும வாந்தரசை வரஃதுறு
சூத்திரராஞ் சோர்வு
மிகாதபிரவர சைவராற நூலோமருளு
மதுவிளங்குற் றோரே. 284

அந்தியசை வராவார்க ளொழிந்திடு
மெல்லாச் சாதியார் தம்முள்ளு
முந்தியநற்சிவ தீக்கை பெற்றவர்களே
யிதனுன் முக்கண்மூர்த்தி
யெந்தையை வேதியராதிபுலையரீருகிய
வரெல்லாமேத்திச்
சிந்தை செயற்குரியரெனல் பெறப்பட்ட
தாயினு நாந்தெருங்காலை. 285

வழிபடலாங் கிரியைவருணந்தோறும்
வெவ்வேறு வகையாமுக்கண்
விழியிறைவன் சிவலிங்க முதற்றிருமே
னியுந்தனது மெய்ம்மைத் தொண்ட
ரழிவுருவேடமும் புறத்தேயிடமாகக்
கொண்டு நின்றுமகத்தேயான்மா
வொழிவிலிடமாகக் கொண்டுநின்றருளுஞ்
சிவலிங்க மோரிரண்டாம். 286

ஆன்மார்த்தம் பரார்த்தமெனு மவ்விரண்டின்
முன்னையதாசான் பாலேற்றுத்
தான்மாற்றந் தவறுமற்றன் பொருட்டுப்
பூசிக்தத் தக்கதாகு
நான்மாற்றம் புகலரிய பரார்த்தந் தான்
பிறர் பொருட்டு நயந்துநல்லோர்
மேன்மாற்ற முறைப்படி பூசிப்பதது
கோயிலினுள் விளங்கிலிங்கம். 287

அவ்விலிங்கஞ் சுயம்புகாணந்தை
விகமாரிடமா னுடமென்றைந்தா
மிவ்விலிங்க டிவாசுஞ் சிவபெருமான்
றிருவடியை யெய்து மார்க்கந்
திவ்விய மாஞ்சரியை கிரியையோக
ஞானமெனத் திகழுநான்கா
மௌவியமில் லுருவடிவை நோக்கிச்
செய்தொண்டு சரியையா ன்றே. 288

கிரியையருவுருவடிவை நோக்கியகத்
தும்புறத்துங் கிளருந் தொண்டா
மருவடிவை நோக்கியகத் தொழிலினூற்
செயும்வழி பாடதுவே யோகம்
விரியு மறிவுத் தொழிலாலம் மூன்று
வடிவுக்கும் வேறாய் நிற்கும்
பெரியசச்சி தானந்த வடிவினிடஞ்
செயுந்தொண்டு பிறங்கு ஞானம். 298

எங்கும்வியா பகமாய்நிற்பினுமீலிங்க
முதற்றிருமேனியு மெய்த்தொண்டர்
தங்குதிரு வேடமுமா மிரண்டிடத்துந்
தயிரினெய்போற் றயங்கா நிற்பர்
பொங்குமருட் சிவபெருமான் பிறவிட
மெல்லாம் பாலுட்புக்க நெய்போ
லிங்குவெளிப்படா நிற்பராதலினாற்
சைவசமயிக ளெல்லோரும். 290

இறையவனை யிலிங்கமுஞ் சங்கமமுமா
மிரண்டிடத்து மிறைஞ்ச வேண்டுங்
கறையறுமிம்முறை சரியை முதலிய
நான்மார்க்கருஞ் செய் கடமையாகுந்
தறையின் மலநீங்கிய ஞானிகளுமுந்து
மாமலநோய் தாக்காமைக்கு
முறைமுறைமேன்மேற் சிவானந்தம்
வளர்தற்குமிது முடித்தல் வேண்டும். 291

உறங்குவர்கைப் பொருளவரை அறியாது
நீங்குதல் போலுயர் வொப்பில்லா
வறங்குறிக்கொண் ஞானிகளுக்கிந்நான்குந்
தாமேயங் ககல்வவன்றிக்
கறங்குமனந் தவிருமவர் தாந்தவிப்பாரலர்
தவிர்த்தாற் கணக்கில்கால
மிறங்கு நரகத்தினுள் வீழ்ந்திடுவரென
வுண்மை நூலியம்புமன்றே. 292

ஒருபிரபுபணிகளுளுட் டொழில் செய்வோரீ
புறத்தொழிற்கு முரியராவர்
மருவுபுறத்தொழில் செய்வோருட்
டொழிலுக் குரியரல்லா வாறுபோல
வருவுருவமுரு மருவமுடைய பிரான்
மேற்பணிசெய்வார் கீழுற்றுப்
பெருகு பணிக்குரியர் கீழ்ப்பணிசெய்வோர்
மேற்பணிசெய் பெரியராகார். 293

ஆனதனுற் றிருக்கோயில் கொண்டருளுஞ்
சிவலிங்கவமலன் றன்னை
ஞானமாதிய நான்கு திறத்தாரும்
வழிபட னன்னடக்கையாகுந்
தீனமிலாச் சிவாநுபூதிப் பெருவாழ்
வுடைய சைவாசிரியர் நால்வர்
கூனன் மதிமிலைந்தானைத் தலந்தொறும்
போய்ப்பாடி வணங்குவதுசான்றும். 294

அருண்மயமாஞ் சிவலிங்க வழிபாடு
நான்குபாதத் தாரானு
மருளறவே செயப்படுமாயினுமதவரவர்
கருத்து வகையால் வேறு
மிருளுறுமம் மிடற்றிறைவனருள் புரியு
முறைமையுமவ்வியல்பே யாகுந்
தெருளுறயாமவை யெலாம் விரித்துரைப்
பாமுதற் பாதச் செயலினின்றோர். 295

பகுத்தறிதலில்லாமற் சிவலிங்க
முதலுருவே பரமென்றன்பு
மிகுத்துவழிபடு வரவர்க்கெம்மிறையு
மருள்செய்யும் வெளிப்படாமற்
றொகுத்தவருவப் பொருளாஞ் சிவபெருமாண்
மந்திரத்தாற் றுகளிலாமன்
வகுத்த சிவலிங்க முதலியவுருக்கொண்டா
ரென்று மனத்திற் றேர்ந்து. 296

மந்திரநியாசத்தால் வழிபடுவர் கிரியை
யெனு மார்க்கத்துள்ளோர்
தந்திரயோகம் புரியுநெறிநின்றோர்
யோகிகளிதயங்க ளெங்கு
மிந்திரவியெரி விழியாரிருத்தல் போலிதிலு
மிருந்திடுவ ரென்று
*சந்திர முற்றிலிங்கமதைச் சாத்திய
மந்திரத்திலருச்சனை செய்வாரால். 297

இந்த விருதிறத்தார்க்குஞ் சிவபெருமான்
கடைந்தபோ தெதிரிற்றோன்றுஞ்
செந்தழலுங்கறந்த போதிற் றோன்றும்
பாலும் போற்றி கழுமவ்வம்
மந்திரங்களாலவ்வவர் விரும்புவடி
வாயவவச் சொரூபத்
தந்தமுறவவ்வப்போதே தோன்றிநின்று
தமதருள் செய்வாரே. 298

*சம் - அன்பு

ஞானிகளிம் முத்திறத்தாரும்
போலோரிடமாக நாடிடாமன்
மேனிறையு மன்பின் மாத்திரை
யங்கே வழிபடுவர்மிகவவர்க்குத்
தேனிறையுங் கொன்றைமுடிச் சிவபெருமான்
கன்றை நினைந்திடுந்தாயான
வானின் முலைப்பால் போலங்கவ்வன்
பேதமாய் நின்றருள் செய்வாரே. 299

பகரும் விதியிவதுாக பரஞானமென்னு
மநுபவ ஞானத்தைச்
செகமதிலோரா திருந்துமபரஞானம்
மெனுஞ் சாத்திர ஞானத்தை
நிகழ்குரு சந்நிதியிற் போய்ப்பெறுதுஞ்
சிற்சிலர் தமைஞானிகளென்றேதிப்
புகழ்சரியாதியை யிகழ்ந்து பொங்கு
மெரிவாய்நரகிற் புகுகின்றுரே. 300

தேசியன்ஞானத்தின் மிகுந்திடு
முத்திநெறியுமதைத் தெளிந்து செப்பு
மாசிரியர் தம்முளுயராசிரியரும்
மிலையாலவர் தம்முள்ளும்
பூசியவெண்ணீறியலுஞ் சமய
தேசிகருயர்ந்த போதமுள்ளோர்
மாசிலாவவர் திருவாக்கால் வருந்
தேவார திருவாசகங்கள். 301

அதிதூர்த்தன்றனைப் புகழ்ந்து தன்னுற்
சொல்வாக்கினிலு மதிகந்தன்பாற்
பதி காமக்கிழத்தியர்வாய்த் தோன்றிய
தாக்கினில் விருப்பம் பற்றுமாபோன்
மதிசூடுஞ் சிவபெருமான் றமைப்புகழ்ந்து
தம்மாற் சொன்மறையினுஞ்சீர்த்
துதிபுரியுந் தொண்டர் வாக்கிவையென்று
மிக விருப்பஞ் சுரந்துகொள்வர். 302

ஆதலினற்றிருப்பதிகம் பெற்றசிவ
தலங்களுயர் வவையேதேனு
நோதகவுற்றிடிற்றீர்த்தன் மிகுந்தசிவ
தருமமென நூலின் மேற்கோள்
போதவெடுத்துக் காட்டிப் பூசை
முட்டுப்பாடுற்ருர் புக்கதாகுந்
தீதனைத்துங் காட்டியவை தவிர்ப்பவர்தம்
பெரும்பயனுந் திரட்டிச்சொல்லி. 303

பேரவையில் வந்திருந்தோர் யாவருக்குஞ்
சிவதருமம் பெரிதென்றன்பு
சாரவையமேதுமின்றிப் பிரசங்கஞ்செய்து
முடித்தன ரதன்பின்

**இரண்டாம் பிரசங்கம்**

சீரவையிங்ஙனஞ் சின்னுட் சென்றபின்
கூடவுமதற் கோர்திலகம் போலப்
பாரவையம் புகழ்தரு நாவலரிருந்து
போதித்த படியைச் சொல்வாம். 304

இன்பமதிலே விரும்புந் துன்பமதில்
வெறுப்புமுயிர்க் கியற்கையேனு
மின்பமிது துன்பமிஃதென்றுணர்ந்து
துன்பத்தினெல்லை நீங்கி
யின்பமுறு நெறியிஃதென்றுள்ளபடி
யறிந்ததனையெய்துதற்கு
மின்பமுறு சுதந்திர சத்தியையுடைய
தல்லவஃதிறைவற்கெய்தும். 305

உயிர்பரதந் திரமுடைய திஃதறிந்தெம் பிரான்
வழியி னெழுகி னன்றிச்
செயிருறு துன்பமு மின்பமுந் தெரிந்து
துன்பத் திற்றீர்ந்தின் பத்திற்
பயிலுவ தற்கியலாவா நித்திய மாகிய
பேரின் பந்தான் யாதேற்
றுயிலும் விழிப்புங் கடந்த முத்தியொன்றே
பிறவெலாந் துன்ப மன்றே. 306

பழியிலருட் சிவபெருமான் றனையடைத
லவரைவிதிப் படியன் பாக
வழிபடலவ் வருபாட்டுக் கேதுசிவ
ஞானமிந்த வழிபா டொன்றே
யொழிவின் முத்தி வீட்டுக்கு வாயில்
சிவஞான மேழுறு பகுப்பா
மொழியின் மூன்ருந் தீக்கை பெற்ற பின்பு
சிவஞான முந்து நூலாம். 307

உயர்சைவ சித்தாந்த சாத்திரங்க
ளோதலோ டோது வித் த
லயர்விலவற்றின் பொருளைக் கேட்டல்
கேட்பித்தல் கேட்டதைச் சிந்தித்தல்
செயறெளித றெளிந்த படியே
நிட்டை சேர்தலிந்தச் சிவஞானத்துக்
கியலுறு மேதுக்கள் சிவாகமத் தில்விதித்
திடுஞ்சரி யாதிய மூன்றென்னும். 308

சிவதரும மாமிருதி புகல் யாக
முதலியவை சீ வதன்ம
முவமையி லாயோக மின்றி ஞானமுநற்
கிரியை யின்றி யோகந்தானு
மவமகலுஞ் சரியையின்றிக் கிரியையுங் கை
கூடாவா மஃது நிற்க
தவமலியுஞ் சரியை முதலிய நான்குந்தரும்
பலன்கள் சாற்றக் கேண்மின். 309

ஒளிர் சிவ சாலோக சாமீப
சாரூப சாயுச்சி யங்கண்
மிளிர்மக மாதிய பசுபுண் ணியங்களோ
சுவர்க்கத்தை மிகவு நல்குங்
களியுளங் கொண்டிவைக ளெலா முணர்ந்
துணர்ந்தபடி நடத்தல் கல்வி கேள்வித்
தெளிவு மிகுதியி னன்றிக் கூடாவா
மிதுகூடுஞ் செய்கையாக. 310

பெரிதும் வித்தியா சாலை தாபித்த
லொடு சைவப் பிரசங்கங்க
டெரிதரச் செய்வித்தலு மேமிகச்
சிறந்த புண்ணியமிச் செய்கையாலே
யரியசி வதருமமொடு சிவஞான
மபி விருத்தி யாகுமென்று
விரிவுறுநூன் மேற்கோள்கள் பல காட்டி
யாவருக்கும் விளங்கு வித்தார். 311

பின்னரும் பற்பல வாறு பயனடையச்
சிவதருமப் பெற்றி காட்டி
யென்னரு முட்களிப்புற நற்பிர சங்கஞ்
செய்து முடித்திட்டா ரிப்பான்
மன்னரின் மாசறக் கற்றோர் சிறப்புடைய
ரென்பது நாவலர்பாற் கண்டே
முன்னரு மற்புத மென்று துதிகள்
பேரவை யுளோ ருரைத்துச் சென்றார். 312

## கோயிற் புராண உரை

அப்பாற் சந்தான சாரிய ராகுந்
தில்லைவா ழந்தணர்க்கு
ளொப்பாரு மிலாத முமாபதி சிவாசாரியர்
தம் முண்மை வாக்குத்
தப்பாமற் செய் கோயிற் புராணத்துக்
கினியவுரை தாமே தீட்டி
யெப்பாரும் புகழவச்சிற் பதித்துவெளி
யேற்றினு ரிதற்கு மேலும் 313

## சைவ சமய நெறி உரை
## சேனவரையப் பதிப்பு

அமைதரு சீர்மறை ஞான சம்பந்த
சிவாசாரியார் செய் சைவ
சமயநெறிக் குரைசெய்து பதித்து வெளிப்
படுத்தியபின் றமிழ்வல் லோர்க்கோர்

சிமையமென வோங்கு தொல் காப்பியச்
சேனு வரையஞ் சோதித்தச் சிட்டு
நமைநிகர் வாருந் தஞ்சீர் தெரியவிஞ்
ஞாபனம் பலவு நடாத்தினரே. 314

### சமய வாதம்

இன்னணஞ் சில்பகல் கழிந்த பின்னர்யாழ்ப்
பாணத்துக் கேக வேண்டிச்
சென்னைநகர் விட்டகன்று ஞானநட ராசர்
திருத் தில்லை சேர்ந்தா
ரன்ன பொழு திராமலிங்கபிள்ளை நண்பர்
பலரையுமங் கடுத்து நம்மான்
றன்னருளாற் சமய வாதஞ் செய்து
வெற்றிகொண் டதற்குப் பின்னர். 315

### வேறு

### தல தரிசனமும் பிரசங்கமும்

ஒல்லை சென்று மாயூரமுற்றங் குளாரு வப்ப
வெல்லையில் லருட்சிவ பிரான் மகிமையு மிவர்வாய்த்
தொல்லை யாகம வேதத்தின் மகிமையுந் தொண்டு
வல்லைசெய் பவரெய் துறுபெரும் பயன் வளனும். 316

பிரமன் மான்முதற் றேவர்கள் யாருமெம் பிரான்பால்
வரமநேக முன்பெற்ற காதையும் பலவாறு
தரமுறும் பிரசங்கங்க ளாற்சொலிச் சங்கார்
கரமுளோன் பதியலனென வேதுக்கள் காட்டி. 317

அன்னவன் னுபமன் னியமா முனியருளா
லுன்னருஞ் சிவதீக்கைபெற் றதுமுத லுள்ள
வென்னசான்று மங்கெடுத் தெடுத்தோதின ரெவரு
மின்னவை மறுத்திடப் படாவெனச் சிரத்தேற்றுர். 318

ஏற்றபின் பவர்போய பின்னித் தலமிகந்து
மாற்றருஞ் சிவசமயமே வளர் தருமபுர
மாற்றலாந் திருவிடை மருதூர் பிறையாறு
சாற்றுசீர்மலி காரைக்கா லாதிய தலங்கள். 319

சென்று சென்றுயர் சிவபிரான் றெரிசனஞ் செய்து
நன்றுறும் பிரசங்கமு மியற்றுபு நன்மை
துன்றுமாமறைக் காட்டினை யடைந்தனர் தூயோ
ரென்றுமுள் ளவரெனும் புகழ்பெற் றிடுமிவரே. 320

### யாழ்ப்பாணத்தில் வரவேற்பு

அத்தலத்துள சிவாலய தரும கர்த்தாவாற்
சித்தநட்புடன் வேண்டவோர் பிரசங்கஞ் செய்து
பத்தரிற் சிறந்திட்ட நாவலரும் யாழ்ப்பாணத்
துத்தமச் சிவனடியவ ரெதிர் கொளவுற்றூர். 321

### சைவப்பிரசங்கம்

வாடுறும் பயிர்செழிப்புற மழைபொழி வான்போற்
றேடுபற்பல சனங்களுட் டெளிவுறுந் திறத்தாற்
பாடுறுந்திரி பதார்த்த லக்கணமெலாம் பகர்ந்தங்
கீடுவே றிலார்தம் மடத் திருந்தன ரிப்பால், 322

அங்கண்வாழ் மறையவர்முத லறிவுளோர் யாரு
மெங்கணு வலரிடத்தினிற் புறச்சமயி கண்முன்
றங்கள் பொய்ம்மத மெய்யெனச் சாற்றினர் தடுக்க
விங்கண் யாவரு மிலரிதற் கென்செய்வே மினிமேல் 323

தங்கள் வித்தியா சாலையிலே பலதரமு
மெங்கண் மீதிரங்கிச் சைவப் பிரசங்க மிசைத்தா
னங்கண் மம்மர்நோய் தவிர்ந்துய லாமென நவின்றூர்
மங்களம் பெறுபோ தகரது மன மதித்தார். 324

அன்னதானஞ் செய்வானிடம் பசித்துவந் தடைந்தோ
ரின்னறீரெனச் சொல்லு முன்னவன் றவிர்ந்திடல்போற்
சொன்னபற்பலர்மனத் துயர்கெடச் செவித்துஊப்போய்
மன்னலாஞ் சைவப் பிரசங்க வமுதினை வார்த்தார் 325

### வயசு 47

ஆனதாலிஃ தருந்தினோர் சைவ நூலறிந்த
ஞான மிக்கவ ராயினு ரீழ நன்ஞடு
தான டைந்ததே தவமெனத் தக்கபோ தகர்கருப்
போனவா யுளீரிருபதோ டேழெனப் புகல்வர். 326

### ஆங்கில வித்தியாசாலை

இந்தவாறு சைவப் பிரசங்கமு மியறேர்ந்
தியந்ததந் தமிழ்க்கழகமு நடாத்துநா ளுயர்ச்சி
தந்தவந் நகரங் கிலவித் தியாசாலை
வந்தசைவ மாணவர் சிலர்வந்து நாவலர்பால் 327

ஐயயாந் திருநீறணிந் தேகினு லந்தோ
வெய்ய பாதிரிவெருட்டு கின்ருனென் செய்வேநீர்
செய்யலாவதே தெனிலெமக் கின்னருள் செய்து
மெய்யருச் சைவவங்கில வித்தியா சாலை 328

### கோப்பாயிலும் புலோலியிலும் சைவ வித்தியாசாலை

ஒன்றுதாபிக்க வேண்டுமென் றிரந் திடவுள்ள
நன்று பூரித்த நாவலரங்ஙன நடாத்தற்
கன்றுவேண்டிய முயற்சி செய்தமைத் தனரதன்மேற்
பொன்றுமாறில் கோப்பாயொடு புலோலியாம் புரத்தும்.

### நல்லூர்க் கந்தசாமி கோயிலார் அழைப்பு

தக்க சைவமே விளங்குறும்வித் தியாசாலை
மிக்கநண் பொடுதாபித்து நடாத்து நாண்மேனுட்
டொக்க வின்னருள் புரிநலூர்க் கந்தசுவாமி
புக்கவாலயத் தாரழைத் திடவங்கட் போந்தார். 330

போந்தபின்னரச் சிவாலயஞ் சிவாகமப் பொருத்தந்
தீர்ந்தயாவையுந் தவிர்ந்திடும்படி சொலித் திருத்தி
யாந்தமிழ்ப் பிரசங்கத் தாற்றிர வியமனந்த
மாந்தர்பற் பலர்கொடுவந்து கொடுத்திட வாங்கி 331

செய்யவேண்டிய திருப்பணி யாதிய செய்வித்
துய்யவே யசப்பலியினை யொழித்தன ரொளிர்வே
லையர்பூசனை யாகம விதிப்படி யமைத்து
வையகம் புகழ்சைவ போதகரங்கு வாழ்நாள். 332

**சைவவினாவிடை, இலக்கணச் சுருக்கம்,**
**சிவஞானபோதச் சிற்றுரைப்பதிப்பு**

முயலுமாணவர் தங்களைப் படிப்பித்து முதலுக்
கயலியற் றொகைச்சைவ வினாவிடை யரிய
செயலிலக்கணச் சுருக்கமா தியநன்னூல் செய்து
முயலுறச் சிவஞான போதத்தின் சிற்றுரையும் 333

**சிவராத்திரி புராண பரிசோதனம்**
**வயது 51**

சிவநிசிப் புராணமும் பரிசோதனை செய்தங்
குவமையற்றிட வாழ்வர்தம் வயசைம்பத் தொன்று
மிவரதற் பினல்லூர்க் கந்தசாமி கோயிற்றெற்
கவமகன்ற வீதியிலுள மடத்தினை யடைந்து 334

**நல்லூர்த் தெற்கு வீதியில் இருப்பு, திருவிழாக் காலத்தில்**
**திருக்கூட்டச் சிறப்பு**

அம்மையார் திருமூலசுரந் தளித்த பாலருந்தி
மும்மைவையமு முய்யவே பாடிய முதற்பாச்
செம்மை மாமறைப் பொருளெலாம் யாவருந் தெளிய
நம்மையுங் கதிக்கீர்த்திடு பிரசங்க நவின்று 335

மேற்குறித்த வேற்படை யுடைவிமலனூர் விழவி
லார்க்குமுள்ளன் புவரும்படி துறைசை யாதீனத்
தோர்க்குளே யுயரோதுவார் பலர் வரவுஞற்றி
யேற்குநல் விழாக் கொண்டருள் வீதிகளெங்கும் 336

நீறுகண்டிகை புனைந்த வராகிப் பின்னின்று
தேறுமூவர் தேவாரங்கள் பாடிடச் செய்யுந்
தோறுமற்புத மெய்திவேதிய ரெலாஞ் சுருதி
வேறுவேறு நின்றோதினர் கண்டவர் வியப்ப. 337

இன்னவாஞ் சிவவேடத்தின் பொலிவொடு மெங்கு
மன்னலாந் திருகூட்டத்தின் சிறப்பை நம்வாக்கா
லென்னை சொல்வது ஞானசம்பந்த ரோடெய்தி
முன்னருற்ற வெண்ணிராயிரர் சிறப்பினு முந்தும். 338

**நைடத உரை, திருவிளையாடல், நன்னூல் விருத்தி,**

**சிவபூசா விதி, மூன்றுவது அநுட்டான விதி.**

சிவாகமப்படி திருவிழா முடிந்தபின் சித்தத்
தவாமிகுத்து நைடத மொடு திருவிளையாட
றவாவிருத்தி நன்னூரன் முதலிய திருத்தஞ் செய்
துவாவருட் சிவார்ச்சனைய நுட்டானஞ் செய்யொழுங்கு.

**குருசிஷ்யக் கிரமம், தருப்பணவிதி, போசன விதி, சிராத்த விதி,**

**தமிழ் அகராதி, தமிழ் சம்ஸ்கிருத அகராதி,**

**தமிழ் இங்கிலிஷ் அகராதி எழுதும் முயற்சி.**

திதிசெய்தே சிகன்சீடன்செய் விதிமுறைச் சிறப்பு
விதிதருப்பணம் போசனஞ் சிராத்தஞ் செய்விதியோ
டதிகமார் தமிழ்வட மொழியினி லகராதி
புதிதுதீட்டல் போதித்தலிற் போக்கினர் போழ்து. 340

**புலோலிச் சைவ வித்தியாசாலையிற் பரீட்சை நடத்தியது**

புல்விற்பத்தி யோர்பேரறி வடைந்திடும் புலோலிக்
கல்விச்சாலை மாணுக்கரைச் சோதிக்கக் கருதிச்
சொல்வித்தைக் கடலானவர் சென்றவர் தூய
பல்விற் பன்னரும் பாடினரிவர் புகழ்பரவி. 341

கஞ்சித் தொட்டித் தருமம்

அந்தக்காலத்தின் மழைகுறைந் திட்டமை யானே
யெந்தத்தேச மும்வற்கட மெய்திய திதுகண்
டிந்தத்தேசத்தி லேழைகட் காப்பமென் றெண்ணிச்
சொந்தக்கைப்பொருளாற்கஞ்சிவார்ப்பிக்கச் சொன்னர்.

விரைவிற்பஞ்ச நீக்கிடுதலில் லாமையான் மிக்க
பிரபுக்கட்கிது பேசுவான்பிர சங்கம் பெரிதொன்
றுரவிற்செய் தவரவர் கடந்திடும் பொருளுவந்து
தரவிற்சம்பு வின்னருளெனக்கறி யன்னஞ் சமைத்து 343

**புலோலியில் கண்ணகி வழிபாட்டின் தவறு பேசியது**

வந்தவேழைகள் பசிப்பிணி முழுவது மாற்றி
யெந்தவேளை யுஞ்சீவ காருண்ணிய மியைந்தா
ரிந்தவாறு சின்னாட்செலப் பின்னுமங் கேகி
யந்தமாணவர் தங்களைப் பரீக்கைசெய் தனரால். 344

செய்தபின் பருட்சிவசைவப் பிரசங்கஞ் செய்வார்
பொய் தழைந்திடு புறச்சமயத் தினிற்புக்க
மெய்தவிர்ந்த செட்டிச் சியாங்கண்ணகி மின்னை
யுய்தல்செய்திடு மொருதெய்வ மென வணங்குதலும்

அவட்கிரண்டு பக்கத்திலுஞ் சிவகுமாரரை வைத்
திவட்குநே ரெனப்பூசை செய்திடுதலு மிங்ஙன்
சிவத்துரோ கிகள்பயனடை யாரிவை தீங்கென்
றெவர்க்குங் காட்டுமோர் பிரசங்கமழை பொழிந்திட்
டார். 346

இம்மழைக்கு நேரொரு பெருமழை பொழிந்திட்ட
மைம்மழைக் குலமூலகெலாஞ் செழித்த வம்மழையா
லம்மழைக்கு வாய்திறந்தவன் காணுதற் கரியார்
தம்மழைக்கு மின்னருள் சமீபிக்கவச் சமையம் 347

சுர நோய்

பந்தநீங்கு நாவலர வணகன்றி யாழ்ப்பாணம்
வந்தபின் சுரம்பீடிக்கத் துயர்சில மருவு
மந்தவேல் வையிற்றரி சிரிக்கவந்த வரநேக
ரிந்தநோவடைந் தீரெனத் தமைக்குறித் திரங்க. 348

தெரிந்துஞான நாவலரவர் தமையெலாந் தேற்றிப்
பரிந்து பேசினர்சரீரநில்லா மையைப் பற்றிப்
பிரிந்துபோன தாற்சுரமுஞ் சின்னாளினிற் பின்பு
விரிந்துநீண்ட வேணியன் புகழேவிளை வித்தார். 349

**குருபூசைத் தினத்தில் இறுதிப் பிரசங்கம்**

புனற்றடாகத் தின்ஞானமுண் டவர்குரு பூசைத்
தினத்திலோர் சைவப்பிரசங்கஞ் செய்தனர் திகழ்விற்
பனத்திலோங்கிய சனங்களைப் பார்த்துரை பகர்வார்
மனத்திலே னுங்கைம் மாறுசற்றெனு முருவண்ணம். 350

**வேறு**

உயருநஞ்சமயத் தோரோடும் புறச்சமயத் தோரோ
டயர்பெரும்பகை யெடுத்தேயா றைந்தோடி ரண்டாண்டாக
வியல்சைவ சமயத்துண்மையெங்கெங்கும்போதித்தேனியாண்
மயரறுமெனக்குப் பின்னே வளர்சைவ மறையுமென்று.

பாதிரிமாரெஞ் ஞான்றும் பகர்கின்றாரதனு லென்போற்
போதியாநிற் போர்தம்மைப் பூவில்யான் பொன்றுமுன்ன
நீதிநன்னெறி நின்றேங்க நேடுவீர் நீவிரெல்லா
மோதியவை வைக்கேட்டு முளஞ்சினமுரு துங்கட்கே.

தருமநின்றேங் குஞ்சைவசமய போதனை செய்தக்கோ
ரொருவரும் வராரென் போலவுயரறிவு டையாரென்றிவ்
விருநிலத்துள்ள சைவ ரெவரு மீடேறவந்த
குருவெனுநாவ லோர்தாங் கூறினரன்பு கொண்டு. 353

**சிவபத காலம்**

எனக்குப் பின்சைவமெவ் வாறிருக்குமோ வென்றெண்ணி
மனக்குத்துன் பெய்தவே நாவலரிங்ஙன் வாடுநாளி
லினற்குட்புக்கழுந்த வென்போலி யற்றமிழ் வாணர்யாரு
முனற்குப்போந்தியற்றும்பாவமுதிர்ச்சியின் முடிவினுலோ

புறமதப்பதகர் செய்தபுண்ணியத் தாலோ பூசைத்
திறமுறை சிவாலயத் துட்டிறம்பு நாள்சேர்தலாலோ
வறமுறுசைவ நன்னூலடங்கு நாளடுத் தலாலோ
வுறவுறு மடியார்பத்தி யுருதநாளுறு தலாலோ 355

தொல்லிலக்கணமு மேலாச் சொல்லிலக்கிய முந்தோன்ற
நல்லிலக்குரை யெய்தாத நாள்வரு நவையினுலோ
சீல்லியற்புலவ ரெல்லாஞ் செருக்குநாள் சேர்தலாலோ
புல்லியற்பரும் போதிக்கப் போதுநாள் புகுதலாலோ

பாவினுலெடுத்துச் சொல்லப்படாப் பிறபலவாற் ருலோ
யாவிசோர்வுறு மாருகவ செளக்கியமது கொண்டார்தந்
தாவிலாப் பூசை சைவாசாரியர் தம்மாற் செய்வித்
தோவிலாதைந் தெழுத்து முன்னிநா வியங்கவோதி 357

அருகுநின்ரூேர் தேவாரமாதிய வருட்பா வெல்லா
முருகுமாரூேதச் சொல்லியோதும் போதொளி ருந்தில்லே
முருகுலாங்காச் சூழ்காசி முதற்றல நீறுள்ளன்பு
பெருகுமாற ணிந்துகண்டி பேணுபுபெரிதும் பூண்டு 358

கங்கையினின்றும் வந்தகங்கரத் தாலுட் கொண்டே
யங்கைகள் சிரசிற்கூப்பி யாருயிர்க்கு யிராவுள்ள
செங்கைமான் மழுவார் செய்யதிருவடி களிலேசிந்தை
சங்கையில்லாமல் வைத்துத்தமை யுணர்ந்தவரிற்
சார்ந்தார். 359

பகர்வயசை சம்பத்தாறும் பதினெரு மதியுமான
விகல்பிரமாதி தேளிலிருபத் தொன்ருய தேதி
புகலுறுமக நாட்புக்க புண்ணிய லாலம்போதந்
திகழ்நடராசர் தங்குஞ் சிதபதநீழல் சேர்ந்தார். 360

**வயசு 56 வரு 11 மீ 16 நாள்**

அன்றுசுக் கிரவா ரத்தோ டரியசத் தமியுங்கூடி
யொன்றுறு மிராக்காலத்திலு தித்தநாழிகை யோரீரைந்
தென்றுசொல்லுவர்கண் டோர்க ளின்னநா வல
ரேறிங்ஙன்
பொன்றின ரெனினும்பொன்ரூர் பொன்றலில்
புகழாலென்றும். 361

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

முற்றிற்று.

---

* கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவநிலே
சேர்த்திப் பரசமயஞ் சேதித்துச் — சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

உ

ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்பனில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசையளந்த
பேரூரு மாறு முகநா வலனில்லைப் பின்னிங்குயார்
நீரூரும் வேணியன் மார்க்கத்தைப் போதிக்கு
நீர்மையரே.

— சிவசம்புப் புலவர்.

உ

சிவமயம்

யாழ்ப்பாணத்தில்

[illegible]கும் மாணவர்க்கும்

ஓர் அரிய நிறுவனம்

# ஸ்ரீ குமரன் புத்தகசாலை

(யாழ் - இந்துக்கல்லூரிக்கு அருகில்)

**சிறுகதை, நாவல், சமயப் புத்தகங்கள்**
**பாடப்புத்தகங்கள், உபகரணங்கள்**

சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**மக்கள் திருப்தி** **எங்கள் திருப்தி**
**மாணவர் தேவை** **எங்கள் சேவை**

ஏக விநியோகத்தர் :

**யாழ். / கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு**
**விற்பனைக் கழக வெளியீடுகள்**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தகுந்த
கழிவுண்டு

662, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

செட்டியார் அச்சகம், 432, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.